www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
රූපා 10/00
දිනමුරසු වාරමලර්
ஏப்.30-மே.06,1995
ரூபா 10/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 99



# பிரபா சொன்னது என்ன?

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## புலிகளின் புதிய தந்திரம்



## இந்திய கோர்ணலும் கண்ணீர்விட்ட புலிகளும்!

அரசியல் தொடர்



## அழகி மர்லினும் அமெரிக்க ஜனாதிபதியும்

## கோடம்பாக்கத்தில் பம்பாய் கவர்ச்சி ராணிகள்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## மெய்ப்பிக்கும் நிகழ்வுகள்

அன்புடன் உங்களுக்கு,
வணக்கம்

சித்திரைப் புத்தாண்டுக்கு
மடல் வழியாகவும்
காது மடல் வாயிலாகவும்
வாழ்த்துச் சொன்ன
இனிய அனைவரோடும்
கைகுலுக்கிக் கொள்வதில் மகிழ்ச்சி.

ஒரு வார இடைவெளியின் பின்னர்
மீண்டும் சந்திக்கிறோம்;
இடையிலே வாரம் ஒன்றுதான் - ஆயினும்
முரசுக்கு விடுமுறை என்று
நமக்கெல்லாம்
பிரிவு தருவது முறையா?
எனக்கேட்டு கண்டனக் கடிதங்கள்!
முரசுமீது நீங்கள்
கொண்டுள்ள தீராக் காதல்
மாறாத உற்சாகத்தைக் தருகின்றது.

முரசு இதுவரை வெளியிட்ட
செய்திகள்- மற்றும்
சூழலை கணித்து ஆராய்ந்து
வெளியிட்ட விமர்சனங்கள்
நூற்றுக்கு நூறு வீதம்
பலித்து வருவதை
நாட்டு நடப்புக்கள்
மெய்ப்பித்து வருகின்றன.

எல்லாம் நல்ல படியாகவே
நடந்து கொண்டிருக்கின்றன;
அதோ சமாதானம்
எட்டிப் பார்க்கின்றது - இனிக்
கிட்ட வரும் என்று
சொன்னால்தான்
சமாதான விரும்பிகள் என்று
இங்கே பட்டம் வழங்கப்படுகின்றது.

'சமாதானம்' இனியதுதான்!
அது மக்களுக்கும் பிடித்தமானதுதான்!
மக்களுக்குப் பிடித்தமானவற்றை
செயல் வடிவம் கொடுத்து
உருவாக்கும் முயற்சிகள்
முயற்கொம்பு நிலையில் உள்ளபோது
அதைச் சுட்டிக்காட்டினால்
யாருக்கெல்லாம் கோபம் வருகிறதோ
அவர்கள் மக்களுக்கு
உண்மைகளை மறைக்க முயல்கிறார்கள்.
அல்லது யாருக்காகவோ
ஜால்ரா போடுகிறார்கள்
என்றுதான் பொருள்.

சமாதானம் மலர வேண்டும்
என்பது முரசின் விருப்பம்.
வெளியே என்ன நடக்கிறது
என்பதை மக்களுக்கு தெரிவிக்கும்
செய்திகளின் நம்பகத்தன்மையை
அந்த விருப்பம்
கெடுத்து விடக் கூடாது.

அரசும்-புலிகளும்
என்ன சொல்லுகிறார்கள்,
எப்படி அறிக்கை விடுகிறார்கள்
என்பதை மட்டுமே வைத்துக்கொண்டு
'ஆஹா' என்று போற்றுவதோ
அல்லது தூற்றுவதோ
அரசியல் விமர்சனமல்ல;
அது அரசியல் பிரசாரம்.
அல்லது ஏதோ ஒரு பக்க விரோதம்!

இவ்வாறான போக்குகள்
'சமாதான ஆர்வம்'
'நடுநிலையான நோக்கு'
'சிங்கள மக்களின் பாதுகாப்பு'
'தமிழர்களது நலன் விரும்பல்'
என்று பல்வேறு பெயர்களில் இங்கே
முகம் காட்டி வருகின்றன.

இவற்றிலிருந்து 'முரசு'
மாறுபடும் போது சிலருக்கு
கோபம் வருகிறது.
கையாலாகாத்தனத்தால்
சினமும் வருகிறது
அதற்கு நாம் என்ன செய்வது?

நாட்டு நடப்புக்கள்
முரசின் துல்லியமான கணிப்புகளை
மெய்பித்து வருவதை
வாசகர்கள் அறிந்து
பாராட்டுகிறார்கள்- வரவேற்கிறார்கள்.
அது போதும் முரசுக்கு!

□□

உழைக்கும் மக்களது
போர்க்குணத்தையும் - தமது
உரிமைகளுக்காகப் போராடும்
உரமான உணர்வுகளையும்
உலகுக்கு உரத்துப் பிரகடனம் செய்யும்
உன்னத நாள்
மே 1 ஆம் நாள்

ஒடுக்குமுறைகள் தகர-
உரத்த நியாயங்கள் வெல்ல-
அனைவரும் முயல்வோம் என
மே நாளில் உறுதி கொள்வோம்!

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—


# ஆன்மீகம்

## தொழுகையின் பெறுபேறுகள்

எவர் தொழுகையை அவற்றின் நேரங்களில் பேணுதலாகவும், கவனத்துடனும் நிறைவேற்றி வருகிறாரோ அவரை அல்லாஹ்தஆலா ஒன்பது விஷயங்களால் கண்ணியப் படுத்துகிறான்.

* அல்லாஹ்தஆலா அவரை நேசிக்கின்றான்.
* உடல் நலத்தை அவருக்கு வழங்குகின்றான்.
* வானவர்கள் அவரைப் பாதுகாக்கின்றனர்.
* அவருடைய வீட்டில் பரகத் உண்டாகின்றது.
* அவருடைய முகத்தில் நல்ல அடியார்களுக்குரிய ஒளியை அல்லாஹ் வெளிப்படுத்துகின்றான்.
* அவருடைய இதயத்தை மிருதுவாக்குகிறான்.
* ஸிறாதுல் முஸ்தகீம் பாலத்தை மின்னல் வேகத்தில் கடக்கச் செய்கிறான்.
* நரகத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கிறான்.
* திருக்குர்ஆனில் அவர்களுக்கு எவ்வித அச்சமோ கவலையோ இல்லை என்று கூறப்பட்ட மனிதர்களுக்கு அருகில் சொர்க்கத்தில் இருக்கும் பாக்கியத்தை வழங்குகின்றான்.

தொகுப்பு-ஜொஹரா ஹுஸைன்
தியத்தலாவ.



## இறைவனின் இரக்கம்

எம்வாழ்வில் நாம் நாள் தோறும் துயரங்களை சந்திக்கிறோம். சிறு துன்பம் ஆனாலும் சோர்ந்து விடுகிறோம். ஏன் இறைவா எனக்கு இந்தச் சோதனை? என அழுகிறோம். ஆனால் "மனிதனால் தாங்கக் கூடிய சோதனை தவிர வேறு எதுவும் உங்களுக்கு வந்ததில்லை கடவுளோ நம்பத் தகுந்தவர்; வெல்ல முடியாத சோதனைக்குள்ளாகும்படி உங்களை விட மாட்டார் சோதனை வரும் பொழுது அதை தாங்கிக் கொள்ளும் திறனளித்து அதனின்று தப்பவும் வழி செய்வார்." (1 கொரி 1: 13) மேற்கூறிய வசனத்தை பார்த்த பின் நாம் இனி வாடத் தேவையில்லை. எத்துன்பம் வந்தாலும் அதை தாண்ட அவர் நமக்கு உறுதுணையாக இருப்பார் என நாம் நம்பிக்கையோடு வாழலாம்.

"நாம் படும் வேதனை அற்பமானது, நொடிப்பொழுதே நீடிப்பது" (2 கொரி 5: 17)

இக்கூற்றை ஏற்றுக்கொண்டால் துன்பங்கள் பெரிதாக தோன்றாது. ஏற்படும் துயரத்தை இறைவனின் பாதத்தில் சமர்ப்பித்து விட்டால் நிம்மதி நிச்சயம், நம் மனதில் ஏற்படும். இறைவன் கருணை என்றும் மாறாதது.

ஷ்ராந்தி போ்லின்.

## கவிதைப்போட்டி இல-96

### பரிசுக்குரிய கவிதை

### விதியை எதிர்க்க

எரிபொருளுக்குத் தட்டுப்பாடு
ஏழைக்கில்லை கட்டுப்பாடு
மரிக்கின்ற வயதினிலும்
மகனோடு மிதிவண்டியில்
மாதாவின் பயணம்
யமனோடு போராடத்தான்!

ஸ்ரீபதி ரவீந்தரநாத், நெசவாலை வீதி -அக்கரைப்பற்று-07.

### சுதந்திரப்பாதை

படகு மீது
பயணம் செய்த பாட்டி
சைக்கிள் மீது
பயணம் செய்கிறாரே!
ஓ... சுதந்திரப் பாதை
திறந்து விடப்பட்டதோ?

எம். துரையன்-அக்கரைப்பற்று-08.

### புதிய சேவை

இடைவழியில்
இறங்காமல்,
வரிசையிலே
நிற்காமல்
சோதனைச் சாவடியை
சுகமாய் கடக்கும்,
தனியா(ன்)ர்
மயப்படுத்தப் பட்ட,
முதியோர்
போக்குவரத்துச் சேவை.

பூ. இதயரெத்தினம், ஆரையம்பதி-03.

### அவல நிலை

இது-
பாழ்பட்ட...
யாழ் வீதிகளின்...
அன்றாடக் காட்சியா?

கே. ரவி, அக்கரைப்பற்று-08.

### தீராது

வயிற்றில் சுமந்தவளே
உன்னை
வாழ்க்கை முழுவதும்
சுமந்தாலும்
தீராது கடன்.

ஜீ.மஹாலிங்கம், கொழும்பு-05.

### "மனவருத்தம்"

கூடையிலே அமர்ந்தபடி,
கூதலினால் அம்மையவள்,
வாடுகின்ற நிலை கண்டு
வருந்த மனம் எண்ணுதய்யா.

கே. திரேஷ், லிந்துல்லை.

## கவிதைப் போட்டி இல-99





### தொல்லை

ஓயாத தொல்லை
என்றும் மனதில்
நிம்மதி இல்லை
நீங்குமா இந்த
சோகத் தொல்லை

எம்.எஸ். மர்சூக், தோப்பூர்.

### கவனியுங்கள்

உழைக்கும் மக்கள் சுமக்கும் துயரை இதைவிடச் சிறப்பாய் வெளிப்படுத்த முடியாது! உங்கள் கவிதைகளிலும் வியர்வைக் குலத்தின் உணர்வுகள் தெறிக்கட்டும். தபாலட்டையில் உங்கள் கவிதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 06.05.1995

சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா. 100/=

அனுப்பவேண்டிய முகவரி:

கவிதைப் போட்டி இல: 99
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

### சுகமான சுமை

தான் சுமந்தவன்
தனைச்சுமக்கையில் தாய் மனம்
கனக்கும் சுமையில்
மகன் மனம்
சுமப்பதோ.
சுகமான சுமை.

ஜெயந்தி ஜெய்சங்கர், கொழும்பு-13.

### பாசமும் வேஷமும்

மூடிவைத்து
முன் சுமந்த
தாயன்பை
கூடைவைத்தூ
பின் சுமக்கும்
சேயன்பு.

சுகந்திகா மாலவிதான, அநுராதபுரம்.

### சமாதானம் நாடி

விடிவெள்ளி தேடி
நாமிங்கே நாளும்
மிதிவண்டி மீது
விரைகின்றோம்
சமாதானம் நாடி.

தெ. லோஜனா, கொழும்பு-15.

### எரிபொருள் தடை

எரி பொருள் தடையால்
வந்த
கூரையில்லாத
கூடை வாகனமா?

வி. அனித்தா, அக்கரைப்பற்று-08.

### விதி

உதிரம் தந்து
உதரம் வைத்தவள்
நகரம் பார்த்து
நகர்ந்து போகிறாள்.

சுரேஷ் நாகலிங்கம்,
கோட்டைக்கல்லாறு-01

### வழி காட்டும் வண்டி

வாகன வறட்சியால்
வாடும் வடக்கில்
வரலாற்று வண்டி
வழிகாட்டுகிறது.

எஸ்.கோடீஸ்வரன், பொகவந்தலாவ.

### அம்புலன்ஸ்

போர்புரியும் காலத்தில்
பேரூந்து இல்லையென
"ஆஸ்பத்திரிக்கு" கொண்டு செல்ல
ஆக்கிக் கொண்ட ஒரு
அருமையான 'அம்புலன்ஸ்'

சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### ஏதடா பதட்டநிலை?

உன்னைப் போல் பிள்ளை
உலகத்தில் பிறந்து விட்டால்
பாரினில் ஏதடா பதட்டநிலை?

நஸபியா பஹர்தீன்-கொத்தாந்தீவு.

## வாசகர்சாலை

அரசியல் கருத்துக்கள்—அலசல்கள் அபாரம். 'முரசு' எப்போது வரும் என்று நாம் காத்திருப்பதற்கு ஏற்ற திருப்தியான செய்திகள். வெளி நாடொன்றில் இருந்து நம் நாட்டு நிலவரத்தை அக்குவேறு ஆணிவேறாக அறிவதில் உள்ள சந்தோசம் இருக்கிறதே அது தனிச்சுகம். 'முரசுக்கு' நன்றி.

பா. ஆதவன்-பிரான்ஸ்

பல நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட இனிய முரசே
நீ தாங்கி வரும் அனைத்து விடயங்களும் வெகு ஜோர் உன்னில் மலர்ந்துள்ள 'தாய்'
பல புதுமைகளை ஏற்படுத்தி வருகின்றாள்
வாழ்க நீ! வளர்க உன் சேவை!!

ஸபீனா ஹுஸைன்-சாய்ந்தமருது

எக்ஸ்ரே ரிப்போட்டைப் பார்த்தால் புலிகளுக்கு மட்டும்தான் ஆட்சி செய்யத் தெரியும் என்பது போல் இருக்கிறது ஏன் நாரதரே எமது அரசியல் வாதிகள் அத்தனை மோசமானவர்களா?

நொச்சிமுல்லை -பர்சான்

தித்திக்கும் தீஞ்சுவைகளை எமக்கு அள்ளித் தருகின்ற தினமுரசே! உன் ஆக்கங்கள் அனைத்தும் அறிவுக்கு விருந்தாய் அமைவதோடு மங்கையர் களாகிய எமக்கு 'லேடீஸ் ஸ்பெசல்' ஓர் உற்ற நண்பியாக எம் இல்லங்களில் தவழ்கிறது. பாராட்டுக்கள் முரசுக்கு!

செல்வி நிஹாரா ஜுனைதீன், -தெல்தோட்டை.

எழுதியதெல்லாம் வீர எழுத்து!
கேட்பதெல்லாம் வாழ்த்துச்சொல்லு
தினமுரசே!
போட்டி என்ன எட்டி நில்லு!
தூற்றுவோரை விட்டுத்தள்ளு
தினமுரசே!
கொட்டு கொட்டு முரசு
கொட்டு! துணிவுடன் இனி!

ஏ. சீ. சாதிக்கா, கல்பிட்டிய.

முரசே,
நீ வாரா வாரம் பல புதிய சுவையான தகவல்களைக் கொண்டு உன் ரசிகர்களுக்கு விருந்தளிக்கிறாய். தினம் தினம் தகவல்களை ஒன்றாக தொகுத்து வாரமொருமுறை நீ காட்சி தருவதால்தான் நீ "தினமுரசு" என பெயர்பெற்றாயோ! உன்னை வாழ்த்திக் கொண்டேயிருக்கும்

ராதா ரவி, பழனி-பண்டாரவளை

திக்கெட்டும் சுடர்விட்டு பிரகாசிக்கும் என்னிதய முரசே
நீ சுமந்துவரும் அனைத்து ஆக்கங்களும் தேனிலும் இனிமை. இனிமை- இளமை- புதுமை! ரசிகனின் இலக்கியநயம், க்ரைம் நியூஸ் ஏ வண்! இளங்கவிஞர் களின் கவிச்சங்கமம் -தேன் கிண்ணம் தித்திக்கின்றது. சிங்காரமான சினி விசிட், ஸ்போட்ஸ் நியூஸ், அரசியல் தொடர் அற்புதம். அதிரடி ஜயாத்துரை அற்புமானய் இறுதி க(தை)விதை தொகுக்கின்றார். பாராட்டுக்கள்

உக்குவளையூர்-பிரசாந்த் பிரியா அனுர்

அபிமான முரசுக்கு,
நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் வெகு பிரமாதம். உன்னை எப்படி பாராட்டுவதென்றே புரியவில்லை. என்னை மிகவும் கவர்ந்த அம்சம் சிறுகதைகள். இந்திய சஞ்சிகைகளில் இடம் பெறும் சிறுகதைகளோடு போட்டிபோடும் வகையில் அமைந்து வருகிறது நமது சிறுகதைகளும். இதனையிட்டு மிகவும் பெருமை யடைகிறது எனது மனம். இலை மறைகாயாக இருந்த அனேக கவிஞர் களையும் புதிய கதாசிரியர்களையும் அறிமுகப்படுத்திய பெருமை தின முரசையே சாரும்.

திருமதி தேவி மகேஸ்வரன்- டிக்கோயா.

கடல் கடந்தாலும்
நாம் தாயகத்தை விட்டு பிரிந்தாலும் உன்னைப்பிரியவில்லையே! எங்கள் உள்ளங்களில் பிரகாசிக்கும் அன்பு முரசே உன் சேவை என்றும் தொடர கடலுக்கு அப்பால் இருந்து மனமார வாழ்த்துகிறோம்.

பவுசியா, பரீதா, சோட்டி, பேபி ரம்ஜான், நிஸாயா, சாஜிதா, -குவைட்.




தமிழுக்கும் அமுதென்று பெயர், அந்தத் தமிழை அமுதமாக, இனிமையாக சொற்சுவை, பொருட்சுவை அனைத்தும் சேர்த்து தமிழ் நெஞ்சங்களில் ஒலிப்பது தமிழ் முரசு! அதுதான் தினமுரசு!

வி. ரவிச்சந்திரன்-
முறக்கொட்டாஞ்சேனை

அன்பான தினமுரசே
பல்லாயிரம் மைல்கள் தாண்டி வந்தாலும் எம்மை எம்நாட்டிற்கு அழைத்துச் செல்கின்றன உன் செய்திகள் ஒவ்வொன்றும். அற்புதனின் அரசியல் தொடரை யார் முதலில் படிப்பது என நண்பர்கள் நாம் முண்டிக் கொள்வதும் நாரதரின் எக்ஸ்ரே ரிப்போட் பற்றி விவாதிப்பது மாக எம்மை கலகலப படைய செய்கிறாய். தாய் புத்தகத்தை படிப்பதற்கு நாம் செய்யாத முயற்சி இல்லை. ஆனால் இப்போ தாயை எம் கரங்களிலே ஒவ்வோர் ஞாயிறும் தவழவிடும் உன்பணி மகத்தானது. வாழ்க உன் பணி!

பாலமுரளி கிருஸ்ணா, பாலேந்திரா, குமார் -சுவிஸ்

சினிவிசிட் தொடர்ந்து தரும் பிரமாண்டம் சூப்பர்! எங்களை என்ன செய்ய உத்தேசம்? தாங்கமுடியவில்லை.

மு. யோகேஸ், கண்டி.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சர்வதேச கண்டனங்களைத் தவிர்க்க புலிகள் முயற்சி!

# பாரிஸ் மாநாட்டு பிரதிநிதிகளிடமும் புலிகள் பிரசாரம்?

## முதற் தடவையாக பிரபா வெளியிட்டுள்ள கண்டனம்

ஏப்ரல் 19ம் திகதிவரை தாம் விதித்த 'காலக்கெடு'வின் அடிப்படையில் புலிகள் அமைப்பினர் மீண்டும் போரை ஆரம்பித்தனர். மோதல் தவிர்ப்பை புலிகள் முறித்துக்கொண்டது தொடர்பாக சர்வதேச கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுவருகின்றன. அதனை கருத்தில் கொண்டு புலிகளது சர்வதேச தலைமைச் செயலகம் ஊடாக தீவிர பிரசார நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன.

### ஆழ்ந்த கவலை

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளை சர்வதேச சமூகம் ஆழ்ந்து கவனித்து வந்தது.

இந்நிலையில் ஏப்ரல் 19ம் திகதி புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தமை சர்வதேச சமூகத்தின் மத்தியில் பலத்த கண்டனங்களைத் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்கா, கனடா, பங்களாதேஷ் உட்பட பல நாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் தமது கவலையையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளன.

இந்தியா மட்டும் உடனடியாக எவ்வித கருத்தையும் வெளிப்படையாக தெரிவிக்கவில்லை. இந்தியா கருத்துத்தெரிவிக்க தாமதித்தமையானது, தற்போதைய சூழ்நிலையானது இந்தியாவால் ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் எனக் கருதமுடிகிறது. அதனால்தான் இந்தியா அதிர்ச்சி தெரிவிக்கவில்லை என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

### புலிகளுக்கு நிர்ப்பந்தம்

இதே வேளை சர்வதேச கண்டனங்கள் குறித்து புலிகளின் சர்வதேச கிளைகள் யோசித்து வருகின்றன.

இலங்கை அரசுக்கு சாதகமான சர்வதேச அபிப்பிராயத்தை தடுப்பதற்கான வழிவகைகள் குறித்து அவை ஆராய்ந்து வருகின்றன.

இதன் முதல் கட்டமாக 23.4.95 அன்று இலண்டனில் உள்ள புலிகளது சர்வதேச தலைமையகத்தால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கை பாரிசிலுள்ள புலிகளது பிரமுகர் திரு.லோறன்ஸ் திலகரால் தயாரிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

### ராஜதந்திர அறிக்கை

சமாதான முயற்சிகளுக்கு புலிகள்

(அரசியல் நிருபர்)

தயார். சமாதானத்தை முன்னெடுக்கும் பொறுப்பு அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதே அந்த அறிக்கையின் சாராம்சமாகும்.

பந்தை அரசின் தரப்புக்கு அடித்து விடும் ராஜதந்திர அறிக்கை யாக இலண்டன் அறிக்கை அமைந்துள்ளது என்று அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

ஏப்ரல் 19ம் திகதி கடற்கரும் புலிகளது தாக்குதலை அடுத்து பாரிசில் இருந்து லோறன்ஸ் திலகர் கருத்துத் தெரிவிக்கும் போது "அது ஒரு அடையாளத் தாக்குதல்" என்று தெரிவித்திருந்தார்.

லோறன்ஸ் திலகர் பாரிசில் அவ்வாறு தெரிவித்த பின்னரும் கிழக்கில் புலிகளது அதிரடித் தாக்குதல்கள் தொடர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பாரிசில் லோறன்ஸ் திலகர் தெரிவித்த கருத்து கொழும்பு பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன. யாழ்ப்பாணத்தில் 'புலிகளின் குரல்' வானொலி திலகரின் கருத்தை ஒலிபரப்பவில்லை.

புலிகளின் கருத்தை அறிய வேண்டுமானால் யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளது தலைமையோடுதான் பேசவேண்டும். என்று புலிகளது ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் அரசு-புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பித்த பின்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை சர்வதேச ரீதியாக அரசின் பிரசாரங்களை முறியடிக்க தமது சர்வதேச கிளைகளுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளது தலைமையகம் பச்சைக் கொடி காட்டி இருப்பதாகவே தெரிகிறது.

### பாரிஸ் மாநாட்டில்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது பிரதிநிதிகள் பாரிஸ் நகரில் ஒன்று கூடும்போது அவர்களிடம் புலிகளது சர்வதேச தலைமையக அறிக்கையைக் கையளிக்க புலிகளது பாரிஸ் கிளை முயற்சி யெடுத்துள்ளது.

இதே வேளை அமெரிக்காவில் சமீபத்தில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பு தொடர்பாக புலிகளது தலைவர் பிரபாகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ நடைபெற்ற குண்டுவெடிப்பு தொடர்பாக புலிகள் கண்டனம் தெரிவித்திருப்பது இதுவே முதற் தடவையாகும்.

## வடக்கில் மோதல்-மக்கள் இடம் பெயர்வு!

(வவுனியா)

மோதல் தவிர்ப்பு முறிந்ததையடுத்து யாழ் குடாநாட்டில் உள்ள பாதுகாப்புப் படையினர் முன்னேறிச் செல்லும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

பலாலி இராணுவத் தளத்திலிருந்து அச்சுவேலியை நோக்கி முன்னேறிய இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

படையினருக்கு உதவியாக புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக புலிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

படை முகாம்களில் இருந்து எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெறுவதாகவும், வலிகாமம் பகுதியில் இருந்து பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படை விமானங்கள் யாழ் குடாநாட்டு வான்பரப்பில் அடிக்கடி தோன்றிச் செல்கின்றன.

ஆறு மாதத்தின் பின்னர் யாழ் குடாநாட்டு மக்கள் மீண்டும் வான்நோக்கிப் பார்க்கத் தொடங்கியுள்ளனர்.

24.03.95 அன்று அச்சுவேலி சிவன் கோவில் பகுதியில் விமானத்தில் இருந்து 50 கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. அச்சுவேலி வடக்குப் பகுதியில் ஒரு வீடு சேதமானது.

அளவெட்டிப் பகுதியிலும் குண்டு வீச்சு விமானங்கள் தாளப் பறந்தன, தாக்குதல் நடத்தவில்லை.

இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக பண்டத்தரிப்பில் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 23.04.95 அன்று வல்வெட்டித்துறைக் கடலில் கடற்படை தாக்கியதில் மூவர் உயிரிழந்தனர். இறந்த மூவரும் மீனவர்கள் என்று புலிகள் கூறுகின்றனர்.

## கேலிக்குள்ளான ஆயர் கென்னத்!

நான்காம் கட்ட பேச்சுக்காக அரசு அனுப்பிவைத்த தூதுக்குழுவை புலிகள் 'கலப்படக்குழு' என்று வர்ணித்திருந்தனர்.

ஆயர் கென்னத் பெர்னாண்டோ, டாக்டர் ஜெயதேவ உயன்கொட ஆகியோர் அரச தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்ததை கேலி செய்தே புலிகள் அவ்வாறு தெரிவித்தனர்.

கடந்த 10ம் திகதி 4ம் கட்ட பேச்சுக்காக சென்றுவந்த தூதுக்குழுவே புலிகளது கடும் விமர்சனத்துக்கு உள்ளானது.

ஆயர் கென்னத் பெர்னாண்டோ அரசாங்கத்தை நியாயப்படுத்தி பேச்சுவார்த்தையில் கருத்து தெரிவித்தமை குறித்தும் புலிகள் விமர்சித்திருந்தனர்.

## புலிகளின் புதிய கடற்படை பிரிவு!

## யாழில் மீண்டும் போர் காலச் சூழல்

(வர்மா)

அஞ்சலிக் கூட்டங்கள், வீரவணக்கம் செலுத்தும் காட்சிகள், எழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பு போன்றவை யாழ்ப்பாணத்தில் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

திருமலையில் ஏப்ரல் 19 அன்று தற்கொலைத்தாக்குதல் நடத்திய நான்கு புலிகளது உருவப்படங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

நான்கு புலிகளதும் உருவப்படங்களை தாங்கிய ஊர்வலங்களும் யாழ் குடாநாட்டின் பலபாகங்களில் நடைபெற்றன.

நான்கு புலிகளதும் நினைவாக பாடல்கள், அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள் புலிகள் அமைப்பினரால் வெளியிடப் பட்டுள்ளன.

புலிகளது கடற்புலிகள் அமைப்பில் புதிய பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'நீரடி மீட்புப் பிரிவு' என்று தமது புதிய பிரிவுக்கு புலிகள் பெயரிட்டுள்ளனர்.

திருமலையில் கடற்படை கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் நீரடி மீட்புப் பிரிவைச் சேர்ந்த கடற் கரும்புலிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீருக்கடியில் நீண்ட தூரம் நீந்திச் சென்று தாக்குதல் நடத்துவதற்காகவே இப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

## கிழக்கு தாக்குதல்-புலிகளது மேஜர் பலி

## கைப்பற்றிய ஆயுதங்கள் பற்றித் தகவல்

கடந்த 21.4.95 அன்று கிழக்கில் கட்டுமுறிப்புக்குளம் இராணுவ முகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 14 புலிகள் பலியானார்கள்.

பலியானவர்களில் புலிகளது கிழக்கு மாகாணத் தலைவர்களில் ஒருவரான மேஜர் அச்சுதனும் ஒருவர். மேலும் லெப்ரினன்ட் தரத்தில் உள்ள நான்கு பேர், இரண்டாம் லெப்ரினன்ட் தரத்தில் உள்ள இரண்டுபேர் ஆகியோரும் பலியான புலிகளில் அடங்குவர்.

இராணுவ முகாம் தாக்குதலில் கைப்பற்றிய ஆயுதங்கள் தொடர்பாக புலிகள் ஒரு பட்டியல் வெளியிட்டுள்ளனர்.

கனரக இயந்திரத் துப்பாக்கிகள்-2, அதற்கான தாங்கிகள்-2, ஏ.கே.எம்.எம்.ஜி துப்பாக்கி-1, ஏ.கே.எம்.எம்.ஜி (றம் மகசீன் வகை) துப்பாக்கிகள்-4, இங்சி 5 ரக துப்பாக்ககிகள்-2, மகசீன்-1, சைலன்சர்-2, ஏ.56 துப்பாக்கிகள்-12, மகசீன்-56, ஏ.56 பட் ரக துப்பாக்கிகள்-2, ஏ.81 ரக துப்பாக்கிகள்-2, மகசீன் 7, பிறவுனி பிஸ்ரல்-1, கே.81 ரக மோட்டார் செல்-71, கே-81 ரக மோட்டார் ஸ்கோப்-1, 40.எம்.எம்.பிஸ்ரல்-1, 60-எம்.எம். மோட்டார்-2,

கண்ணிவெடி வகை-11, 60 எம்.எம். ஷெல்-21, இராணுவ சப்பாத்துக்கள்-28 சோடி, ஜெனறேற்றர்-1 போன்றவை உட்பட பல இராணுவ தளபாடங்களை கைப்பற்றியதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

## தரம் குறைக்கப்பட்ட சேமிப்பு வங்கி

## கவலை தெரிவிக்கிறது வங்கி நிர்வாகம்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பில் கடந்த 17 ஆண்டுகளுக்கு மேலாக 2ம் தர வங்கியாக இயங்கி வந்த தேசிய சேமிப்பு வங்கி 3ம் தரத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது. இது பற்றிய அறிவித்தல் தேசிய சேமிப்பு வங்கி தலைமைக் காரியாலயத்திலிருந்து வந்திருப்பதாக வங்கி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதே வேளை அண்மையில் திறக்கப்பட்ட நாட்டின் வேறு பகுதிகளிலுள்ள சில இதே வங்கிக் கிளைகள் தரம் 3ல் இருந்து 2ம் தரத்திற்கு உயர்த்தப்பட்டிருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்ததுடன், இத்தரக் குறைப்பு நடவடிக்கையால் இக்கிளையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தவும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் கணனிப் படுத்தல் நடைபெறாதிருப்பதற்கும் வழி செய்துவிடும் என்றும் அவ்வதிகாரி மேலும் கவலை தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் முன்னோடியான இவ்வங்கி இற்றைவரை ஒரு நிரந்தரக் கட்டிடமில்லாது பல இடங்களில் மாறி மாறி வாடகைக் கட்டிடங்களிலேயே இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இரு தரப்பையும் சமாளிக்கும் கூட்டணி!

## கட்சி ஒன்று - கருத்துக்கள் வேறு

புலிகளோடு சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற நிபந்தனையோடுதான் தாம் அரசுக்கு ஆதரவு வழங்கி வருதாக மட்டக்களப்பு மாவட்ட பா.உ. திரு. ஜோசப் பரராஜசிங்கம் முன்னர் கூறியிருந்தார்.

தற்போது புலிகள் போரை ஆரம்பித்துள்ளனர். படையினரும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். இந்த நிலையில் திரு.ஜோசப் பரராஜசிங்கம் பா.உ. என்ன முடிவெடுக்கப் போகிறார் என்பதை அரசியல் வட்டாரங்கள் நோக்கி வருகின்றன.

இதே வேளை தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை ,அரசையும் புலிகளையும் பகைத்துக் கொள்ளாத விதத்தில் தனது எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

புலிகளோடு பேச வேண்டும் என்று பத்திரிகைகள் மூலமாக அறிக்கை விடுவது, பாராளுமன்றத்தில் அரசை ஆதரிப்பது என்று கூட்டணியின் நடவடிக்கைகள் அமையும் என்று நம்பப்படுகிறது.

திருகோணமலை மாவட்ட பா.உ. திரு.தங்கத்துரை விடுத்த அறிக்கையொன்றில் பிரபாகரனுக்கு ஜனாதிபதி எழுதிய கடிதம் குறித்துப் பாராட்டியிருந்தார்.

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு.சம்பந்தன் தெரிவித்த கருத்து புலிகளைப் பாராட்டுவதாக அமைந்திருந்தது.

## "போருக்கு மத்தியில் பாரிஸ் விஜயம் ஏன்?" புலிகள் அதிருப்தி!

(நமது நிருபர்)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது கூட்டத்தில் கலந்துகொள்ள ஜனாதிபதி சென்றதைப் புலிகள் கண்டித்துள்ளனர்.

இது குறித்து புலிகளது செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது,

"வடக்கு-கிழக்கில் போர் மூண்டுள்ள நிலையிலும் சிறீலங்கா ஜனாதிபதியும் குழுவினரும் பாரிஸ் செல்லுகின்றனர்.

வடக்கு-கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கை செய்யப் போவதாகக் கூறிப் பெருந்தொகையான நிதி உதவியைப் பெறுவதே சிறீலங்கா ஜனாதிபதியின் நோக்கமாகும்."

என்று புலிகளது செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 19ம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய சூழல் காரணமாக ஜனாதிபதி பாரிஸ் செல்ல மாட்டார் என்று புலிகள் நம்பியதாகத் தெரிகிறது.

ஜனாதிபதியின் பாரிஸ் விஜயம் இரத்தாகக் கூடும் என்று கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அச் செய்தியை யாழ்ப்பாணத்தில் புலிகள் முக்கியத்துவமளித்து வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## "அனாவசியக் கைதுகள் வேண்டாம்."

## பி.பாதுகாப்பு அடைச்சரிடம் டக்ளஸ் தேவானந்தா

பொலிஸ் மற்றும் படையினரின் சோதனை நடவடிக்கைகளின் போது பெண் பொலிசாரும் கடமையில் இருக்க வேண்டும். கொழும்பில் சில பகுதிகளில் தமிழ் பெண்கள் இரவோடு இரவாக விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும், பெண் பொலிசார் யாரும் அந்த நேரத்தில் கடமையில் இருக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக உடன் கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அனாவசியக் கைதுகள் மற்றும் குற்ற மற்றவர்களது மனங்களை புண்படுத்தும் நடவடிக்கைகள் தவிர்க்கப்படவேண்டும். இவ்வாறு ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# பரீட்சை வினாத்தாளில் கெட்ட வார்த்தை

## பொறுப்பானவர்கள் உடன் தண்டிக்கப்படுவார்களா?

### மலையக தமிழ் மாணவர்கள் படும் பாடு

மலையக தமிழ் மக்களது கல்வி வளர்ச்சி பின்தங்கியுள்ள நிலைபற்றி பலரும் கவலை கொண்டுள்ளனர்.

அரசியல்வாதிகளும் மேடைகளில் நீண்ட காலமாக பேசி வருகிறார்கள்.

அதேசமயம் மலையக தமிழ் மாணவர்களது கல்வியில் அக்கறையற்ற ஆசிரியர்கள் தொடர்பாக யாரும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

கந்தப்பளை நு/மெதடிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தின் தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற பாடத்திற்கான பரீட்சை வினாத்தாள் நம் பார்வைக்கு வந்தது.

ஆண்டு 11ற்கான அந்தப் பரீட்சை வினாத்தாள் மலையக தமிழ் மாணவர்களை படு குழியில் தள்ளும் பொறுப்பற்ற சில ஆசிரியர்களது நடவடிக்கைக்கு ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.

குறிப்பிட்ட வினாத்தாளில் சொற் பிழைகள், பொருட்பிழைகள் நிறைந்து கிடக்கின்றன.

ஒரு சில சொற்கள் என்றால் அவசரம், கவனத்திற்கு தப்பிவிட்டது என்று கருதலாம். ஆனால் தவறுகள் ஒவ்வொரு கேள்வியிலும் நிறைந்து கிடக்கின்றன. 'செய்யுள்' என்ற வார்த்தை வரும் இடங்களில் எல்லாம் செய்யுள் என்றே இடம் பெற்றுள்ளது.

இவை அனைத்தையும் விட பஸ் சேவை என்பது 'பஸ் வேசை' என்று கெட்ட வார்த்தையாக மாறியிருக்கிறது.

**"உமது பிரதேசத்தில் சீறற்ற பஸ் வேசையால் மக்கள் அடையும் கஸ்டங்கள் பற்றி பிரதேச மக்கள் மய சேவை முகாமையாளருக்கு ஒரு கடிதம்......"**

இவ்வாறு இடம் பெற்றுள்ளது அந்த வாசகம்.

அரசியல் தலையீடுகளால் ஏற்படும் தகுதியற்ற ஆசிரிய நியமனங்கள்தான் இந்த தவறுகளுக்குக் காரணமா?

மத்திய மாகாண கல்வி அமைச்சர் மேற்கண்ட வினாத்தாளை தயாரித்தவர்கள் மீது எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன?

மலையகத்தில் ஆசிரியர் பற்றாக் குறையைத் தீர்க்க போராடும் போது, கல்வி பற்றாக்குறையான ஆசிரியர்களை தக்க நடவடிக்கைக்கு உள்ளாக்குவதும் முக்கிய மல்லவா? செய்வார்களா?

# மன்னார் நிலவரம்

(மன்னார் நிருபர்)

**வீடமைப்புத் திட்டம்**

தொகுதிக்கு 100 வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்திலும் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கென மன்னார்-தலை மன்னார் வீதியிலுள்ள 2ஆம் கட்டை என்னும் இடம் தெரிவு செய்யப் பட்டுள்ளது. வீடுகளை அமைக்கும் பணியினை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மன்னார் மாவட்ட அலுவலகம் மேற்கொள்ளவுள்ளதாக மாவட்ட முகாமையாளர் திரு.த.சிவநாதன் தெரிவித் துள்ளார்.

**கடலட்டை பிடிப்பு**

மன்னார்ப் பகுதியில் பகல் நேரக் கடல் வலயத் தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது பெருமளவில் கடலட்டைகளும் சங்குகளும் பிடிக்கப்படுகின்றன.

**சாக்லேட், ஆபிஸ், கலெக்டர் மலிவு**

தமிழகத்திலிருந்து அண்மையில் தாயகம் திரும்பியவர்களில் மன்னார்த் தீவில் தங்கியுள்ளோர் அவர்களது தேவையின் நிமித்தம் மன்னார் நகருக்கு வருகின்றனர். கடைகளுக்குச் செல்லும் இவர்கள் சொக்லேட் என்பதற்காக சாக்லேட் என்று கேட்டும், அலுவலகத்திற்கு ஆபிஸ் என்றும், உ.அ.அதிபர் என்பதற்கு "கலக்டர் ஆபிஸ் எங்க சார் இருக்கு" என்று கேட்டும் கடைக்காரர்களின் மூச்சை திணறவைக்கின்றனர்-தமிழ் நாட்டு பாதிப்பு!

**சீர்கெட்ட கப்பற் பயணம்**

மன்னாருக்கும், கற்பிட்டிக்குமிடையில் சேவையிலீடுபடும் கப்பலுக்கு நீரை விட மணல் மீது அலாதிப்பிரியம். இதனால் தான் என்னவோ இக்கப்பல் அடிக்கடி தரையை கொஞ்சுகின்றது. இதனால் பயணத்தில் பல மணி நேரம் தாமதம். இதன் மூலம் கப்பலிலிருந்து அவதிப்படுவது பயணிகளே! "கப்பலே இனியாவது தரையைக் கொஞ்சாதே"

**கொள்ளை இலாபம்**

மன்னார் நகரிலுள்ள மரக்கறிக் கடைக்காரர்கள் தங்களது பொருளுக்கு இருமடங்கு இலாபம் வைத்தே விற்பனை செய்கின்றனர். 30 ரூபாவிற்கு வாங்கும் தக்காளிப்பழம் 60 ரூபாவிற்கும், 50 ரூபாவிற்கு கொள்வனவு செய்யும் பச்சை மிளகாய் 140 ரூபாவிற்கும் விற்கின்றனர். சிலரது தராசுகளில் நிறுப்பதற்கு படிகளுக்குப் பதிலாக கற்கள் காணப்படுகின்றனவாம். சகல மரக்கறி வகைகளும் இப்படியே விற்கப்படுவதால் பொதுமக்கள் பாடு திண்டாட்டம். வியாபாரிகள் பாடு-கொண்டாட்டம்.

**கம்பியூட்டர் பயிற்சி**

மன்னார் மாவட்டத்திலுள்ள சகல அரச ஊழியர்களுக்கும் கம்பியூட்டர் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதற்கான பயிற்சி நிலையம் கச்சேரியில் அமைக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் இந்நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளதாக அரசாங்க அதிபர் திரு.எஸ்.எம்.குரூஸ் தெரிவித்தார். 'இது 2000ஆம் ஆண்டை நோக்கிய இலக்கு'.

**பிறப்புச் சான்றிதழ் தட்டுப்பாடு**

மன்னார் பதிவு அலுவலகத்தில் பிறப்புச் சான்றிதழ் பெறுவதென்றால் பலரது தயவை நாடி, பல்லாயிரக் கணக்கான கேள்விகளுக்கு ஆளாகிய பின்னர்தான் அதுவும் 'அவசரம்', என்றால் மட்டுமே பெற முடியும்.

"இங்கு சென்று எப்போது கேட்டாலும் "கொப்பி இல்லை. கொப்பி முடிவடைந்து விட்டது" என்பதுதான் பதிலாக சுடச்சுட தரப்படுகிறது "அது சரி சார், மாதத்திற்கு ஆயிரம் பிரதிகள் வருவதாக கேள்வி. அவற்றுக்கு நடப்பது என்ன?

# புனரமையுங்கள் அல்லது போய் விடுங்கள்!

(திருமலை நிருபர்)

'எங்கள் கிராமத்தில் நாங்கள் மீளவும் குடியேறுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தாருங்கள். அல்லது எங்கள் கிராமத்தை வேறொரு அரசசார்பற்ற நிறுவனத்திடம் தயவு செய்து ஒப்படைத்து விடுங்கள்' இவ்வாறு திருமலை ஆத்தி மோட்டைக் கிராம மக்கள் தமது பகுதிக்குப் பொறுப்பாக உள்ள அரச சார்பற்ற நிறுவனத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

ஏனைய கிராமங்களை வேறு நிறுவனங்கள் பொறுப்பேற்று மீள்குடியமர்வுக்கான பணிகளை ஆரம்பித்துள்ள இவ்வேளையில் தாங்கள் இன்னமும் அசமந்தமாக இருப்பது கவலைக்குரியது எனவும் தங்கள் கோரிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருக்கும் மக்கள் உடனடியாக மேற்படி நிறுவனம் பாதைகளை செப்பனிடல், வேலிகள் போட, காணி துப்பரவு செய்ய உபகரணங்கள் வழங்கல், வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகிய பணிகளில் தங்களுக்கு உதவ வேண்டும் எனக் கோருகிறார்கள்.

1990 கலவரத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களைப் புனரமைக்கும் பொறுப்புக்களை அரசசார்பற்ற நிறுவனங்களே ஏற்றுச் செய்துவருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

# கல்லடி வித்தியாலயத்தில் கட்டிட அவலம்

மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்தின் கட்டிடத்தினை இன்று உற்றுநோக்கும்போது தாபகர் சுவாமி விபுலாநந்தர் காலத்தில் கட்டப்பட்ட சிவபுரிக்கும், சமாந்தரமாகவுள்ள 120'x20' அளவு கொண்ட வகுப்பறைக் கட்டிடம் ஒன்று இன்று உபயோகிக்கமுடியாத நிலையில் உள்ளதைக் காணக்கூடியதாக வுள்ளது.

மழைகாலம் வந்துவிட்டால் மாணவர்கள் இருந்து படித்துக்கொள்ள முடியாதுள்ளது. கூரையின் ஓடுகள் சிதறுண்டும், சுவர் சீமெந்துப் பூச்சுகள் கொட்டுண்டும், யன்னல் பாதிகள் உடைந்தும், சீமெந்துத் தளம் மேடும் பள்ளமுமாக கிடக்கின்றன. இது இவ்விதமிருக்க, கடந்த 1992ம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி மூலம் ஆரம்பிக்கப் பட்ட 90'x20' அளவு கொண்ட மாடிக் கட்டிடத்தின் ஒரு பகுதி கட்டிடம் மட்டுமே கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

மேல் பகுதி வகுப்பறைகள் கட்டி முடிக்கப்படாமையினால் இதன் மேற் பகுதியில் மழை காலத்தில் நீர் தேங்கி நின்று கட்டிடத்தை பழுதடையச் செய்கின்றது. எனவே, இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் முன்னேற்றம் கருதியும் இது சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மேற்கூறப்பட்ட கட்டிடங்களை பூர்த்தி செய்ய ஆவன செய்வார்களா?

மூர்த்தி-மட்டக்களப்பு.

# வடக்கு கிழக்கு மாகாண சபை ஊழியர்களின் அவலநிலை. சுட்டிக்காட்டியும் கவனிக்காத அதிகாரி

வடக்கு-கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்களத்தில் கடமையாற்றிய ஒரேயொரு ஊழியருக்கு மட்டும் கடந்த 1994 தை மாதம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது குறிப் பிடத்தக்கது. இத்திணைக்களத்தில் தொடர்ந்து ஏழு வருடங்களாக கடமையாற்றி வரும் ஏனைய ஊழியர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

கடந்த வருடம் அரசாங்க பொதுநிருவாக சுற்று நிருபம் 16/94-16/94 (1) இன் படி ஒரு ஊழியர் தொடர்ச்சியாக 180 நாட்கள் வேலை செய்திருந்தால் நிரந்தர நியமனம் வழங்க அரசாங்கம் அங்கீகாரம் வழங்கி இருந்த பொழுதிலும் இவ்வூழியர்களுக்கு இது சம் பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாண மந்திரிசபை, நியமனம் வழங்கி கடந்த ஆறு(6) வருடங்களாக மாதாந்தச்சம்பளமும் பெற்று வருகிறோம்.

அரசாங்க பொதுநிருவாக சுற்றுநிருபம் 30/94இன் படி நிரந்தர நியமனம் பெற்ற வர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டது. இவ்வூழியர்களுக்கு இச்சம்பள உயர்வு கிடைக்கவில்லை. இதற்கு காரணம் நிரந்தர நியமனம் கிடைக்காதது தான். நாளுக்கு நாள் விலைவாசி அதிகரித்துக் கொண்டு போகும் காலகட்டத்தில் நிரந்தர நியமனம், சம்பள உயர்வு வழங்கப்படாதது மிகவும் வேதனையோடு கஷ்டத்தையும் கொடுக் கின்றது.

இந்த நிலையில் திணைக்களத்திலிருந்து கடன் பெறவோ பிற்காலத்தில் ஓய்வூதியம் பெறவோ அல்லது ஊழியர் சேமலாப நிதிக்கு (ஈ.பி.எவ்) தொகை பெறுவதற்கோ எந்தவொரு நடவடிக்கையும் திணைக்கள உயர் அதிகாரிகளால் இதுவரைக்கும் மேற்சொள்ளப்படவில்லை. தொழில் திணைக் கள ஆணையாளருக்கு அறிவித்தும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நிரந்தர நியமனம் பற்றி கடந்த 6 வருடங்களாக எதிர்பார்த்திருந்த இவ் ஊழியர்கள் நம்பிக்கை இழந்த நிலையில் பத்திரிகை மூலம் அரசுக்கு தெரிவிக் கின்றனர். இவ்வூழியர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு நிரந்தர நியமனம் சம்பள உயர்வு, பிற்காலத்தில்-ஓய்வூதியமோ, தொகையோ பெறுவதற்கும் அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பாதிக்கப்பட்ட திணைக்களம்-திருகோணமலை.

# திருமணத்திற்கு விடுமுறையா? கல்வி வளர்ச்சிக்கு இது முறையா?

வவுனியா மாவட்டத்தில் நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தின் இன்றைய அவல நிலையை பழைய மாணவர்கள் சார்பாக அறியத்தருகின்றோம்.

மேற்படி பாடசாலையில் கல்வி பயின்ற வர்கள்தான் நாமும். இப்பாடசாலை இவ்வாறு சீரழிந்து செல்வதை எம்மால் பார்த்துக் கொண்டு இருக்க முடியவில்லை. இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரிய ஆசிரியைகளுக்கு திருமணம் என்றால் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் விசேட விடுமுறை விடப்படுகிறது. இந்த சட்டம் தற்பொழுது வகுக்கப்பட்டுள்ளதா? அல்லது இவர்களின் புதிய சட்டமா?

இவ்வாறான செயல்களை பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் கேட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதாகக் கூறிவருகிறார். இப்படியே போனால் ஆசிரிய ஆசிரியைகளின் பிள்ளைகளின் பிறந்த நாள் விழா, 60ம் கல்யாணம் என்றெல்லாம் விடு முறை விடுவார்களா? மாணவர்களின் திடீர் திருமணத்திற்கும் லீவு விடுவார்கள் போல் தெரிகிறது. இவை அனைத்தையும் வவுனியா கல்வித் திணைக்களம் கண்டும் காணாதது போல் இருப்பதன் நோக்கம் யாது?

பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள்


நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:


| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 505/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 258/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 132/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 P.O.BOX: 1772
கொழும்பு COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


## முதலாவது பிறந்த தினம்



27.04. 1995

திருகோணமலை 256/30 உட்துறைமுக வீதியைச் சேர்ந்த பத்மசீலன்-சீதா லெட்சுமி தம்பதியின் சிரேஷ்ட செல்வப் புதல்வன் **ஹரி பிரசாத் (தினேஸ்)** தனது முதலாவது பிறந்த தினத்தை 27.04.1995ல் தனது வீட்டில் உற்சாகமாகக் கொண்டுகிறார் இவரை அம்மா, அம்மப்பா, அம்மம்மா, ரஜனிசித்தி, மலேசியா மாமா-மாமி, மச்சான் வினோத், மற்றும் மாமா-மாமிமார், சித்தப்பா-சித்திமார், பாட்டன்-பாட்டிமார், உறவினர்கள் ஸ்ரீ பத்ரகாளி அம்மாள் அருள் பெற்று சிறப்புற்று நீடூழி வாழ்கவென வாழ்த்து கிறார்கள்.


புதுமைப் பெண்களின் அழகான தோற்றம்

ஹேர்பல் முறைப்படி பிளீச்சிங், முகப்பருவை நீக்குதல், உடலின் கறுப்பு நிறத்தை மாறச் செய்தல், வாக்ஸிங், மனிக்குர், பெடிக்குர் செய்தல், முடிவெட்டுதல், முடிகொட்டுதல், பொடுகு போன்றன நீங்க சிகிச்சை அளிக்கப்படும்.

எலக்ரோனிக் முறைப்படி முகத்தில் உள்ள தேவையில்லாத முடிகளை நீக்குதல். ஹென்னா ட்ரீட்மென்ட்.

★ மணப்பெண் அலங்காரம் செய்து கொள்வோருக்குச் சலுகைகள் வழங்கப்படும்.

Ruka's Beauty Centre.
9A. Mcleod Road. Colombo-04.
(பம்பலப்பிட்டி தொடர்மாடிக்கு முன்னால்)
T.P: 583574, 501556.





அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ!

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—


மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28


# அம்புலன்ஸ் வண்டியில் அவலநிலையில் தமிழ்!

## சுகாதார அமைச்சு உடன் சிகிச்சையளிக்குமா?




(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பாலமுனை அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்றைக் கையளிக்கும் வைபவம் அண்மையில் நடை பெற்றது.

துறைமுகங்கள் கப்பற்றுறை, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் பிரதம அதிதியாக இந்த வைபவத்தில் கலந்து கொண்டு, சம்பிரதாய பூர்வமாக அம்புலன்ஸ் வண்டியை, வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஜனாப்.எஸ். எம். ஜெஸ்மியிடம் கையளித்தார்.

இந்த வைபவத்திற்குச் சென்றிருந்த 'தினமுரசு' நிருபரை, கையளிக்கப் பட்ட அம்புலன்ஸ் வண்டியில் பொறிக்கப் பட்டிருந்த தமிழ்வசன மொன்று கவர்ந் திழுத்தது. வாசகர்களுடன் அந்த 'அழகு' தமிழ்ச் சொற்களைப் பகிர்ந்து கொள்வதற் காக நமது நிருபர் 'கிளிக்' செய்து அனுப்பிய படத்தை இங்கு காண்கிறீர்கள். சுகாதார அமைச்சு கண்டுபிடித்துள்ள அந்த 'அழகு' தமிழ் வசனம் இதுதான். **"சுகாதார மகளிர் விலாா அளமச்சு"**! வாசகர்களுக்குப் புரிகிறதா? 'சுகாதார மகளிர் விவகார அமைச்சு' என்பது தான் அப்படிப் பொறிக்கப் பட்டுள்ளது சுகாதார அமைச்சு உடன் கவனிக்குமா?

# "இன்று போய் நாளை வா"

கல்முனைப் பிரதேச செயல கத்தில் வியப்புக்குரியதும் ஆத்திரமூட்டக் கூடியதுமான விடயங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பிரதேச செயலகத்தில் ஒரு அத்தாட் சிப் பத்திரம் பெறுவதற்காக ஒருவார காலம் அலைய வேண்டி யுள்ளது. இதேபோல் பல்வேறு தேவைகளுக்காக படிப்பறிவில்லாத பாமரமக்கள் வாரக்கணக்காக-ஏன் மாதக்கணக்காகக் கூட அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொருவர் ஏமாற்றுகின்றனர். அல்லது, "நேர மில்லை நாளை வா" என்று கூறுகின்ற னர். சில வேளை அடுத்த நாள் சென்றால் லீவு என்பார்கள். பதிலாக யாரையும் தற் காலிகமாக நியமிப்பதுமில்லை.

எனவே தயவு செய்து மேலதிகாரிகள் இனிமேலும் இவ்வாறு நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது அவர்களும் இக்கூட்டத்தில் சேர்ந்து விடுவார்களா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

எம்.எ.ஃப்.எம்.முஸ்தபா -கல்முனை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பிரபா சொன்னது

அரசியல் பண்டிதர்கள், விமர்சன வித்தகர்கள் சகலருக்கும் அதிர்ச்சியான செய்தி ஏப்ரல் 19 அன்று காதில் விழுந்தது.

'காலக்கெடு' என்ற வார்த்தையை புலிகள் கூறிய போதே யுத்தத்தின் அறிகுறிகள் தெரியத் தொடங்கிவிட்டதை பலர் கவனிக்கத் தவறிவிட்டனர்.

அந்தப் பலரில் சிலர்தான் அரசுக்கும் தவறான நம்பிக்கையூட்டல்களை தெரிவித்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

இல்லாவிட்டால் 'காலக்கெடு' குறித்து அரசும் படைகளும் இன்னும் கொஞ்சம் விழிப்பாக இருந்திருக்கலாம்.

ஏப்ரல் 19 காலக்கெடு என்று தெரிந்தும் ஏப்ரல் 18 இரவு திருமலை கடற்படைத் தளத்தில் விருந்து விழா நடைபெற்றது என்றால் விழிப்பு எந்த நிலையில் இருந்தது என்பது தெளிவாகிறது.

விருந்து நடைபெற்றிருக்காவிட்டாலும் தாக்குதல் நடந்தேயிருக்கும். இழப்புக்கள் சற்று குறைந்திருக்கலாம்.

வெளியே தெரிவிக்கப்பட்ட எண்ணிக்கையை விட கடற் கரும்புலித் தாக்குதலால் பலியான கடற்படையினர் எண்ணிக்கை அதிகம் என்றே தெரிகிறது.

தவறான கணிப்புக்களே தோல்விக்கு காரணமாக அமைகின்றன என்பதும் போர்த் தந்திரத்தில் கவனத்திற்குரியது.

அரசியல் தந்திரத்திற்கும் அந்த விதி

## புலிகளின் புதிய தந்திரம்

கன கச்சிதமாகப் பொருந்துகிறது.

பதவிக்கு வருவதற்கு முன்னரும் பின்னரும் பொதுஜன முன்னணிக்கு புலிகள் தொடர்பாக பூரண விளக்கம் இருக்கவில்லை.

அப்படி இருந்திருந்தால் அரபாத்தையும் பிரபாகரனையும் அவர்கள் ஒப்பிட்டுப் பேசியிருக்க மாட்டார்கள்.

அரபாத்தோடு இங்கே யாரையாவது ஒப்பிடவேண்டுமானால் அமிர்தலிங்கத்தை மட்டுமே ஒப்பிடலாம். அவர் உயிரோடு இல்லை.

பாலஸ்தீன அரபாத் கூட உயிரோடு வாழ்கிறார். **ஈழத்துக்கு மாற்றுத் தீர்வு தந்தால் வாங்கத் தயார்** என்று சொன்னதற்காக 'ஈழத்து அரபாத் அமிர்' புலிகளால் முடித்துவைக்கப்பட்டார்.

புலிகளது கவிஞர் 'வியாசன்' விடுதலைப் புலிகள் பத்திரிகையில் எழுதியுள்ள கவிதையில்,

**"தந்ததை வாங்கி தலை குனிந்து கொள்ள பிரபாகரன் அரபாத் அல்ல என்பதை அலரி மாளிகைக்கு அறிவித்துக் கொள்கிறோம்" (விடுதலைப் புலிகள்-பங்குனி-1995)**

என்று எழுதியதே போதும், யாசீர் அரபாத் பற்றி புலிகள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிந்துகொள்ள.

அடுத்ததாக தென்னாபிரிக்கா நெல்சன் மண்டேலாவோடு பிரபாவை ஒப்பிட்டுப் பேசுகிறார்கள்.

நெல்சனோடு சமரசம் பேசிய ஜனாதிபதி டி.கிளார்க், நெல்சன் மண்டேலாவை ஜனாதிபதியாக்கிவிட்டு, தான் உப ஜனாதிபதியானார்.

பிரபாகரனை தமிழ் ஈழ ஜனாதிபதியாக்க ஜனாதிபதி சந்திரிக்கா தயாராக இருக்கிறாரா?

வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டி அமைப்பு முறைக்கே அரசு தயாராக இருக்கிறதா என்று தெரியவில்லை.

குறைந்த பட்சம் வடக்கு-கிழக்கு இணைப்பு பற்றியே ஆறு மாதமாகியும் அரசு வாய்திறக்கவில்லை.

ஐரிஷில் சமாதானம் வரவில்லையா? என்றும் கேட்டார்கள். வரவில்லைத்தான் மீண்டும் அங்கே மோதலுக்குரிய சூழ்நிலை தான்.


நெல்சன் மண்டேலாவை ஜனாதிபதியாக்கிய-அதாவது கறுப்பின மக்களிடம்-ஆட்சி அதிகாரத்தை வழங்கிய தீர்வு மட்டுமே வெற்றிகரமான சமாதானத் தீர்வாக மாறியிருக்கிறது.

பாலஸ்தீனத்திலோ, ஐரிஷ் போராட்டத்திலோ சமாதானம் இன்னும் ஏற்பட்டுவிடவில்லை.

பாலஸ்தீன சுதந்திரம் கேட்டுப் போராடிய அரபாத் இப்போது தனது பாலஸ்தீனர்கள் மத்தியில் உள்ள தீவிரவாதிகளை 'ஆயுதங்களை கீழே போடுங்கள்' என்று கூறிக் கொண்டிருக்கிறார்.

ஒரு காலத்தில் அமிர்தலிங்கமும் தமிழ் இளைஞர்களை அவ்வாறு கோரியிருந்தார்.

எனவே-அரசாங்கமோ அல்லது சில விமர்சகர்களோ பொருத்தமில்லாத உதாரணங்களை கூறிக்கொண்டிருப்பது இறுதியில் தங்களைத் தாங்களே குழப்புவதாக முடிகிறது.



பாலஸ்தீனத்தில் அரபாத் மட்டுமல்ல; 'ஜோர்ச் ஹபாஸ்' (பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி -PFLP) போன்ற தலைவர்களும் இருக்கிறார்கள்.

இதுவரை அவர்கள் இஸ்ரேலை பகிரங்கமாக அங்கீகரிக்கவில்லை. சமாதானம் ஏற்படும் என்று கூறவில்லை.

காரணம், ஜோர்ச் ஹபாஸ் போன்றவர்கள் தமது போராளிகளை தற்கொலைத் தாக்குதல்களுக்கும் அனுப்பியவர்கள். "அடைந்தால் சுதந்திர பாலஸ்தீனம்; இல்லையென்றால் அழிவு" என்று தமது இயக்கத்தை உருவாக்கியவர்கள்.

'அரபாத்' அப்படியல்ல; நெல்சன் மண்டேலா கூட அப்படியல்ல.

தனது மனைவி மீது ஆட்கடத்தல், கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதால் மனைவியையே விவாகரத்து செய்தவர் மண்டேலா.

எனவேதான் மிதவாதிகளான அரபாத்தும், மண்டேலாவும் ஜனநாயகப் பாதைக்கு உடன் திரும்ப முடிந்தது.

இவையெல்லாம் வரலாறுகள். வரலாறுகளை தமது தேவைக்கு ஏற்ப விளக்க முற்படக் கூடாது.

அப்படி விளக்க முற்பட்டவர்கள்தான் ஏப்ரல் 19 அன்று அதிர்ச்சியில் சிக்கிக் கொண்டார்கள்.

ஜனாதிபதி செயலகத்திலும் அதிர்ச்சி தான். ஏப்ரல் 19 அதிகாலை கடற்கரும்புலிகள் திருமலையில் கொடுத்த அதிர்ச்சி தலைநகரில் உள்ள ஜனாதிபதி செயலகத்திலும் எதிரொலித்தது.

தாக்குதலை அடுத்து ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் நிறையக் குழப்பங்கள்.

புலிகள் விதித்தது 'காலக்கெடு அல்ல, காலவரையறை' என்று ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கை கூறியது.

மார்ச் 24 அன்று ஜனாதிபதியால் பிரபாகரனுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் புலிகள் காலக்கெடு விதித்தமை ஆட்சேபிக்கப்பட்டிருந்தது.

அதற்கு மார்ச் 27ல் பிரபாகரன் எழுதிய பதில் கடிதத்தில் 'காலக்கெடு' விதிக்க தமக்கு உரிமை உண்டு என்று தெளிவாகப் பதிலளித்திருந்தார்.

அதனடிப்படையில் 'காலக்கெடு' நீடிப்பு பற்றியும் பிரபாகரனால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தக் 'காலக்கெடு'வை கருத்தில் கொண்டே பொருளாதாரத்தடை மேலும் தளர்த்தப்பட்டது. கடல் வலயத்தடை பெருமளவு நீக்கப்பட்டது.

ஏப்ரல் 12ம் திகதி பிரபாவுக்கு ஜனாதிபதி எழுதிய கடிதமும் புலிகளது காலக்கெடுவை அகற்றவைக்கும் முயற்சியாகவே அமைந்தது.

ஏப்ரல் 27-28 பாரிஸ் மாநாடு. அதனை குறிவைத்தே புலிகளது காலக்கெடு அமைந்தது.

எப்படியாவது ஏப்ரல் 27,28ஐ கடந்துவிட வேண்டும் என்றே அரச தரப்பும் சுற்றிவளைத்து வார்த்தைப் பிரயோகங்களை பாவித்து புலிகளுக்கு ஏப்ரல் 12 கடிதம் அனுப்பியது.

கடிதத்தை மேலோட்டமாகப் பார்த்தால் புலிகளது கோரிக்கைகள் அனைத்துக்கும் அரசு உடன்படுவதுபோலவே தெரியும்.

ஆனால், உண்மையில் புலிகளது பிரதான கோரிக்கைகளை நாசூக்காக ஒரு ஓரத்தில் தள்ளிவைப்பதாகவே கடிதம் அமைந்திருந்தது.

"அரசு புலிகளுக்கு அனுப்பிய கடிதத்தில் புதிதாக ஒன்றுமில்லை. ஏப்ரல் 12ல் அரசின் கடிதம் புலிகளுக்கு ஆசைகாட்டப் போட்டுள்ள ஒரு தூண்டில்தான்" என்று இலண்டன் பி.பி.சி. விமர்சனம் செய்திருந்தது.

ஆனால், புலிகளும் தூண்டில் போட்டுவிட்டுத்தான் காத்திருந்தார்கள் என்பதை அரச தரப்பு கவனிக்கவில்லை.

புலிகள் தூண்டில் போட்டது இன்று நேற்றல்ல. என்று பேச்சுவார்த்தை ஆரம்பித்ததோ அன்றே தூண்டில் போட்டுவிட்டு காத்திருந்தார்கள் புலிகள்.

காத்திருந்தார்கள் என்றால் வெறுமனே கைகட்டிக் கொண்டிருக்கவில்லை. கரும் புலிகளையும் தமது ஏனைய அணிகளையும் தயார்படுத்தியபடி தமது போர் உணர்ச்சியில் சற்றும் தளர்வு ஏற்படாமல் பார்த்தபடி காத்திருந்தார்கள்.

**நாரதர்-**

அப்படியில்லாவிட்டால் ஏப்ரல் 19 அன்று நான்கு மனிதக் குண்டுகளை குறிதவறாமல் ஏவிவிட முடிந்திருக்காது. திருமலையிலும், மட்டக்களப்பிலும் பாரிய தாக்குதல்களை கச்சிதமாக நிறைவேற்ற முடிந்திருக்காது.

புலிகள் போட்ட தூண்டில்தான் அன்றாடப் பிரச்சனை பற்றிய கோரிக்கைகள்.

இந்தக் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றுவதைவிட நிறைவேற்றாமல் சிக்கிக் கொள்வதையே புலிகள் எதிர்பார்த்திருந்தனர்.

பூநகரி இராணுவ முகாமை அகற்ற வேண்டும் என்று தாம் கோரியபோது முதலில் புலிகள் கூறிய காரணம், மக்கள் சோதனைகள் இல்லாமல் சென்று வர வேண்டும் என்பதுதான்.

பூநகரி முகாமை 600 மீற்றர் பின்வாங்கி, சோதனை நடவடிக்கைகளையும் கைவிட அரசு சம்மதித்தது.

உடனே புலிகள் தாம் முன்பு கூறிய காரணத்தை கைவிட்டு, "600 மீற்றர் தள்ளியிருந்தாலும், 600 மீற்றர் தூரம் சென்று தாக்கக் கூடிய ஆயுதங்கள் பூநகரி முகாமில் இருக்கின்றன. அதனால் மக்கள் நிம்மதியாகப் பயணம் செய்ய முடியாது" என்று புலிகள் கூறினார்கள்.

மக்களை படையினர் தாக்க வேண்டுமானால் பூநகரியில் முகாம் இல்லாவிட்டாலும் ஹெலிகொப்டர் மூலமோ அல்லது விமானத்தின் மூலமோ வந்து தாக்கலாம். அல்லது ஆனையிறவில் இருந்து ஷெல் அடி நடத்தலாம்.

பூநகரி முகாமில் இருந்து மட்டுமே அதனை செய்ய முடியும் என்றில்லை.

ஆக, பூநகரி முகாமை அகற்றுவதற்கு மக்களோடு இணைத்து புலிகள் வெளியில் கூறிய காரணங்கள் உண்மையானவையல்ல.

பூநகரி தமிழீழ மண். அங்கு முகாம் எதற்கு? என்று கேட்கலாம்.

அப்படிப் பார்த்தால் வடக்கில் பலாலியிலும், காரைநகரிலும், தீவுப் பகுதிகளிலும் படை முகாம்கள் இருக்கின்றன. கிழக்கில் பரவலாகவே இருக்கின்றன.

எது சாத்தியமோ அதனை முதலில் செய்யவைக்கலாம் என்ற ரீதியில் பூநகரி விடயத்தில் புலிகள் உறுதியாக நின்றனர் என்று ஒரு வாதம் எழலாம்.

அது சரிதான், ஆனால் சமாதானப் பேச்சை முறிக்கும் அளவுக்கு பூநகரி பிரச்சனையில் புலிகள் ஒரே பிடியாக நின்றது எந்தளவுக்கு சரியானது?

கோரிக்கை என்ற ரீதியில் பார்த்தால் புலிகளது நிலை சரியல்ல.

ஆனால், புலிகள் கோரிக்கைகள் என்ற பெயரில் போட்டது தூண்டில்.

**எரிபொருள் தடை நீக்கம், கடல்வலயத் தடை நீக்கம், பொருளாதாரத் தடை நீக்கம் என்ற கோரிக்கைகள் யாவும் தமிழ்மக்களிடம் அரசை அம்பலப்படுத்த புலிகள் முன்வைத்தவையே.**

எந்த அரசு மீதும் புலிகளுக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் தமிழ் மக்கள் புதிய அரசை நம்பினார்கள். நம்பாதே என்று நேரடியாகச் சொன்னால் மக்கள் கேட்க மாட்டார்கள். எனவே சில கோரிக்கைகளை புலிகள் முன்வைத்தார்கள்.

முன்வைத்த கோரிக்கைகளில் சிலவற்றை அரசு நிறைவேற்றியது.

நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை புலிகள் ஒரே பிடியாய் பிடித்துக் கொண்டார்கள். அதில் அரசு சிக்கிக் கொள்ளும். என்று புலிகள் எதிர்பார்த்தனர். அதனை வைத்து அரசு மீது நம்பிக்கையீனத்தை உருவாக்கவே காத்திருந்தார்கள்.

இதற்கிடையே ஏப்ரல் 27-28 பாரிஸ் மாநாடு புலிகளுக்கு ஒரு முக்கிய பிரச்சனையாக இருந்தது.

பிரேமதாசாவோடு 14 மாதங்கள் புலிகள் பேசினார்கள்.

ஜனாதிபதி சந்திரிக்காவோடு ஆறு மாதங்கள் மட்டுமே பேச்சு தொடர்ந்தது.

பேச்சுக்கு ஆறுமாத ஆயுள்மட்டுமே என்ற நிலையை உருவாக்கியது பாரிஸ் மாநாடுதான்.

ஆற அமர காய் நகர்த்தி விளையாடிக் கொண்டிருக்க நேரம் போதவில்லை. விட்டால் பாரிசில் போய் ஜனாதிபதி நிதி உதவியை வாங்கிக்கொண்டு வந்துவிடுவார்.

பாரிசுக்கு-சமாதானம் நிலவும் இலங்கையில் இருந்து ஜனாதிபதி செல்வதை புலிகள் விரும்பவில்லை.

அதனால்தான் 'காலக்கெடு'வை மேலும் நீடிக்காமல் போரை ஆரம்பித்தனர்.

புலிகள் கடற்படையினர் மீது பாரிய அடியை கொடுத்த போதும் அரசு புலிகளோடு பேச்சு முறிந்தது என்று அறிவிக்கவில்லை.

தனது அரசின் சமாதான தோற்றப்பாடு பறிபோவதை அரசு விரும்பவில்லை.

சமாதானம் என்பதை வலியுறுத்தியே அரசு பதவிக்கு வந்தது. சென்ற அரசில் இருந்து புதிய அரசு தன்னை வேறுபடுத்திக் காட்டும் முக்கிய குறியீடாகவும் சமாதானம்தான் இருக்கிறது.

எனவேதான் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டும் ரீதியில் புலிகளது தாக்குதல் தொடரும் போதுகூட 'புலிகள் விரும்பினால் பேசலாம்' என்று அரசு அறிவித்துக் கொண்டிருக்கிறது.

புலிகள் தாமாகவே தாக்குதலை ஆரம்பித்தமை அரசுக்கு ஒரு வகையில் சாதகம். 'சமாதான நடவடிக்கைகளை முறித்தவர்கள்' என்ற முத்திரையை புலிகள் மீது குத்திவிடலாம்.

அதே சமயம் புலிகளோடு தாம் கடுமையாக நடந்து கொள்வதாக காட்ட வேண்டிய தேவையும் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

கடல்வலயத் தடை, எரிபொருள் தடை, சில பொருட்களுக்கு மீண்டும் தடை என்றெல்லாம் உடனடியாக அரசு அறிவித்ததும் அதனால்தான்.

புலிகள் தாக்குதலை ஆரம்பித்தவுடன் எரிபொருள் தடை என்று அரசு அறிவித்தமை தமிழ் மக்களிடையே சற்று அதிருப்தியைத்தான் ஏற்படுத்தியது.

வடபகுதி மக்களுக்கு நல்லது செய்யவே தடைகளை நீக்குவதாக முன்னர் கூறிவிட்டு புலிகளோடு கோபித்துக் கொண்டு மீண்டும் தடைகளை அறிவித்துள்ளது அரசு.

**தெற்கிலும், குறிப்பாக படையினர் மத்தியிலும் ஒரு திருப்தியை ஏற்படுத்தவே அந்த அறிவிப்பு அவசரமாகச் செய்யப் பட்டது.**

யுத்தத்தின் பின்னர் அரசும், அதன் படைகளும் நடந்துகொள்ளும் முறையை வைத்து அரசை அம்பலப்படுத்துவதே புலிகளது புதிய தந்திரமாக இருக்கும்.

பரவலான கைதுகள், ஷெல் தாக்குதல்கள் போன்றவை இந்த அரசும் முன்னால் இருந்த அரசும் போலத்தான் என்று புலிகள் சொல்வதற்கு சாதகமாகலாம்.

அதே சமயம் அரசு புலிகளோடு மீண்டும் பேச விரும்புகிறது. பாரிய யுத்தத்தை தற்போதைக்கு இளம் அரசால் தாங்க முடியாது.

எனினும், இனிப் புலிகளை அரசு ஆறுமாதத்தின் முன்னர் நம்பியது போல-கணிப்பிட்டது போல-நம்பாது என்பது மட்டும் உண்மை.

புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் எப்போதுமே அரசை நம்பவில்லை.

இந்தியப் படை புலிகளுக்கு எதிராக போர் நடத்திய நேரத்தில் தமிழ் நாட்டில் புலிகளது பிரதிநிதிகளும் இந்திய 'றோ' அதிகாரிகளும் பேச்சு நடத்தினார்கள்.

அந்தப் பேச்சில் உடன்பாடு காண வாய்ப்பு இருப்பதாக வன்னிக்காட்டில் இருந்த பிரபாவுக்கு அறிவித்தார்கள். பிரபாகரன் அதற்கு பின்வருமாறு பதில் அனுப்பினார்;

**"நான் உயிரோடு இருக்கும் வரை இயக்கத்தை எவரும்-எவரிடமும் மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்க அனுமதிக்கமாட்டேன்."**

அத்தோடு இந்திய 'றோ' வோடு பேசுவதை தமிழகத்தில் இருந்த புலிகள் நிறுத்திக்கொண்டனர்.

பேச்சாக இருந்தால் என்ன, போர் தவிர்ப்பாக இருந்தால் என்ன-பிரபாகரனைப் பொறுத்தவரை அவை அனைத்துமே தமிழீழத்திற்கான பாதையில் எதிரிகள் வைக்கும் பொறிகள். அவற்றை புத்திசாலித்தனமாக கடக்க வேண்டுமே தவிர சிக்கக் கூடாது. பிரபாவின் சித்தாந்தம் அதுதான்.

இதனை புரிந்து கொள்ளாதவர்கள் அரபாத்துடனும், மண்டேலாவுடனும் புலிகளது தலைவரை ஒப்பிட்டு கற்பனைகளை உருவாக்குவதற்கு புலிகள் பொறுப்பல்ல.

இன்னொரு முக்கிய விடயம் கவனிக்கத்தக்கது-தற்போது சமாதானம் புலிகளை விட அரசுக்கே அதிக தேவையாக இருக்கிறது.

தனது எதிரிக்கு தேவையான ஒன்றை எந்த எதிர்தரப்பும் அத்தனை சுலபமாக வழங்கிவிடாது. புலிகளும் அப்படித்தான்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# என்ன?



**ஊ**ர் ரெண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம். போர் உண்டாகிவிட்டால் தரகர்களுக்கு கொண்டாட்டம். தலை நகரில் பிடிபட்டவைகளை வெளியே எடுத்துவிடும் தரகர்கள் கடந்த ஆறு மாத காலமா எக்கச் சக்கமாய் காய்ஞ்சு போய் இருந்தவை. இப்ப பழையபடி உற்சாகமாய் தோன்றியிருக்கினம். பூனைகளுக்கு விளையாட்டு சுண்டெலிகளுக்கு சீவன் போகுது எண்ட கதைதான் பாருங்கோ. இந்த தரகர்களை கவனிக்கிற மாதிரி கவனிச்சா என்ன? பாடமாய் இருக்குமல்லோ?

**ரெ**ண்டு எழுத்தாரோடு பேச்சிலை முன்னேற்றம் எண்டுதான் அதிகார தரப்பு தூதர்கள் வாய் வலிக்கச் சொல்லிக்கொண்டிருந்தவை. இப்ப பார்த்தா ரெண்டு எழுத்தார்தான் முன்னேறியிருக்கினம். அவை முன்னேறினது முகாம்களை நோக்கி. இதுவும் ஒரு முன்னேற்றம்தானே?

**வ**ணக்கத்துக்குரியவர் நடுநிலையாளர் எண்டு நல்ல பெயர் எடுத்து வைச்சிருந்தவர். அவரின் கெட்ட நேரம் தூதராய் போய் உள்ள பெயரையும் கெடுத்துக்கொண்டு வந்திருக்கிறார். இனி ரெண்டு எழுத்தாரிடம் நல்ல பெயர் எடுக்க வேணுமெண்டா அவர் தூதர் வேசத்தை களைந்து அதிகாரத் தரப்பை கண்டபடி கண்டிக்க வேண்டியிருக்கும். கடைசி நேரத்திலை போய் இருந்த நல்ல பெயரையும் கெடுத்ததை நினைச்சு வணக்கத்துக்குரியவர் வருத்தப்படுகிறாராம்.

**ச**மாதான யாத்திரை போன ஆட்கள் திடீரென்று அமைதியாகிப் போட்டினம். சாதாரண நேரத்திலை வடக்குக்கு போனதைவிட தற்போதைய நிலையில் யாத்திரை போனாத்தான் அதுக்கு சமாதான யாத்திரை எண்ட பெயர் பொருத்தம். ஒரு ஆயிரம் பேரை திரட்டிக்கொண்டு உடனடியாக வடக்கே போகட்டும். எல்லாரும் சேர்ந்து வாழ்த்தி வழியனுப்பி வைக்கலாம்.

## அதிரடி அய்யாத்துரை

**கி**ழக்கில் தடை அரண் ஒண்டிலை ரெண்டு எழுத்தார் குப்பியை காட்ட சீருடையினர் கப்பென்று பாய்ஞ்சு மடக்கினவையாம். குப்பியைக் காட்டியவர்களுக்கு திருமலையில் அன்று காலை நடந்த சம்பவம் தெரியாதாம். அதுதான் வழக்கம்மாதிரி தங்கள் அடையாளத்தை காட்டினவையாம். அதிலை ஓரிருவர் பலியாகிவிட்டாராம்.

**த**டை எல்லாம் கிடையாது எண்ட நம்பிக்கையிலை பொருட்கள் நிறைந்த பொதிகளோடு தாண்டிக்குளம் தாண்டச் சென்றவைக்கு ஏப்-20 அன்றுதான் ஏப்ரல் பூல். வாடிப்போன முகத்தோடை வாங்கிய பொருட்களை கொண்டு திரும்பிவந்து நிண்டு சனம் தவிச்சுப் போட்டுதுகள்.

**கூ**டுதத்தை பரிசீலிக்கினம் ரெண்டு எழுத்தார் எண்டு அதிகார தரப்பு நினைச்சுக் கொண்டிருக்க, தலைவர் களத்துக்கு அனுப்புற அணிகளைப் பரிசீலித்துக் கொண்டிருந்தவராம். ஆரியக் கூத்தாடினாலும் அவருக்கு காரியத்திலைதான் கண்.

**க**ரும் ரெண்டு எழுத்தாரின் கடைசிச் சாப்பாடு ஆட்டிறைச்சிக் கறியோடுதானாம். ரெண்டு எழுத்தாரின் முகாமுக்கு ஆடு ஒண்டு போனா அதைக் கவனிக்கிற ஆட்கள் காதும் காதும் வைச்ச மாதிரி முணுமுணுக்கினமாம் "எங்கையோ கிளம்பப் போகினமாம்."

**அ**திகார தரப்பு தூதுக்குழுவில் புதிய முகமாக போய்வந்தவர் பேச்சு முறிய வாய்ப்பே இல்லை எண்டு அறிவுக் 'கொரடை'யாக பேட்டி கொடுத்தவர். முறிந்த மறுநாள் பத்திரிகையாளர்கள் அவரை தேடினவையாம். ஆள் ஊரிலையே இல்லை எண்டு தகவல் மட்டும்தான் கிடைச்சதாம். உய்....உயங்.... எண்டு எங்காவது பறந்திருப்பாரோ தாடிக்காரர். அது சரி இவையெல்லாம் ரெண்டு எழுத்தாரின் நாடிபிடிச்சறிந்த ஆட்கள் மாதிரி என்ன தைரியத்திலை பேசிக்கொண்டு திரிஞ்சவை? கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்தறிவதே மெய். திருவள்ளுவரை ஃபலோ பண்ணினால் தவறான யூகங்களுக்குச் சான்ஸ் இருந்திருக்காதல்லோ.

**வி**யட்நாம் போர் நேரத்தில் கவியரசு கண்ணதாசன் எழுதின கவிதையில் ஒரு துளி-காலப்பொருத்தம் இல்லாமல் தருவேனோ?

**"தாயற்றோர் பல பேரும், பசித்த வேளை**
**சாப்பாடில் லாதவர்கள் பலரும், பெற்ற**
**சேயற்றோர் பல்லோரும்-உடுப்பதற்கோர்**
**சிற்றாடை யில்லாரும், எதிர்த்துப் பேச**
**வாயற்ற ஏழைகளும், சுருண்டு தூங்க**
**மனையற்றோர் ஆயிரமும், பலநாட் போரில்**
**நோயுற்றுக் கிடக்கின்ற வியட்நாம் மேலும்**
**நோகாமல் காப்பதுதான் மனித தர்மம்"**

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# அரசியல் தொடர்

**அற்புதன் எழுதுவது**




## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# விம்மியழுத கிட்டுவும் வியப்படையாத பிரபாவும்

### தவித்தனர் இருவர்

சிறைச் சுவரை உடைத்து பின்புறம் வழி ஏற்படுத்துமாறு வரதனிடமும், அழகிரியிடமும் ஏற்கெனவே பொறுப்புக் கொடுக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு பொறுப்பு கொடுக்கப் பட்டதை அவசர படபடப்பில் மறந்த நிலையில் ஏனைய போராளிகள் தப்பிச் சென்றுவிட்டனர்.

வரதன் என்று அழைக்கப்பட்ட வரதராஜப்பெருமாள் சிறையில் இருந்த வரை எந்தவொரு இயக்கத்திலும் உறுப்பினராக இருக்கவில்லை.

அவரை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் தம்மோடு சேருமாறு டக்ளஸ் தேவானந்தா கேட்டிருந்தார். எனினும் சிறைக்கு வெளியே வந்து முடிவு தெரிவிப்பதாக வரதன் பதில் சொல்லியிருந்தார்.

அமெரிக்காவுக்கு சென்று மேலும் கல்வி கற்கவும் வரதன் விரும்பியிருந்தார்.

அழகிரி ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்தவர். ஈரோஸ் அமைப்பை அப்போது ஏனைய இயக்கத்தினர் கணக்கில் எடுப்பதில்லை.

இருவரும் அந்த நேரத்தில் முக்கியமற்றவர்களாக இருந்தமையால் அவர்கள் இருவரையும் நினைவில் வைத்து ஏனைய போராளிகள் தேடவும் இல்லை; மறந்தே போனார்கள்.

ஏனையோர் தப்பிச் சென்று விட்டார்களே இப்போது என்ன செய்வது- என்று வரதனும், அழகிரியும் தவித்துப் போயினர்.

அந்த நேரத்தில் சிறையை அண்மித்திருந்த வாவி வழியாக ஒரு படகில் மூன்று போராளிகள் தப்பிச் செல்ல முயன்று கொண்டிருந்தனர்.

அவர்கள் தமிழ் ஈழ இராணுவம் என்னும் அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

தம்பாப்பிள்ளை மகேஸ்வரன், காளி, சுப்பிரமணியம் ஆகியோரே அந்த மூவர்.

சிறை உடைப்புக்கு திட்டமிட்ட போதே தாம் மூவரும் வாவி வழியாக படகில் தப்பிச்செல்லப் போவதாக தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் கூறியிருந்தார்.

ஏற்கெனவே அவர்கள் ஏற்பாடு செய்தபடி படகு வந்து தயாராக நின்றது.

வாவியை நோக்கி ஓடிய வரதனும், அழகிரியும் தம்மையும் அழைத்துச் செல்லுமாறு கேட்டனர். படகில் அவர்களோடு தப்பிச் சென்றனர்.

### முதல் நடவடிக்கை

50 போராளிகள் சிறை உடைப்பின் காரணமாகத் தப்பிச் சென்றனர்.

**இலங்கையின் வரலாற்றில் முதலாவதாக நடைபெற்ற பாரிய சிறை உடைப்பு நடவடிக்கை மட்டக்களப்பு சிறை உடைப்புத்தான்.**

வெலிக்கடை சிறைப் படுகொலைக்கு ஒரு பதிலடியாகவும் இது அமைந்தது.

45 பேர் வேன் மூலமாகவும், 5 பேர் படகு மூலமாகவும் தப்பிச் சென்று காட்டுக்குள் மறைந்தனர்.

அரசு அதிர்ந்தது. சிறை உடைப்பு நடக்கும் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை.

### மிகையான செய்திகள்

சிறை உடைப்பு தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் சில ருசிகரமானவை.

'நீர்மூழ்கிக் கப்பல்' மூலமாக போராளிகள் தப்பிச் சென்றுவிட்டதாக பத்திரிகைகளில் செய்தி படித்த மக்களுக்கு வியப்பு.

தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி! 'நீர்மூழ்கிக் கப்பல்' வைத்திருக்கும் அளவுக்கு போராளிகள் வளர்ந்து விட்டார்களே என்று நினைத்துத்தான் அந்த மகிழ்ச்சி.

இன்னொரு வேடிக்கை: சிறைக்குள் செருப்புக்களை வெட்டி துப்பாக்கிபோல செய்து வைத்திருந்தனர்.

பார்த்தவுடன் கைத்துப்பாக்கி என்று சிறைக்காவலர்களை மிரள வைக்கத்தான் அந்த ஏற்பாடு.

உள்ளே தருவிக்கப்பட்ட ஆயுதங்கள் போதாது என்பதால்தான் இந்த போலி ஆயுதங்கள்.

துப்பாக்கி போல தயாரிக்கப்பட்ட செருப்பு ஒன்றைக் கண்ட நிருபர் ஒருவர் பத்திரிகைக்கு அனுப்பிய செய்தி இது:

"கைதிகள் தப்பிச் செல்லும்போது இயந்திரத் துப்பாக்கி ஒன்றை சிறைக்குள் தவறவிட்டுச் சென்றுள்ளனர்."

தாக்குதல் நடவடிக்கைகளின் பின்னர் இவ்வாறு மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் வருவது வழக்கம்தான்.

நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டமே மிகைப்படுத்தல் என்று தெரியும்; தமக்குள் சிரித்துக் கொள்வார்கள்.

### காட்டுக்குள் முரண்பாடு

மட்டக்களப்பு சிறையில் இருந்து தப்பிய 45 போராளிகளும் காட்டுப் பாதை வழியாக சென்று கொண்டிருந்தனர்.

அவ்வாறு செல்லும்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். போராளிகளுக்கும், புளொட் போராளிகளுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றிவிட்டன.

அதனால் இடைநடுவில் இரு அமைப்பினரும் வெவ்வேறு பாதைகள் வழியாக பிரிந்து தப்புதல் பயணத்தை தொடர்ந்தனர்.

காட்டுப்பாதை முடிய அடுத்த பயணம் படகு மூலமாக தமிழ நாட்டுக்கு என்று திட்டமிடப்பட்டது.

ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிடம் அப்போது சொந்தமாக ஒரு படகு கூடக் கிடையாது.

படகு வாடகைக்கு அமர்த்தலாம். அதற்கு பணம் வேண்டும்.

வாடகை, டீசல் மற்றும் செலவுகளுக்கு குறைந்தது பதினைந்து ஆயிரம் ரூபா என்றாலும் தேவை.

பத்து ரூபாய்க்கு கூட அல்லாடிக் கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் பிராந்திய கமிட்டி திகைத்துப் போய்விட்டது.

இது தவிர ஆயுதப் பயிற்சிக்கு தமிழ்நாட்டுக்கு ஆட்களை அனுப்பவும் படகு தேவை; பணம் தேவை.

### தபால்நிலையக் கொள்ளை

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் முன்பாக இருந்தது பிரதான தபாலகம்.

அங்கு பணம் இருப்பதாகத் தகவல். பொலிஸ் நிலையமோ முன்னால் இருக்கிறது. கஷ்டமான சூழல்தான். ஆனால் வேறு வழியில்லை.

புகுந்தனர் ஏழு பேர். ஐம்பதுக்கு மேற்பட்ட சிறு சிறு பைகளில் பிரித்து பணத்தைக் கட்டி வைத்திருந்தனர்.

ஒவ்வொரு பையாக தபாலக ஊழியர்களை வைத்து பிரித்து பணத்தை திரட்டியெடுக்க ஒரு மணிநேரமானது.

மேலும் பணம் தேவை. வங்கிகளுக்கு பலத்த பாதுகாப்பு. பாதுகாப்பை உடைக்க தலைமையிடம் தேவையான ஆயுதம் கேட்டும் கிடைக்கவில்லை. இருந்தால் தானே கொடுப்பதற்கு?

'மாட்டிக்கொண்டால் இயக்கப் பெயரை கூறுவதில்லை. தனிப்பட்ட தேவைக்கு என்றுதான் வாக்குமூலம் கொடுப்பது' என்ற முடிவோடு யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கூட்டுறவுச் சங்கங்களில் கொள்ளையிடப்பட்டது.

ஒரு காரைக் கடத்திக்கொண்டு ஒரே நாளில் பண்டத்தரிப்பு, கொக்குவில், உரும்பிராய் தபாலகங்களில் கொள்ளையிடப்பட்டது.

இந்த நடவடிக்கைகள் அனைத்திலும் ரமேஷ், சுபத்திரன், மோகன், இந்திரன், சுதன், இளங்கோ ஆகியோர் கொண்ட 7 பேர் குழுவே பங்குகொண்டது.

### தடுமாற்றம்

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை தாக்குவதற்கும், மானிப்பாய் வங்கியில் நிதி பறிப்பில் ஈடுபடவும் இவர்கள் தயாரானபோது யாழ் பிராந்திய ஈ.பி.ஆர்.எல்.எஃப். கமிட்டியில் இருந்த சிலர் அதனை விரும்பவில்லை.

ரமேஷ் சில காலம் தமிழ் நாட்டில் சென்று தங்கியிருக்க வேண்டும் என்றும், அவர் யாழ்ப்பாணத்தில் இருந்தால் மக்கள் விடுதலைப் படை நடவடிக்கைகளை தம்மால் நிறுத்த முடியாமல் போகும் என்றும் யாழ் பிராந்திய கமிட்டி செயலாளராக இருந்த செழியனால் மத்திய குழு உறுப்பினர் குணசேகரனிடம் தெரிவிக்கப்பட்டது.

இதைவிட வேடிக்கை-நிதி தேவையானபோது தம்மால் எதுவும் செய்ய முடியாமல் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் பிராந்திய கமிட்டி, தேவையனைத்தும் முடிந்த பின்னர்தான் கொள்ளை நடவடிக்கைகளை விமர்சித்தது.

பயிற்சிக்கு ஆட்களை அனுப்புவது, வேறு பிரதேசங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்களை தங்க வைப்பது, தமிழ் நாட்டுக்கு அனுப்புவது, நிதித் தேவைகளை கவனிப்பது, யாழ்ப்பாணத்தில் பயிற்சிக்கு ஆட்களைத் தெரிவு செய்வது, உளவுப் பிரிவு நடவடிக்கைகள் என்று சகல பொறுப்புக்களையும் 83ம் ஆண்டு நெருக்கடியான காலகட்டத்தில் ரமேஷ்-சுபத்திரன் ஆகியோர் சேர்ந்து திட்டமிட்டே சமாளித்தனர்.

போர்க்குணமின்மை, முந்திக்கொள்ள முயலாமை, நிலமைக்கு ஏற்ப திட்டமிட்டு செயற்படாமை, தயக்கம் காரணமான ஜனநாயக வாய்வீச்சுக்கள், சரியானவர்களை இனம்காண முடியாமை போன்றவற்றால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் ஒரு சாரார் தடுமாறிக் கொண்டிருந்தனர்.

### உரிமைகோரலில் போட்டி

மட்டக்களப்பு சிறை உடைப்பு நடவடிக்கையை தமிழ்நாட்டில் இருந்த புளொட் அமைப்பினர் உரிமை கோரினார்கள்.

இதனையடுத்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினரும் "நாம்தான் சிறையை உடைத்தோம்" என்று தனித்து உரிமை கோரினார்கள்.

இந்தப் போட்டி உரிமை கோரல் யாழ்பாணத்திலும் தொடர்ந்தது.

யாழ்ப்பாணத்தில் புளொட் அமைப்பை விட ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரசாரமே மக்களிடம் எடுபட்டது.

"சிறையில் இருந்து எப்படித் தப்பித்தோம்?" என்று தமிழ் நாட்டில் ஜூனியர் விகடன் சஞ்சிகைக்கு டக்ளஸ் தேவானந்தா விபரித்திருந்தார்.

அந்தப் பேட்டியின் 'ஃபோட்டோ ஸ்ரற்' பிரதிகளை யாழ்ப்பாணம் எங்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். சுவரொட்டியாகத் தயாரித்து ஒட்டியிருந்தது.

மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று அவற்றை வாசித்தனர்.

கூட்டு நடவடிக்கையாக உரிமை கோரியிருக்க வேண்டிய நடவடிக்கை இயக்கப் போட்டிகள் காரணமாக உண்மைக்கு மாறான உரிமை கோரலாகியது.

### சுவரொட்டிப் பிரசாரம்

இந்த இடத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் சுவரொட்டிப் பிரசாரம் பற்றிக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

அந்த நேரத்தில் துப்பாக்கியோடு மாட்டினால் படையினரால் எப்படியான கவனிப்புக் கிடைக்குமோ, அதே கவனிப்புத்தான் சுவரொட்டியோடு மாட்டிக்கொண்டாலும் கிடைக்கும்.

சுவரொட்டி ஒட்டும் போது படையினரது கண்ணில் பட்டால் உடனே சுட்டுத்தள்ளவும் படையினர் தயங்குவதில்லை.

யாழ்ப்பாண நகரில் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்த புளொட் உறுப்பினர்கள் அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

யாழ்ப்பாணம் பொது மருத்துவ மனைக்குப் பின்புறம் உள்ள சுவரில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். போடும் சுவரொட்டி வெகு பிரசித்தம்.

45 தாள்கள் சேர்ந்த பிரமாண்டமான சுவரொட்டி அது. அதனை ஒட்டி முடிக்க குறைந்தது அரைமணிநேரம் தேவை. ஏணியும் கொண்டுவர வேண்டும்.

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் இருந்தும், வெலிங்டன் தியேட்டரில் இருந்தும் நோட்டம் செலுத்திக் கொண்டிருப்பார் சில உறுப்பினர்கள்.

பொலிஸ் ஜீப் அல்லது இராணுவ ட்ரக்வண்டி வந்தால் விசில் மூலம் சைகை செய்ய வேண்டியது அவர்களது பொறுப்பு.

சனநடமாட்டம் உள்ள போதே ஒட்டி முடித்து விட வேண்டும். இல்லாவிட்டால் சுலபமாக படையினரால் இனம் காணப்படும் அபாயம் ஏற்படும்.

சுவரொட்டி ஒட்டுவது ஒரு போராட்டம் போலவே யாழ் குடாநாடெங்கும் நடந்து முடியும்.

புலிகள் அமைப்பின் இரு முக்கிய உறுப்பினர்களான சீலன், ஆனந்தன் ஆகியோருக்கு வீர வணக்கம் செலுத்தி ஈழமாணவர் பொது மன்றம் என்றபெயரில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வெளியிட்ட சுவரொட்டி குறிப்பிடத்தக்கது.

சுவரொட்டிகளுக்கான வாசகங்களை தயாரிப்பார்கள். தயாபரன், செழியன், நிருபன், டேவிற்சன் ஆகியோர் அழகான பெரிய எழுத்துக்களில் சுவரொட்டியாக்குவார்கள்.

உடனடியாக யாழ் குடாநாடெங்கும் சுவரொட்டி விநியோகிக்கப்பட்டு இரவோடு இரவாக ஒட்டப்பட்டுவிடும்.

**இந்த சுவரொட்டிகள் முதலில் ஈழமாணவர் பொது மன்றம் தொடர்பாகவும், பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தொடர்பாகவும் இடதுசாரி தோற்றப்பாட்டை உருவாக்கின. பெரும் எதிர்பார்ப்பையும் தோற்றுவித்தன.**

இந்த பிரசார நடவடிக்கைகளுக்கு மூல காரணமாக இருந்தவர்களில் ரமேஷ் ஈ.பி.டி.பியிலும், சிறீதரன் ஈ.பி.ஆர்.எல்.எஃப் பிலும் இருக்கின்றனர். ஏனையோர் ஒதுங்கிச் சென்றுவிட்டனர்.

### இந்தியப் பயிற்சி

இந்திய அரசு ஈழப் போராளிகள் அமைப்புக்கள் ஐந்துக்கு ஆயுதப் பயிற்சியளிக்க முன்வந்தமை பற்றி முன்னர் கூறியிருந்தேன்.

புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எஃப், புளொட், ரெலோ, ஈரோஸ் ஆகிய அமைப்புக்களது பயிற்சி முகாம்கள் தமிழ் நாட்டில் இருந்தன.

அந்த பயிற்சி முகாம்களில் இருந்து இந்தியாவின் உத்தர பிரதேசப் பகுதிக்கு போராளிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஒவ்வொரு இயக்கத்திற்கும் தனித்தினியாக வெவ்வேறு இடங்களில் வைத்தே பயிற்சியளிக்கப்பட்டது.

பாலங்களை தகர்ப்பது, பொருளாதார மையங்கள், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் போன்றவற்றை குண்டுவைத்து சிதைப்பது போன்ற கருத்துக்கள் இந்திய பயிற்சியாளர்களால் நடத்தப்பட்ட இராணுவ வகுப்புக்களில் விளக்கப் பட்டன.

இலங்கையில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய விபரங்களை போராளிகள் மூலமாக அறியவும் இந்தியப் பயிற்சியாளர்கள் முயன்றனர்.

### கிட்டுவின் அழுகை

புலிகள் அமைப்பினர் பொன்னம்மான் என்றழைக்கப்படும் குகன் தலைமையில் இந்திய பயிற்சிக்குச் சென்றனர்.

பயிற்சிக்கு சென்றவர்களில் 'கிட்டு'வும் ஒருவர். உத்தர பிரதேசம் குளிர் பிரதேசம். சூழ்நிலைக்கு பழக்கப்படும்வரை போராளிகளுக்கு நோய்-நொடிகள்.

புலிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிக்கும் பொறுப்பாளராக இருந்தவர் இந்திய இராணுவ கேணல்.

அவர் போராளிகள் மீது மிகப் பரிவோடும் பாசத்தோடும் நடந்து கொண்டார்.

பயிற்சிகள் முடிவடைந்து விடைபெறும் நேரம், இந்திய கேணலுக்கு கண்கள் கலங்கிவிட்டன. போராளிகள் விழிகளிலும் குளம்.

கிட்டு ஓடிச் சென்று இந்திய கேணலின் மடியில் புரண்டு விம்மி அழத் தொடங்கிவிட்டார்.

கண்ணீரோடு விடைபெற்று சென்னை வந்தனர். சென்னை அடையாறில் புலிகளது அலுவலகம் இருந்தது.





தமது அனுபவங்களை புலிப் போராளிகள் பிரபாவிடம் விபரித்தனர்.

கிட்டு விம்மியழுத கதையையும் ஒரு போராளி பிரபாவிடம் கூறினார்.

அதனைக் கேட்டு விட்டு சிறிது நேர மௌனத்தின் பின்னர் பிரபா கூறியது இது:

**"நாங்கள் ஒரு நோக்கத்திற்காகப் பயிற்சி எடுக்கப் போனோம்: அவர்கள் (இந்தியா) வேறு ஒரு நோக்கத்திற்காகப் பயிற்சி தந்திருக்கிறார்கள். எங்களுடைய நோக்கத்திற்கு எதிராக என்றோ ஒரு நாள் அவர்களது இராணுவம் திரும்பினால், இதே கேணலுடன் சண்டை பிடிக்கும்படி கிட்டுவுக்கு நான் உத்தரவிடுவேன். கிட்டுவும் சண்டை பிடித்தேயாக வேண்டும்."**

கிட்டுவும், மற்றவர்களும் திகைத்துப் போனார்கள். அவர்கள் இந்தியாவை நம்பியிருந்தவர்கள். அதனால்தான் திகைப்பு.

இதேபோல இன்னொரு முக்கிய சம்பவம். அதுவும் பிரபாவின் வித்தியாச அணுகுமுறைக்கு எடுத்துக்காட்டுத்தான். அதை அடுத்தவாரம் சொல்கிறேன்.

*(தொடர்ந்துவரும்.)*

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது - இராஜதந்திரி

# திருமலையில் திசைமாறிய சமரசம்!

# பல்லவ மன்னர் காலத்தில் பாடல்பெற்ற கோணேஸ்வரம்.

# பிரிட்டிஷ் படையினரின் கல்லறைகளைக் கொண்டிருக்கும் இயற்கைத் துறைமுகம்.

இரண்டாம் உலகப் போரில் உயிர்நீத்த நேச நாட்டுப் படை வீரர்கள் பலரின் கல்லறைகளைக் கொண்ட பிரதேசமே திருகோணமலை.

திருகோணமலைப் பிரதேசத்தின் கேந்திர முக்கியத்துவத்தை பிரிட்டிஷ்காரர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். ஆசியாவின் குறிப்பாக தென்கிழக்காசியாவில் நேச நாட்டுப்படைகளின் ஒரு கொத்தளமாகவே திருகோணமலைத் துறைமுகம் விளங்கியிருந்தது.

திருகோணமலைத் துறைமுகம் இயற்கையாகவே கப்பல்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடிய சூழலைக் கொண்டுள்ளது.

உயர்ந்த மலைப்பாங்கான தரையமைப்பினால் சூழப்பட்டு, ஒரு குடாவைப் போன்ற கடற்பிரதேசத்தை திருகோணமலைத் துறைமுகம் கொண்டுள்ளது.

இந்நிலையில் கப்பல்களை பாதுகாப்பாக திருகோணமலைத் துறைமுகத்தினுள் வைத்திருக்கமுடியும். ஆகாய மார்க்கமான தாக்குதலினாலன்றி எவ்வகையிலும் கடல்மார்க்கமான தாக்குதலொன்றை மேற்கொள்ள முடியாத தன்மையை திருகோணமலைத்துறைமுகம் இயற்கையாகவே கொண்டிருக்கக் காணப்படுகிறது. இதன் காரணமாகவே பிரிட்டிஷ்காரர்கள் தமது கடற்படை, விமானப்படைத் தளங்களை திருமலையில் அமைத்திருந்தனர்.

இதுதவிர நீர்மூழ்கிக் கப்பல்களைக் கூட பாதுகாப்பாக திருகோணமலைத் துறைமுகத்தை அண்டிய பாறைப் பாங்கான பகுதிகளுக்குள் நிறுத்தி வைக்க முடியுமென்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் ஒரு வல்லரசின் கடற்படைக்குகந்த சகல சாதகமான அம்சங்களையும் கொண்டதாகவே திருகோணமலைத் துறைமுகம் காணப்படுகின்றது.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் நேச நாட்டுப்படைகளின் எண்ணெய்க் குதங்களும் திருகோணமலைத் துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்தன.

யுத்தகாலத்தில் படைக்கலங்கள், போர்க்கப்பல்கள், விமானங்கள் என்பனவற்றுக்கு இடையறாது எரிபொருள் தேவைப்படும். இதன் பொருட்டே இராட்சத எண்ணெய்க் குதங்கள் பிரிட்டிஷ்காரர்களினால் திருமலையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் யுத்தமொன்று மூளும் பட்சத்தில் எரிபொருள் சேகரித்துவைக்கப்பட்டிருக்கும் குதங்களும் முக்கிய இலக்குகளாகவே இருக்கும்.

எனவே பாதுகாப்பாக எண்ணெய்க் குதங்களை கொண்டிருக்கக் கூடிய சூழலையும் திருகோணமலை கொண்டிருந்தமையினால் தென் ஆசிய, தென்கிழக்காசிய பிராந்தியத்தில் ஒரு முக்கிய கேந்திரப் பிரதேசமாகவே திருகோணமலை கருதப்பட்டிருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பானிய விமானங்கள் குண்டு வீச்சை நிகழ்த்திய போது திருகோணமலைப் பிரதேசமும் தாக்குதலுக்குள்ளானது. ஆயினும் அத் தாக்குதல்களை எதிர் கொள்ளக் கூடிய தன்மைகளை திருகோணமலைப் பிரதேசம் கொண்டிருந்தது.

இலங்கையில் நிலைகொண்டிருந்த நேச நாட்டுப் படைகள், குறிப்பாக பிரிட்டிஷ் படைகள் தென் கிழக்குப் பிரதேசத்திலிருந்தே அச்சுறுத்தல்களை எதிர் நோக்கியிருந்தன.

ஜப்பானிய விமானங்கள் தென்கிழக்குத் திசையிலிருந்து வந்தே தாக்குதல்களை நடத்தின. எனவே ஜப்பானியர்களின் ஊடுருவல்களை கண்காணிக்கக் கூடிய வகையிலேயே திருகோணமலைத் துறைமுகம் அமைந்திருந்தது.

இரண்டாம் உலக யுத்த காலத்தின் பின்னரே திருகோணமலையின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டது.

ஆனால் திருகோணமலை ஓர் எழில் சூழ்ந்த பிரதேசம் என்பது பன் நெடுங் காலத்துக்கு முன்னரே நிரூபணமாகியிருந்தது.

இந்தியாவில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருகோணமலையின் எழிலையும், அங்கே காணப்படும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் சூழலையும் பத்துத் தேவாரத் திருப்பதிகங்களாகப் பாடியிருந்தார்.

திருக்கோணேஸ்வரர் திருப்பதிகங்கள் என்று திருஞானசம்பந்தரின் அத் தேவாரப் பாடல்கள் அழைக்கப்படுகின்றன.

திருக்கோணேஸ்வரத்தை மட்டுமல்ல வடக்கே மன்னார்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரர் ஆலயத்தையும் திருஞானசம்பந்தர் பாடியிருந்தார்.

எனவே திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகியன இந் நாட்டின் பழம் பெரும் சைவ ஆலயங்கள் என்பதும் இந்த ஆலயங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் பிரிட்டிஷ்காரர்களின் வருகைக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாக விளங்கியிருக்கக் காணப்படுகின்றன என்பதும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் தேவாரப் பதிகங்கள் மூலமாக அறிய முடிகின்றது.

இலங்கையின் இன்றைய அரசியல் சூழலில் கெடுபிடிகளுக்குள்ளாகியுள்ள ஒரு பிரதேசமாகவே திருகோணமலை விளங்குகின்றது.

இலங்கையில் இன ரீதியிலான வன்முறைகள் வெடித்த போது திருகோணமலைப் பிரதேசமும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

திருகோணமலையில் அமைதியாக இருந்து வந்த பல தமிழ்க் கிராமங்கள் காடையர் கூட்டத்தினால் அழித்தொழிக்கப்பட்டிருந்தன.

வீடு வாசல்கள், நிலபுலன்களை இழந்து ஆயிரக்கணக்கில் அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் பலர் திருகோணமலைப் பிரதேசத்திலிருந்தும் அகதிகளாக வெளியேறியிருக்கக் காணப்படுகின்றனர்.

திருகோணமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த அப்பாவித் தமிழ்பேசும் மக்கள் அகதிகளாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். கூடவே கடந்த காலங்களில் இந்தியாவுக்கும் அகதிகளாக திருமலைத் தமிழர்கள் புலம் பெயர்ந்திருந்தனர்.

அண்மைக் காலங்களில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்திய மத்திய அரசும், தமிழக மாநில அரசும் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதில் தீவிர அக்கறை காட்டிவருகின்றன. இலங்கையில் கூட கடந்த ஜனவரி மாதம் முதல் அமுலில் இருந்துவந்த மோதல்தவிர்ப்பு ஒப்பந்தம் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் ஒரு சுமுக நிலையைத் தோற்றுவித்திருக்கக் காணப்பட்டது.

ஆனால் திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர்த்தாக்குதல் மோதல் தவிர்ப்பு நிலையைத்துண்டித்துவிட்டுள்ளதுடன், அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே மீண்டும் விரோதத்தை ஏற்படுத்தியுள்ளது.

எல்.ரி.ரி.ஈ யினரின் திருகோணமலைத் தாக்குதல் ஒரு திடீர் அதிரடியாகவே இருக்கின்றது.

இடிமின்னலுடன் கடும் மழைபெய்து கொண்டிருந்த சமயம், இடியுடன் சேர்ந்த பேரிடியாக பீரங்கிப் படகுகள் மீதான குண்டுத்தாக்குதல் திருமலையில் எதிரொலித்துள்ளது.


தகர்க்கப்பட்ட 'சூரயா'

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு கடற் புலிகள் நீருக்கடியில் சுழியோடிவந்து தமது இலக்குகளை வெற்றிகரமாகத் தாக்கியழித்துள்ளனர்.

இத் தாக்குதல் எல்.ரி.ரி.ஈயினரைப் பொறுத்தவரை ஒரு முக்கிய வெற்றியாக இருக்கலாம். ஆனால் இலங்கை அரசின் சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை இத் தாக்குதல் ஒரு 'திக்குமுக்காட்டத்தை' ஏற்படுத்தியிருக்கக் காணப்படுகின்றது.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்தது. சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க பிரதம மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த வேளையில் புலிகள் மன்னார்க் கடலில் 'சாகரவர்த்தன' என்ற கடற்படை ரோந்துக் கப்பல் ஒன்றை மூழ்கடித்திருந்தனர். அத் தாக்குதலில் கடற் படையினர் பலர் கொல்லப்பட்டதுடன், அந்த ரோந்துக் கப்பலின் காப்டனான அஜித் போயாகெயவும் புலிகளின் கைதியானார்.

'சாகரவர்த்தன' தாக்குதலையடுத்து தற்போது பீரங்கிப் படகுகளான 'சூரயா', 'ரணசுரு' ஆகியன புலிகளினால் தகர்க்கப்பட்டுள்ளன.

இத் தாக்குதலிலும் கடற் படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் தாக்குதலை நடத்திய நான்கு எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களும் உயிரிழந்துள்ளனர்.

எல்.ரி.ரி.ஈயினருக்கும், அரசபடையினருக்குமிடையிலான மோதல்களில் தரைப் படையினர் மட்டுமல்ல கடற் படையினரும் பெருமளவு இழப்புகளைக் கொண்டிருப்பதனையே மன்னார்க் கடலில் சாகரவர்த்தன கப்பல் தாக்குதல், மற்றும் திருகோணமலைத் தாக்குதல் என்பன புலப்படுத்துகின்றன.

இவை தவிர கடந்த காலங்களில் வட பகுதிக் கடல்பிரதேசத்திலும் கடற்படைக் கலங்கள் சிலவற்றை புலிகள் தாக்கியழித்திருந்தனர்.

திருமலைத் தாக்குதல் அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நான்காவது சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்த பின்னர் இடம் பெற்றுள்ளது.

திருமலையில் கடற்கரும்புலித் தாக்குலைத் தொடர்ந்து பரவலான முறையில் புலிகளது தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்ந்துள்ளன.

சந்திரிக்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நான்கு சுற்றுப் பேச்சுக்களிலும் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் ஏற்படவில்லை. கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய முக்கியமான விடயங்கள் அணுகி ஆராயப்படவில்லை. அதன் பிரதிபலிப்பே இரு தரப்பின் மத்தியிலும் ஏற்பட்ட விரிசலாகும்.

அந்த விரிசலின் தொடர்ச்சியே போர் இடைநிறுத்த முறிவும், தற்போதைய மோதல்களுமாகும்.

எது எப்படியிருந்த போதிலும் இரு தரப்பு மோதல்கள் பரவலாகிய போதும் சந்திரிக்கா அரச சமாதான முயற்சி பற்றி மீண்டும் வலியுறுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

அரசியல் ரீதியான சமாதான முயற்சிக்கான கதவுகளை மூடவில்லை என்று அரசு கூறியிருப்பது சமாதானத்தில் ஆர்வமுள்ள அனைவராலும் நிச்சயம் வரவேற்கப்படும்.

அதேசமயம் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் தொடரும் நிலையில் பாதுகாப்பு படையினரை பதில் தாக்குதலுக்கு செல்லாமல் தடுப்பதும் அரசுக்கு சிரமமான காரியமேயாகும்

இருந்த போதிலும் முழு அளவில் எத்தகைய நிலையிலும் படையினர் கட்டுமீறாது இருப்பதனையும் ஜனாதிபதி சந்திரிகா உறுதி செய்ய வேண்டியவராகின்றார்.

மறுபுறத்தே தமிழீழ விடுதலைப் புலிகளும் நாசகார யுத்தமொன்று மீண்டும் தலையெடுப்பதை தவிர்க்க வேண்டியவர்களாகின்றனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றும்படி கடந்த ஏப்ரல் 19ந் திகதி வரை எல்.ரி.ரி.ஈயினர் காலக் கெடு விதித்திருந்தனர்.

ஆனால் இக் காலக்கெடு குறித்த அறிவிப்பை அரசு தரப்பினர் எவ்வளவு தூரம் மிக அவதானமாகக் கவனத்திலெடுத்தனர் என்பது புரியவில்லை.

ஆனால்புலிகள் தாம் தெரிவித்தவாறே குறித்த தினத்தில் அதாவது ஏப்ரல் 19ந் திகதியன்று தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இந்நிலையில் எதிர் காலச் சமாதானப் பேச்சுக்கள் குறித்த அணுகுமுறைகளை சந்திரிகா அரசு முற்றுமுழுதாக பரிசீலனை செய்து, குறைநிறைகளை நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியமானதாகின்றது.

திருமலைத் தாக்குதல் இந்த நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களையும் உலுப்பிவிட்டுள்ளது.

மீண்டும் ஒரு கெடுபிடி யுத்தம் ஏற்படுவதை முழுநாடுமே வெறுக்கின்றது.

சுழிக்காற்றில் சிக்கிய படகு போல சமாதான முயற்சியானது தத்தளித்து நிற்கின்றது.

எனவே சமாதானமும் ஒரு மூழ்கடிக்கப்பட்ட படகாகிவிடக் கூடாதென்பதே இந் நாட்டவரின் பிரார்த்தனையாக இருக்கின்றது.

> தாயினும் நல்ல தலைவரென் றடியார்
> தம்மடி போற்றிசைப் பார்கள்
> வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
> மாண்பினர் காண்பல வேடர்
> நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
> நுழைதரு நூலினர் ஞாலம்
> கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
> கோணமா மலையமர்ந் தாரே—
>
> திருஞான சம்பந்தர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கென்னடியின் காதலிகள்

4

வாரத் தொடர்

## அந்தப் பெண் நிருபரை அழைத்தார் கென்னடி.
## "உனக்கொரு முக்கிய செய்தி தருகிறேன். தனியேவா. இன்று மாலையே வா!"
## காத்திருந்தது இன்ப அதிர்ச்சி!



ஜோன் மான்ஸ்ஃபீல்ட்

உளவுத் துறை எச்சரிக்கையை ஜனாதிபதி கென்னடியின் காதில் போட்டது.

அத்தோடு அழகியும், ஹொலிவூட் நடிகையுமான ஜூடித் மீதான கென்னடியின் காதல் உறவும் கத்தரிக்கப்பட்டது.

ஜூடித் கோபப்பட்டாள். "என்னையா ஓரம் கட்டிவிடப் பார்க்கிறீர்கள்?" என எரிச்சல் கொண்டாள்.

பத்திரிகையாளர்களை அழைத்தாள்.

"டியர் நிருபர்களே! உங்கள் ஜனாதிபதி ஆட்சிக் கட்டிலில் மட்டுமல்ல, அரவணைக்கும் ஆனந்தக் கட்டிலிலும் அட்டகாசப்படுத்தக் கூடியவர் என்பது தெரியுமா?"

"தெரியாது; உங்களுக்கு எப்படித் தெரியும்?"

ஜூடித் அமர்க்களமாகப் புன்னகைத்தாள், அதிரடியாகப் பதிலளித்தாள்.

"அரவணைத்தமையால்-அரவணைக்கப்பட்டமையால்-இருவரும் இரவுகளை இனிதாகப் பகிர்ந்து கொண்டமையால்".

"உண்மையாகவா?"

கமராக்கள் பளிச்சென்று பிரகாசித்து அவளை உள்வாங்கிக் கொண்டன. ரேப் ரெக் கோடர்கள் அவள் சொன்னதை வாங்கிப் பத்திரப்படுத்தத் தொடங்கின.

"என்ன கேட்டீர்கள்?"

"உண்மையாகவா?"

"உங்கள் சந்தேகத்தை ஒரு பூச்சியைப் போல் நசித்துப் போடுங்கள்! ஒரு முறையல்ல; இருபது முறை வெள்ளை மாளிகை கட்டிலறை எங்கள் இருவர் பாரத்தையும் சுமந்திருக்கிறது."

"ஆதாரம்?

"ஓ...சொன்னால்தான் நம்புவீர்களோ? சொல்கிறேன், வெள்ளை மாளிகையின் தொலைபேசிப் பதிவேட்டை பாருங்கள்."

"அதில் என்ன இருக்கிறது?"

"1961 மார்ச் முதல் 1962 மார்ச் வரை கென்னடியோடு நான் 70 தடவை ஃபோனில் பேசிய ஆதாரம் தெரியும். 70 தடவைகளில் ஒரு முறைகூட அரசியல் பேசியது கிடையாது. பேசியதெல்லாம் சரசவியல் தான்."

ஜூடித் அட்டகாசமாக நகைத்தாள். பத்திரிகையாளர்கள் வெள்ளை மாளிகை தொலைபேசி பதிவேட்டை தேடித் துருவி ஜூடித் சொன்னது கலப்படமற்ற உண்மை என்று கண்டறிந்தார்கள்.

❑❑❑

கென்னடிக்கு அன்று பிறந்த நாள். அமெரிக்க ஜனாதிபதியின் பிறந்த நாள் என்றால் பிரபலங்களின் வருகைக்கு குறைச்சல் இருக்குமா? குவிந்தனர்.

கலகலப்பான விருந்துகள் முடிய நள்ளிரவும் மெல்ல வந்து நல்வாழ்த்துச் சொன்னது.

விருந்து மண்டப வாயிலில் சட்டென்று ஒரு மின்னல்.

கண்ணைப் பறிக்கும் மின்னல்.

பிரபலங்களின் திறந்த விழிகள் மூட மறந்தன.

குண்டூசி விழுந்தாலும் கேட்குமளவுக்கு திடீர் அமைதி.

இத்தனைக்கும் காரணம் வந்த மின்னலின் பெயர்,

மர்லின் மன்றோ!

ஹொலிவூட் திரையுலகின் தங்க மீன்.

கோடி கோடியான இரசிகர்களின் தினசரி தூக்கத்தில் நுழைந்து வதைத் தெடுக்கும் கனவு மோகினி.

மர்லின் என்றால் போதை என்று புதிய அகராதியே உருவாகியிருந்தது.

அதே மர்லின்! அதே கனவு மோகினி!

அதுவும் கனவில் அல்ல, கண் எதிரில்!

பிரபலங்கள் வாய் பிளந்து நிற்க, கென்னடி,

"வெல்கம்"

என்றார், மர்லினை தன் விழிகளால் ஆழமாய் அலசியபடி!

விருந்து மண்டபத்தின் மத்தியில் இருந்த மேடையில் மர்லின் ஏறினாள்.

"மாட்சிமைமிக்க அமெரிக்க ஜனாதிபதி அவர்களுக்கு என் இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள் மட்டுமல்ல என் நடனமும் உண்டு. இதோ!"

நடனம் ஆரம்பித்தது.

பிரபலங்களின் இதயங்கள் மர்லினை நோக்கி நகர ஆரம்பித்தன.

கென்னடியின் விழிகள் மர்லினின் மீதே மொய்த்துக் கிடந்தன.

அழகு அசைந்தது; அதன் அழகுகள் அசைந்தன.

நடனமா அது? சொர்ப்பன அழகியின் மோக வலை வீச்சு! காமன் விடு தூது!

கென்னடி தீர்மானித்தார்.

"இந்த மயக்கும் தேவதையை தனிமையில், மணிக்கணக்கில் ஆராய வேண்டும்."

நடனம் முடிந்தது! நயன விழிகளால் விடைபெற்றுச் சென்ற மர்லினுடன் கென்னடியின் ஏக்கப் பெருமூச்சும் கூடவே சென்றது.





மர்லின் மன்றோ

**தருவது ரசிகன்**

ஏக்கத்தை ஏன் மறைக்க வேண்டும்? மர்லின் - கென்னடி உறவு மலர்ந்தது.

ஹொலிவூட் தாரகை அமெரிக்க ஜனாதிபதியின் மார்பில் தவழ்ந்தாள்.

"மர்லின் நீயில்லாமல் நானில்லை!"

"நானும் தான்-தாங்கள் இல்லாமல்....."

காதலின் சிகரத்தில் கட்டில் சந்திப்பு.

'ஜாக்குலினை மறந்துவிடுவார் கென்னடி' என்று நம்பினாள் மர்லின்.

கென்னடி - மர்லின் காதல் லீலைகள் உலகெங்கும் பத்திரிகைகளுக்கு சுடச் சுட செய்திகளாகின.

1962 ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி-மர்லின் மன்றோ -

மயங்க வைக்கும் மதனராணி-

திடீரென்று மரணமானாள்.

தற்கொலை என்று செய்திகள் சொல்லின.

எனினும் மர்லின் மரணம் பற்றிய சந்தேகங்கள் இன்றுவரை தொடர்கின்றன.

சந்தேக நிழலில் ஒரு பகுதி கென்னடி மீதும் விழத்தான் செய்தது. ஆனால், பாதிக்கவில்லை

❑❑❑

மர்லினின் மரணத்தின் பின்னரும் ஹொலிவூட் கனவு ராணிகள் இருவர் அமெரிக்க ஜனாதிபதியின் கரச் சிறைக்குள் சரசம் புரிந்தனர்.



அஞ்ஜி டிக்கின்சன்

அஞ்ஜி டிக்கின்சன், ஜேன் மான்ஸ்ஃபீல்ட் என்னும் அந்த இரு நடிகைகளும் கென்னடியோடு கூடிக் களித்ததைப் பகிரங்கமாகவே கூறிக் கொண்டனர்.

ஜேன் மான்ஸ்ஃபீல்ட் 1967 இல் ஒரு விபத்தில் சிக்கி செத்துப் போனாள்.

அதற்கு சில வாரங்களுக்கு முன்னர் "கென்னடியோடு மூன்று வருடங்கள் இனிய நெருக்கம் இருந்தது" என்று சொல்லியிருந்தாள்.

❑❑❑

கென்னடி எங்கு சென்றாலும் கூடவே இரு அழகிகள் செல்வார்கள்.

எந்த நாட்டுக்குச் சென்றாலும் கென்னடியின் படுக்கையறைக்கு அருகிலேயே அந்த அழகிகளுக்கும் அறை ஒதுக்கப்படும்.

இரண்டு அழகிகளில் ஒருத்தியை 'ஃபிடில்' என்றும், இன்னொருத்தியை 'ஃபடல்' என்றும் கென்னடிக்கு நெருக்கமானவர்கள் அழைப்பார்கள்.

1962ல் ஒரு நாள், நசவ் நகரில் ஒரு மாநாடு.

பிரிட்டன் பிரதம மந்திரி ஹரோல்ட் மக்மிலன், பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஆர்.ஏ.பி. பட்லர் ஆகியோரோடு கென்னடியும் கலந்து கொண்டார்.

மாநாட்டின் நடுவில் கென்னடி சோர்வாய் காணப்பட்டார்.

"ஏன் சோர்வாக இருக்கிறீர்கள்?"

கேட்டது பிரிட்டன் பிரதமர்.

"தலைவலி!"

"மருத்துவரை அழைக்கட்டுமா?"

பிரதமர் கேட்க, கென்னடி தனக்கு தேவையான மருந்தின் இரகசியத்தை சொன்னார்,

"எந்த மருந்தாலும் எனது தலைவலியைப் போக்க முடியாது. ஆனால்...."

"ஆனால்...?"

"அழகி ஒருத்தி அருகில் இருந்தால் தலைவலி என்னை அவளிடம் ஒப்படைத்துவிட்டுப் போய்விடும்."

நசவ் நகர் மாநாட்டில் கென்னடியோடு ஃபிடிலும், ஃபடலும் கூடவே இருந்தனர்.

❑❑❑

பத்திரிகையாளரான ஒரு பெண் மணிக்கு கென்னடி கொடுத்த அதிர்ச்சி சுவாரசியமானது.

அன்று பத்திரிகையாளர் மாநாடு. நிருபர்கள் கேள்விகள் தொடுத்து விடை பெற்று செல்லத் தொடங்க, அந்தப் பெண் நிருபரை அழைத்தார் கென்னடி.

"மிக முக்கியமான செய்தி ஒன்று இருக்கிறது. நீ மட்டுமே அறிய விரும்பினால் என்னை இன்று மாலை வந்து பார்!"

பெண் நிருபருக்கு மகா சந்தோசம். மாலையானதும் கென்னடியைப் பார்க்க ஓடினாள். 'என்ன செய்தி அது?' ஒரே ஆவல்.

கென்னடியின் அறைக்குள் சென்ற பெண் நிருபருக்கு கென்னடி கொடுத்தது செய்தியல்ல, இன்ப அதிர்ச்சி!

❑❑❑

கென்னடி காதல்லீலைகளில் தீவிரம் காட்டிய போதும் அமெரிக்காவின் ஜனாதிபதிப் பதவியை தனது புத்தி சாலித்தனத்தால் உலகம் வியக்க நிர்வகித்தார்.

பெண்களை விரும்பும் அவரது குணம் சிறந்த தலைவர் என்ற தகுதியை சேதம் செய்யவில்லை.

இன்றும் கென்னடி அமெரிக்காவின் மறைந்த ஜனாதிபதிகள் வரிசையில் முக்கிய இடத்தில் தான் இருக்கிறார்.

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## அல்சர் நோயை குணப்படுத்த......

வயிற்றுப் பூச்சி, வாயுத்தொல்லை, அஜீரணக் கோளாறு, வயிற்றுப் புண் எனப் பலவகை வயிற்றுவலி நமக்கு ஏற்படுகின்றது. மற்ற வயிற்று வலிகள் மருந்துகள் மூலம் உடனடியாகக் குணமடைந்து விடும். குடற் புண் (அல்சர்) அவ்வளவு எளிதில் குணமடைவதில்லை. இந்த நோயை உணவின் மூலம் படிப்படியாகக் குறைக்கலாம்.


புகை பிடித்தல், மது அருந்துதல், காரமான உணவுகளை அதிகமாகச் சேர்த்தல் ஆகியவற்றால் அல்சர் உண்டாகிறது.

அல்சர் எனப்படும் குடற்புண் ஏற்பட்டால் பசி தாங்க முடியாது. வயிறு எரிச்சலும் அதிகமாக இருக்கும். வாந்தி, மயக்கம் போன்றவை உண்டாகும்.

அடிக்கடி பசி ஏற்படும். நாளடைவில் இது உடலையும் தாக்கும். முதுகுவலி, உடல் உளைச்சல், சோர்வு போன்றவை ஏற்படும்.

இதைக் குணப்படுத்த கோப்பி, தேனீர் போன்றவற்றைத் தொடாதீர்கள். தினமும் காலையில் காய்ச்சாத பசும்பால் குடிக்கலாம். பாலைக் கறந்தவுடன் குடிக்க வேண்டும். சூடான உணவைச் சாப்பிடக்கூடாது.

அவசர அவசரமாகச் சாப்பிடக்கூடாது. தயிர், மோர், பால் இவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்தால் விரைவில் குணமாகும்.



எண்ணெய்ப் பலகாரம் உண்ணக் கூடாது. பழச்சாறு, மோர், இளநீர் ஆகியவற்றைக் குடிக்கலாம். கீரைவகைகளை வேக வைத்துச் சாப்பிடலாம்.

## முகத்தை மூடிக்கொண்டு தூங்குவது சரியா?



தூக்கத்தின் போது குழந்தைகளை பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? ஒவ்வொன்றும் ஒருவிதம் என்பது போல பல வித போஸ்களில் தூங்கிக் கொண்டிருக்கும். சில குழந்தைகள் தவளை போல கால், கைகளை உள்பக்கம் மடக்கி தூங்கும். சில குழந்தைகள் முகத்தை மூடினால்தான் தூங்கும். சிலர் தலையணையை முகத்தில் அமுத்திக் கொண்டு தூங்குவார்கள். இந்த பழக்கம் பெரியவர்களான பின்பும் நீடிக்கிறது.

குழந்தைகள் தூங்கும் போது அவர்கள் மூச்சு சீராக உள்ளதா, மூக்கில் காற்றுப் புகாமல் தலையணை, போர்வை தடையாக உள்ளதா என கண்காணித்து தடையை அகற்றுதல் அவசியம்.

நமக்கு உயிர் வாழ மிகமிக அவசியமானது ஒக்சிஜன் தான். அதுதான் இரத்த ஓட்டத்தில் கலந்து நாம் உயிர் வாழ காரணமாய் உள்ளது. ஒக்சிஜன் இல்லையென்றால் மூச்சு நின்று விடும். மூச்சுத் திணற இரத்த ஓட்டம் நின்று விடும். இந்த ஒக்சிஜன் எப்படி கிடைக்கிறது? காற்று மூலமாகதான் கிடைக்கிறது. மூக்கு வழியாகவும், சில சமயங்களில் வாய் வழியாகவும் காற்றை இழுத்து இழுத்து உள்ளே அனுப்பி வெளியே விடுகிறோமே இந்தக் காற்றுத்தான் நமக்கு முழுக்க முழுக்க ஒக்சிஜனை தருகிறது.

இந்தக் காற்று மூக்கின் சுவாச குழாய், தொண்டை குழாய் வழியாக செல்கிறது. தொண்டை, மூக்கில் ஏதாவது உணவு துகள்கள், மணி போன்ற சிறு பொருட்கள் சிக்கிக் கொண்டால் காற்று செல்வது தடைபட்டு மூச்சுத் திணறி விடுகிறோம். அதே போல விபத்தில் அடிபட்டு இருக்கும் போதும், நீரில் மூழ்கும் போதும் மயக்கமடைகின்றனர். அப்போது இவர்களுக்கு ஒக்சிஜன் குறைந்து விடுகிறது.

இப்படி ஒக்சிஜன் குறைந்த மறு நிமிடம் உயிர் போய் விடும். இதைத் தடுக்க பயன்படுவதுதான் செயற்கை சுவாசமுறை. இயற்கையான சுவாசத்தை ஏற்படுத்த இந்த செயற்கை சுவாசம் பயன்படுகிறது. செயற்கை சுவாசம் மூலம் மருத்துவமனை போகும் வரையில் இயற்கை சுவாசத்தை ஏற்படுத்தலாம். இப்படி செயற்கை சுவாசத்தினால் உடலில் உள்ள ஒக்சிஜன் பற்றாக்குறை தீர்ந்து ஒக்சிஜன் அளவு சீராகிவிடும்.

செயற்கை சுவாசம் கொடுப்பது எப்படி?

•மூச்சு விட முடியாமல் திணறுபவரை நேராக, படுக்க வைக்க வேண்டும்.

•தலையைத் தூக்கி மேலும் கீழுமாக அசைக்க வேண்டும். சுவாசக் குழாயில் அடைப்பு இருந்தால் நீங்கி விடும்.

•ஒரு கையால் தாடையைப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கை கட்டை விரல் மற்றும் அடுத்த விரலை வைத்து அவரது மூக்கைப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

•அவர்து தலையை பக்க வாட்டில் திருப்பி வாயில் ஏதாவது உணவுப்பொருள் துகள் உள்ளதா என்று ஒரு விரலால் துடைக்க வேண்டும்.

•பின்னர் வாயில் நீண்ட காற்றை உள்வாங்கிக் கொண்டு அப்படியே நோயாளியின் வாயில் வாய் வைத்து காற்றை செலுத்த வேண்டும். இப்படி தொடர்ந்து 5 முறை செய்தால் நோயாளிக்கு மூச்சு வரும். உடனடியாக டாக்டரிடம் சென்று விடலாம்.

•குழந்தைகளுக்கும் இதேபோல செய்யலாம். வாயில் வாய் வைத்து உள்ளே காற்றை செலுத்தும் போதும், காற்றை வெளியேற்றும் போதும் கடுமையாக ஊதக் கூடாது. அது குடலை பாதித்து விடும்.

•ஒக்சிஜன் உள்ளே சென்று சீரானதும், பின்னர் தலைகுப்புற படுக்க வைத்து குழந்தை தானாக மூச்சு விட செய்யலாம்.

இன்னொரு முறையும் உள்ளது:

•நோயாளியை ஒரு போர்வை மேல் மல்லாக்க படுக்க வைக்க வேண்டும். பின்னர் தலைமாட்டில் நீங்கள் முழங்காலிட்டு முழங்கால்கள் நடுவே அவர் தலையை அமுத்தி பிடித்துக் கொள்ள வேண்டும்.

•அவர் கைகளை அவர் மார்பில் வைத்து நுரையீரல் மீது-அதாவது, மார்பு மீது வைத்து இரண்டு மூன்று முறை அமுத்த வேண்டும்.


•பின்னர் அவர் கைகளை உங்கள் கைகளால் பிடித்து 'ஹான்ட்ஸ் அப்' நிலைக்கு கொண்டுவர வேண்டும். நாடித் துடிப்பை அப்போது பாருங்கள், சீராகும். சீராகும் வரை இந்த முறையை 5 முறை செய்யலாம். அதற்கு பலன் கிடைக்கும்.

எந்த முறையுமே நன்கு செய்து பார்த்து பயிற்சி செய்து கொண்டால் தான் சரியாக செய்ய முடியும். முதல் உதவி பயிற்சி நிலையங்களில் சேர்ந்து இந்த பயிற்சிகளை கற்கலாம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

தகவல் பெட்டி

## தந்தைக்குப் பின் தனயன்





சாண் உயரமுள்ள அணிலால் சாகசம் செய்ய முடியுமா? முடியும் என்று நிரூபிக்க விரும்பினார் மிஸ்டர் பேட்ரண்ட். மிருகங்களை சாகசம் செய்ய பழக்கும் பயிற்சியாளர்தான் பேட்ரண்ட். நீருக்குள் சறுக்கும் விளையாட்டை அணில்களுக்குப் பயிற்றுவித்தார். ஒரு அணில் மட்டும் தேறியது. ஆனால் சறுக்கு விளையாட்டின் இடையே அது தாக்கு பிடிக்காமல் உயிரை விட்டது. பேட்ரண்ட் தளரவில்லை.

உயிரைவிட்ட அணிலின் பிள்ளையை பிடித்துவந்து பயிற்சியளித்தார். படத்தில் இருப்பதுதான் அந்த குட்டி அணில். பயிற்சியில் தேறி சாகசம் செய்து கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது. இது தொடர்ந்திருந்தால் பேட்ரண்ட் உலகையே அசரவைத்திருப்பார். ஆனால் அவரது கெட்ட நேரமோ அணிலின் கெட்ட காலமோ சாகசம் செய்யும் போது கழுத்து முறிந்து இந்த அணிலும் செத்துப் போய் விட்டது.

## பயமறியா சிறு பறவை

படத்தில் இருப்பது புலிபோலத் தெரிந்தால் அது தப்பு. திருவாளர் பூனையார்தான் பசிக் களைப்பால் கொட்டாவி விடுகிறார்.

எதிரே நிற்கும் சிறு பறவை எந்த நேரமும் பூனையாரால் கவ்வப்படலாம். இளம் கன்று பயமறியாது. சிறு பறவைக்கு பூனையின் சுயரூபம் தெரியவில்லை. இந்த தத்ரூப காட்சியை கண்ட கமிராக்காரர் விடுவாரோ? கிளிக்! பூனைக்கு கொட்டாவி அழகோ?

## மீறப்பட்ட மோதல் தவிர்ப்பு

கரும் ட்ரெயிலர் தாக்குதல்




சினிமா படக் காட்சி போல இது நிஜக் காட்சி! இலண்டன் ஸ்காபுரோ வீதியில் வாகன நெரிசல்! மோதல் தவிர்ப்பு வீதிப் போக்குவரத்து விதிகள் மீறப்பட்டதால் நேர்ந்த விபரீதம். இரு பெரிய கனரக (ட்ரெயிலர்) வண்டிகள் நடுவே சிறிய கார் சிக்கிக் கொண்டது. இடியென்றால் இடிதான். அதிர் இடித் தாக்குதல். சாரதி தப்பியதுதான் ஆச்சரிய சம்பவம்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# 99


ஷில்பா ஷெட்டி
படம்-மின்ட் ரோமியோ

## கரிஷ்மாவின் கவர்ச்சி

பம்பாயிலிருந்து வரும் சினிமா இதழ் ஒன்றுக்கு கரிஷ்மா கபூர் பேட்டி கொடுத்துள்ளார். "ஆரம்பத்தில் சினிமா உலகம் திரும்பிப் பார்த்து நகைத்தது. இப்போது எனக்காக காத்திருந்து வியக்கிறது" என்று கூறியுள்ளார் கரிஷ்மா.

"நீலக் கண்கள், மெலிந்த உடல் என்றெல்லாம் என்னைப் பற்றி அபிப்பிராயம் தெரிவித்தார்கள். இப்போது எனது கவர்ச்சியான தோற்றத்தைக் கண்டு திகைத்துப் போய் நிற்கிறார்கள். எனது திரையுலக வெற்றி சுலபமாகக் கிடைக்கவில்லை. அதனால் இன்று வெற்றியை அனுபவிப்பதில் அலாதி சுகம்" என்கிறார் கரிஷ்மா. கரிஷ்மா நீங்கள் சொல்வது நிஜம்!

## கதை மாறியது

பசும்பொன் படத்தில் முதலில் இரட்டை வேடத்தில் பிரபு நடிப்பதாகவே அறிவிக்கப்பட்டது. சிவாஜியின் பேரனும் மகனுமாக பிரபு நடிப்பதாக இருந்தது. அதற்கேற்ப மேக்கப் போட்டு சில காட்சிகளும் எடுத்துவிட்டு, சத்தமில்லாமல் கதையை மாற்றிவிட்டார் பாரதிராஜா.

தற்போது படம் திரைக்கு வந்துவிட்டது. பிரபுவுக்கு இரட்டை வேடம் கிடையாது.

## இமயம் பூரண சுகம்

இதய அறுவைச் சிகிச்சை முடிந்து வீட்டில் படு குசியாக இருக்கிறார் சிவாஜி. முன்னைவிட இப்போது உற்சாகமாக இருப்பதாக தனது நண்பர்களிடம் கூறியபடி மகிழ்ச்சியோடு காணப்படுகிறார். இமயம் வாழ்க.

## நக்மா நனைந்தார்

சத்யராஜ் ஜோடியாக 'வில்லாதி வில்லன்' படத்தில் நடித்துவரும் நக்மாவை 12 மணிநேரம் மழையில் நனைய வைத்துவிட்டனர். நனைய வைத்தது ஒரு பாடல் காட்சிக்காக. நக்மா நனைய, சத்யராஜ் அணைக்க பாடல் காட்சி பிரமாதமாக வந்த திருப்தியில் இருக்கிறார் தயாரிப்பாளர் ராமநாதன். மழையில் நனைந்தாலும் ஜலதோஷம் வராமல் இருப்பதற்கு சில வழிகள் தெரிந்துகொள்ள இன்றே நாடுங்கள் நக்மாவை.

## பசும்பொ...

சித்திரை

சித்திரைப் புத்தாண்டுக்கு திரைக்கு வந்துள்ள புதிய பட... சிவாஜி -பிரபு - சிவகுமார் - ராதிகா- இயக்கம் - பாரதி... 'எல்லாமே என் ராசாதான்' (ராஜ்கிரண்- சங்கீதா) ...

## தீபாவளி...

இயக்குநர் பாலசந்தர் தயாரிக்க, கே.எஸ்.ரவிக்குமார் ... ஆரம்பமாகிறது.
கிராமத்து இளைஞனாக ரஜினிகாந்த் நடிக்கிறார். ... படப்பிடிப்புக்கள் நடைபெறவுள்ளன.
நகைச் சுவைக்கு முக்கியத்துவமளித்து உருவாக்கப்பட... தினத்தன்று திரைக்கு வரும்.

## நாசர் - ஊர்வசி ஜோடி
## ஆரம்பம் அ...

நாசர் - ஊர்வசி ஜோடியாக நடிக்க சித்திரை புத்தாண்டில் பூ... படம் 'அருவா வேலு'.
ஒரு ஆண்டுக்கு முன் தமிழ்நாட்டில் நெல்லை மாவட்... என்பவரின் கதைதான் படமாகிறது.
மன்சூர் அலிகான், சந்திரசேகர், கவுண்டமணி, செந்தி... வி.கே.ராமசாமி ஆகியோரும் நடிக்கவுள்ளனர்.
'சீவலப்பேரி பாண்டி' போல 'அருவா வேலு'வும் பரபர... பூஜையன்றே விற்பனையாகிவிட்டது.

## மோகம்

முழங்கால் வரைக்கும்
மூடிய ஆடை
மோகம் தரவில்லையா
— அவன்

முன்வரும் ஜாடையும்
பின்வரும் வாடையும்
வேகம் தரவில்லையா
— அவள்

மோகம் வரவில்லையா?

கவியரசு
கண்ணதாசன்


கோவிந்தா

## அர்ஜுன் - விஜயச...

அர்ஜுன் - வி... நடித்துவரும் 'தா... படத்தின் பட... நடைபெற்றுவருகிற... 'செங்கோட்டை' பட... மணிக் கொடி' திர... அடி தடி மன்னனும் ... நடிக்கும் படம் ... எதிர்பார்ப்பு இருக்கி... 'விஜயசாந்தி' நீண்ட... நடிக்கும் தமிழ் திரை... ஈடுபாட்டோடு ஒத்... வருகிறார்.

## 'அஞ்சலி...

மணிரத்னம் இயக்கி... 'மொட்டைமாடி ... பாடலுக்கு ஆடிய ... இருக்கிறதா? அவள... 'காணவில்லை' என்... நினைப்பவர்களுக்கு ... ஒரு தகவல். இந்திப் ... தற்போது நடித்து ... அஞ்சலி. கைவசம் ... படங்கள் இருப்பதா... சொல்லுகிறார். நம... கீதாஞ்சலி விடுத்த... மற்றொரு முக்கிய ... அறிவித்தல்- "கவர்... நடிக்கவும் நான் த...

# சி னி வி சி ட்

## மினி சினி

- பிரபு நடிக்கும் 'பெரிய குடும்பம்' படத்தில் கதாநாயகிகளாக நடிப்பதற்கு முதலில் வினிதாவும், ரஞ்சிதாவும் ஒப்பந்தமானார்கள். பின்னர் ரஞ்சிதாவுக்குப் பதிலாக சுகன்யா நடிப்பதாக இருந்தது. தற்போது குஷ்பூவும், வினிதாவும் நடித்து வருகின்றனர்.
- 'பம்பாய்','கவி' ஆகிய படங்களில் நடனமாடியுள்ள பிரபு தேவாவின் தம்பி நாகேந்திர பாபு, ரகுவரன்-ரேவதி ஜோடியாக நடிக்கும் 'தொட்டாச்சிணுங்கி' என்ற படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடிக்கிறார்.
- ரஜினி-மம்முட்டி நடித்து வெற்றி பெற்ற 'தளபதி' இந்தியில் 'தள-பதி' என்ற பெயரில் மொழிமாற்றம் பட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து கமல் நடித்த 'நாயகன்' இந்தியில் 'வேலுநாயகன்' என்ற பெயரில் மொழிமாற்றமாகிறது.
- கன்னட சூப்பர் ஸ்டார் விஷ்ணுவர்த்தனுக்கு ஜோடியாக கன்னடத்தில் சித்தாரா முதன் முதலாக நடித்து வெற்றி கண்ட 'ஹாலுண்ட தவரு' என்ற படம் தமிழில் 'பெண்ணின் பெருமை' என்ற பெயரில் வரவிருக்கிறது.
- தனது தந்தை தியாகராஜனின் இயக்கத்தில் 'ஆணழகன்' படத்தில் நடித்துள்ள பிரசாந்த், அடுத்து நடிக்கும் படம் 'வைரம்'. இந்தப் படத்தையும் தியாகராஜனே இயக்கவுள்ளார்.
- புத்தாண்டுக்கு வெளியான 'ஆகாய...' படத்தை இயக்கிய பிரதாப் ... அடுத்து சத்யராஜ்-மீனா நடிக்கும் 'மாமன் மகள்' படத்தில் வித்தியாசமான வேடமொன்றில் நடிக்கவுள்ளார்.
- நடிகை ஊர்வசியைத் தொடர்ந்து மோகன்லாலும் மலையாளப் படம் ஒன்றிற்குக் கதை எழுதுகிறார். இந்தப் படத்தைப் பிரபல மலையாள இயக்குநர் பிரியதர்ஷன் இயக்குகிறார்.
- 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் நாயகி சங்கீதா இப்பொழுது 'புள்ளகுட்டிக் காரன்', 'மாண்டா' ஆகிய இரு தமிழ் படங்களிலும், இரண்டு மலையாளப் படங்களிலும் நடித்து வருகிறார்.
- எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தயாரிக்க, கமல் தெலுங்கில் நடிக்கும் 'சுபசங்கல்பம்' படத்தில் முதன் முறையாக சிறிய வேடமொன்றில் நடிக்கிறார். இப்படத்தின் இயக்குநர் கே. விஸ்வநாத்.
- 'காதலன்' படத்தை அடுத்து கே.டி. குஞ்சுமோன் தயாரிக்கும் இளம் புதுமுக கதிர் இயக்கும் படத்திற்கு 'காதல் தேசம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. முற்றிலும் புதுமுகங்கள் நடிக்கும் இப்படம் ... ரூபாய் செலவில் தயாரிக்கப்படுகிறது.

## மனோரமாவுக்கு 'டாக்டர்' பட்டம்?

ஏறக்குறைய 30 ஆண்டுகாலமாக நடித்து வருகிறார் மனோரமா. 1500 படங்களுக்கு மேல் நடித்து விட்டார்.

'பொம்பளை சிவாஜி' என்று போற்றப்படும் மனோரமாவுக்கு டாக்டர் பட்டம் வழங்குவது பற்றி தமிழ்நாட்டு பல்கலைக்கழகம் ஒன்று யோசித்து வருவதாகத் தகவல்.

சிவாஜி கணேசனுக்கு ஏற்கனவே டாக்டர் பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விஜயகாந்த்
படம்-திருமூர்த்தி


ரம்பா
படம்-செங்கோட்டை

www.padippakam.com

## ...ான் – கூலி

### ...வெளியீடுகள்

...படங்கள், 'படிக்கிற வயசுல' (பாண்டியராஜன் – காவேரி) 'பசும்பொன்' ...ாரதிராஜா) 'கர்ணா' (அர்ஜுன் – வினிதா) 'கூலி' (சரத்குமார் – மீனா) ...என் பொண்டாட்டி நல்லவ' (நெப்போலியன் – குஷ்பு)

## ...க்கு 'முத்து'

...இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிக்கும் 'முத்து' ஜூன் மாதம் படப்பிடிப்பு ... கிராமப் பகுதிகளில் ...ள்ள 'முத்து' தீபாவளி

## ...அருவா வேலு

...பூஜை போடப்பட்டுள்ள ...த்தில் வாழ்ந்த வேலு ...ந்தில், ராஜேஸ், விவேக் ...பரப்பாக ஓடும் என்று

## ...ஜயசாந்தி கலக்கல்

...ஜயசாந்தி ஜோடி ...ரின் மணிக்கொடி' ...படப்பிடிப்புக்கள் ...ன்றன. ...டத்தையடுத்து 'தாயின் ...ரைக்கு வரும். ... அடிதடி ராணியும் ...என்பதால் பெரிய ...க்கிறது. ... காலத்தின் பின் ...ரைப்படம் என்பதால் ...டுழைத்து நடித்து

## ...' அங்கே

...'அஞ்சலி' படத்தில் ...மொட்டைமாடி' ...அஞ்சலியை ஞாபகம் ...ரக் ...து ...ச ...டங்களில் ...வருகிறார் ...தாலு ...கச் ...லாமா? ...ள ...சியாக ...வார்"



பாலகிருஷ்ணா–மீனா
படம்–சின்னபண்ணை

### முகப்பில்

### கரிஷ்மா கபூர்

### ரவீணா ராண்டன்



கார்த்திக்–சங்கவி
படம்–லக்கிமேன்
(வெளிவந்துவிட்டது)

## அடுத்தது 'மாஜிக் மேன்'

கார்த்திக் – சங்கவி ஜோடியோடு கவுண்டமணி – செந்தில் கலகல கூட்டணி நடித்துள்ள 'லக்கிமேன்' படம் திரைக்கு வந்துவிட்டது.

'லக்கிமேன்' திரைக்கு வந்த சித்திரைப் புத்தாண்டில் அதே பட நிறுவனம் புதிய படம் ஒன்றை ஆரம்பித்துவிட்டது.

புதிய படத்தின் பெயர் 'மாஜிக்மேன்'. கார்த்திக் – சௌந்தர்யா ஜோடியோடு கவுண்டமணி – செந்தில் கூட்டணி இப்படத்திலும் இருக்கிறது.

'லக்கி மேன்' படத்தை இயக்கிய பிரதாப் போத்தன் 'மாஜிக்மேன்' படத்தையும் இயக்குவார் என்று முதலில் சொல்லப்பட்டது. ஆனால் 'மாஜிக்மேன்' படத்தை இயக்கும் பொறுப்பை சந்தான பாரதியிடம் கொடுத்துவிட்டார்கள்.

மாஜிக் நிபுணராக கார்த்திக் நடிக்கிறார். 'கம்ப்யூட்டர் கிராபிக்ஸ்' தொழில் நுட்ப முறைமூலம் மாஜிக் காட்சிகள் படமாக்கப்படவுள்ளன. இது ஒரு குறுகிய காலத் தயாரிப்பு. 'லக்கிமேன்' ஓடி முடித்த கையோடு 'மாஜிக்மேனை' திரையிடத் திட்டமிட்டுள்ளார்கள்.

## மே மாதம் வில்லன்

சத்யராஜ் மூன்று வேடங்களில் நடிக்க அவரது மனேஜர் ராமநாதன் தயாரித்துள்ள 'வில்லாதி வில்லன்' படம் மே மாதம் திரைக்கு வருகிறது. 'வில்லாதி வில்லன்' படத்தில் வேறு எந்தப் படங்களிலும் நடிக்காமல் 'வில்லாதி வில்லன்' படத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தி நடித்துள்ளார் சத்யராஜ். திரைக்கதை, இயக்கம் அனைத்தும் சத்யராஜ்தான். 'வில்லாதி வில்லன்' தான் வெளிப்பினால் சத்யராஜ் வெற்றிகரமான இயக்குநராகி விடுவார்.

## கமல் பாட்டு

'இந்தியன்' படத்திலும் கமல் சொந்தக் குரலில் பாடப் போவதாகத் தகவல். இளையராஜா ரசிகரான கமல் அவரது இசையில் தான் முதன் முதலில் பாடினார். 'இந்தியன்' படத்திற்கு இசையமைப்பது ஏ.ஆர்.ரகுமான். கமல் ரகுமான் இசையில் பாடுவது இதுவே முதல் முறை.

## டேஞ்சர் மேன்

'ஜென்டில் மேன்' படம் சூப்பர் ஹிட் ஆகியதால் 'மேன்' என்று பெயர் வரக்கூடியதாகப் பல படங்கள். லக்கிமேன்' 'மாஜிக் மேன்'. 'டேஞ்சர் மேன்' படத்தில் பிரேம் கதாநாயகனாகப் நடிக்கிறார். கதாநாயகியாக நடிக்க இந்திப்பட முன்னணி நடிகை ஒருவரை அணுகியுள்ளனர்.

சிங்கப்பூர், மலேசியா, ஹொங்கொங் போன்ற நாடுகளில் படப்பிடிப்பு நடத்த திட்டமிட்டுள்ளனர்.


## பிரபு ஹொங்கொங்கில்

பிரபு இரட்டை வேடத்தில் நடிக்கும் 'சின்ன வாத்தியார்' படத்தின் தந்திரக் காட்சிகள் ஹொங்கொங்கில் படமாக்கப்பட்டுள்ளன.

பறக்கும் வட்டப் பந்து ஒன்று விமானத்திற்குள் பாய்ந்து விடுகிறது. திரும்பி வரும் போது தேவதைகள் பந்துக்களில் இருந்து வெளிப்படுவது போன்று காட்சி அமையுமாம்.

பாடல் காட்சிகளில் நவீன தொழில் நுட்பத்தை புகுத்துவது 'காதலன்' படத்தின் பின்னர் பரவலாகிவிட்டது. ரசிகர்களைக் கவர பணத்தைக் கொட்டிப் பாடல் காட்சிகளைச் சுட்டு சூடாகத்தருகிறார்கள்.







கஸ்தூரி
படம்–கோலங்கள்

## காதோடு சொல்லுகிறோம்

**போதையின் பிடியில்**

பெயரில் 'வான்' உள்ள வில்லன் நடிகர் போதை மருந்து பழக்கத்தால் சிலகாலம் ... கஷ்டப்பட்டார். பட வாய்ப்புக்களும் தவறிப் போயின. பின்னர் எப்படியோ அதிலிருந்து மீண்டு நடிக்கத் தொடங்கினார். போதை மருந்தை அவருக்கு அறிமுகம் செய்தது ஒரு பம்பாய் நடிகை. மீண்டும் அந்த நடிகை தேடிவந்து 'வானை' பிடித்துக்கொள்ள, போதையில் மிதக்கத்தொடங்கி விட்டாராம் 'வான்'. கெட்ட நேரம்.

**பாதுகாவலர்**

ஆணின் பெயரை தனது பெயரோடு இணைத்துள்ள ரம்மியமான நடிகை இந்தியில் ... தொடங்கியிருக்கிறார். தயாரிப்பாளர் ஒருவரோடு நெருக்கம்தான் வாய்ப்புக்களைப் பெறக்காரணம். கேட்டால் அவர் எனது பாதுகாவலர் என்கிறார்.

**பம்பாய் ராசி**

இளம் நடன கதாநாயகனுக்கு 'பம்பாய் ராசி' என்று பட்டம் சூட்டியிருக்கிறது கோடம்பாக்கம் வட்டாரம். பம்பாய் படவுலக நடிகைகள் சிலர் அந்தக் கதாநாயகனுக்காக எதையும் தரத்தயாராக இருப்பதால்தான் அந்தப் பட்டமாம். ராசி நல்ல ராசி.

**மணியின் கோபம்**

சென்சார் மீது படுகோபமாக இருக்கும் இயக்குநர்கள் வரிசையில் மணிரத்னமும் முதல் வரிசையில் இருக்கிறார். கண்டபடி கத்தரி வைத்து பம்பாயை சிதைத்ததில் முஸ்லிம்கள் சந்தேகப்படும்படி அமைந்து விட்டதாம். வருத்தமாக இருக்கிறார்.

**புகார்**

நெருக்கமான காட்சிகளில் நடிக்கும் போது இளம் கதாநாயகர்களைவிட 'முதிர்ந்த இளைஞர்கள்' தான் சில்மிஷங்கள் செய்வதாக இளம் ஹீரோயின்கள் தரப்பு சொல்கிறதாம். ஆசைக்கென்ன வயது?

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# லேடீஸ் ஸ்பெசல்

## அழகை அலட்சியப்படுத்தும் பெண்கள்

## மணமாகி விட்டால் மட்டும் போதுமா?

பொதுவாகப் பெண்கள் பாடசாலை, கல்லூரிகளில் படிக்கும் போது மிக நாகரிகமாகவும், நாசூக்காகவும் உடை விசயத்தில்-மற்ற முக, கூந்தல் அலங்காரங்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் அந்த நாகரிக யுவதிக்கு கல்யாணம் முடிந்து ஒன்று அல்லது இரண்டு குழந்தை பெற்றதும் எல்லாமே வெறுப்பாகி விடும்.



வயது என்றால் சுமார் 25 தான் இருக்கும். ஆனால் நடை, உடை, பாவனை நாற்பதைத் தாண்டியவர்கள் போலிருக்கும். குழந்தை பெற்றதுமே இனித் தன்னால் எல்லாக் காரியமும் முடிந்து விட்டது போன்ற ஓர் எண்ணம் பெரும்பாலான பெண்களுக்கு. கேட்டால் "குமரின்னு இல்லாமல் கல்யாணமாச்சு, மலடுன்னு இல்லாமல் பிள்ளை பெற்றாச்சு, இனி என்ன நமக்கு" என்று நூறு வயது கிழவி போன்ற பேச்சு.

உடம்புக்குப் பொருந்தாத உடுப்புக்கள். பிளவுஸின் நிறத்திற்குப் பொருந்தாத ஒரு சேலை. எண்ணெய் வடிய இறுகப் பின்னிய தலை. ஏன் இந்தக் கோலம்? குழந்தை பெற்றதும் அப்படியா பெண் கிழவியாகப் போய் விடுகிறாள்? அடுத்தவர்களுக்காக இல்லை என்றாலும் தன் கணவனுக்காகவாவது தன்னை அலங்கரித்து அவன் கவனம் மற்ற பெண்களிடம் செல்லாமல் தடுக்கலாமே.....

சிலருக்குக் குழந்தை பெற்றதும் வயிறு விட்டு விடும். எப்பொழுதும் கர்ப்பிணி போலவே தோன்றும். இதுவே பெரும்பாலும் பெண்களுக்கு அழகைக் கெடுக்கும். இதை எளிதில் நிவர்த்தி செய்யலாம். ஒய்வாக படுக்கும் நேரங்களில் குப்புறப்படுத்து வலது காலை ஒரு நிமிடம் மேல் நோக்கியும், பின்னர் இடது காலை ஒரு நிமிடம் மேல் நோக்கியும் உயர்த்தித் தளர்த்தவும். இதைச் சுமார் கால் மணிநேரம் செய்யவும்.

ஒப்பரேஷன் செய்து குழந்தை பெற்றவர்கள் இதைச் செய்யக்கூடாது. அவர்கள் பெல்ட் போட்டு வயிற்றைச் சுருக்கலாம்.

குழந்தை பெற்ற சில மாதங்களிலே சிலர் குண்டாகி விடுவார்கள். அதுவும் வயது அதிகமாகி விட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும். அதற்கு காலையில் அல்லது மாலையில் 'ஸ்கிப்பிங்' (கயிறடித்தல்) செய்யலாம். தினசரி சுமார் நூறுவரை எண்ணி ஸ்கிப்பிங் செய்தால் கூட போதும். இரண்டே மாதத்தில் உடம்பு 'ஸ்லிம்' ஆகி விடும். குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்தாலே உடல் நல்ல நிலையில் இருக்கும். பால் கொடுப்பதால் எந்த அழகும் கெட்டுப்போய் விடாது.

குழந்தை பிறந்த முதல் முப்பது நாட்கள் பெண்கள் குளிக்கும் போது, வெந்நீரில், வேப்பிலை, கஸ்தூரிமஞ்சள்தூள், துளசி இலைகளைச் சேர்த்துக் குளிப்பது நல்லது.

பேறுகாலம் என்பது பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம். அது கிடைத்ததுமே நேற்றுப் போல் இன்று இருக்கக் கூடாது என்று எந்தச் சட்டத்திலுமே இல்லை. நாம் நினைத்தால் எந்த வயதிலுமே இளமையான, பொலிவான தோற்றத்துடன் நடக்க முடியும். எனவே குழந்தை பெற்ற தாய்மார்களே, இத்தோடு உங்கள் இளமை போய் விடவில்லை. உங்கள் உடலை பஞ்சு திணித்த தலையணை போல எண்ணும்படி வைக்காதீர்கள். சிறிது நேரமாவது உங்கள் உடல் நலத்திற்குச் செலவு செய்யுங்கள். மிதமான அலங்காரம் செய்து வீட்டிலிருக்கும் போது கண்ணிற்குப் பசுமையாய்த் தோற்றமளியுங்கள்.



## ஹலோ! உங்கள் கழுத்துப் பேசுகிறது!



ஹலோ! நான்தான் உங்கள் கழுத்துப் பேசுகிறேன். கமுகு, சங்கு, தண்டு என்றெல்லாம் என்னை வர்ணிப்பார்கள்.

மனித உடலில் நான் நேர்த்தியானவன். என்னால்தான் ஒரு பெண் முக வசீகரம் அடைகிறாள்.

ஆணுக்கும், பெண்ணுக்கும் நான் வித்தியாசமாக இருப்பேன். ஆண் கழுத்து குட்டையாகவும் தடித்தும் இருக்கும்.

### செவியைக் கொடுங்கள்-தெரியாத சங்கதிகள் அறியலாம்!

பெண் கழுத்து நீளமாகவும் மிருதுவாகவும் அழகாக வடித்தது போலவும் இருக்கும்.

பெண்களின் கழுத்து மென்மையாக உள்ளதால் ஓவியர்கள் அவைகளை நீளமாக வரைவார்கள்.

பர்மாவில் கரேன் பகுதிப் பெண்கள் கழுத்தை நீட்டுவதற்காக வளையங்கள் அணிந்திருப்பார்கள்.

ஐந்து வளையத்தில் ஆரம்பித்து 24 வளையங்கள் வரை கழுத்தில் அணிந்து கொள்வார்கள். 24 வளையங்களின் கனம் 60 பவுண்டு கூட இருக்கும். இந்த விசித்திரப் பழக்கம் அந்தப் பெண்களின் கழுத்தை நீளமாக்கிவிடும். ஒன்றேகால் அடிவரை கூட நீடிக்கும் என்று சொல்கிறார்கள்.

கழுத்துக்கும், காமத்துக்கும் சம்பந்தம் உண்டு.

கழுத்தில் முத்தமிடுவது ஒருவரது உள் உணர்ச்சியைத் தூண்டிவிடும்.

குறிப்பாக பிடரியில் முத்தமிடுவது பெண்ணை மெய்மறக்கச் செய்யும். பின் கழுத்தில் மெதுவாக வருடிவிடுவது உணர்ச்சிகள் பொங்க வைக்கும்.

கழுத்தை சரியாக வைத்துக் கொள்ள தேகப்பயிற்சி தேவை.

சிலருக்கு தாடையின் கீழ் இரண்டாவது தாடை தொங்கும்.

இதை நீக்குவதற்கு சில பயிற்சிகள் செய்யலாம். கழுத்தை பின்புறம் நோக்கி வளைக்க வேண்டும். விநாடிகளில் தொடங்கி நிமிடங்கள் வரை வைத்திருக்க வேண்டும்.

தினசரிப் பயிற்சி இதற்குத் தேவை. இதில் சிறிது சிறிதாகத்தான் முன்னேற வேண்டும்.

உங்கள் வயதை உங்கள் கழுத்தும் காட்டிவிடும். கழுத்துக்கு உடற்பயிற்சி தேவை. அப்போதுதான் அதன் சருமம் இழுத்துப் பிடிக்கப்படும். உட்காரும் போதெல்லாம் முதுகுத் தண்டும், கழுத்தும், தலையும் ஒரு நேர் கோட்டில் இருக்கும்படி உட்காருங்கள்.

நிமிர்ந்து நிற்கும் கழுத்து வழியேதான் காற்றும்- இரத்தமும் தடையின்றி இயங்க முடியும்.

## யார் அந்த 50 பேர்? →



முரசின் 'பரிசுக் கூப்பன்' போட்டியில் பல்லாயிரம் வாசகிகள் பங்குகொண்டு பிரமிக்க வைத்துள்ளனர்.

பத்து அதிஷ்டசாலிகளின் பெயர்கள் மட்டும் இவ்வாரம் அறிவிக்கப்படுகின்றது.

முதல் மூன்று அதிஷ்டசாலிகள் உட்பட 40 பேரின் பெயர்கள் வரும் வாரம் அறிவிக்கப்படும். அதுவரை சஸ்பென்ஸ்!

### அந்த பத்து அதிஷ்டசாலிகள்

01. திருமதி-தாஜ்மஹால் சுபைடீன் புத்தளம் வீதி-சிலாபம்.
02. திருமதி-சந்ராணி டானியல் முகத்துவாரம்-கொழும்பு-15
03. செல்வி-அன்னி செபஞானம் தெல்பேட்ட எஸ்டேட்-பதுளை.
04. செல்வி-ஜெல்ஸியா தெஹிவளை.
05. கே.இர்பானா காலிதீன் பிரதான வீதி-ஏறாவூர்-02.
06. ஆர். மனோன்மணி புளூமென்டால்லேன், கொட்டாஞ்சேனை.
07. எம்.ஆர்.எஸ். ருமைஸா மல்வபிட்டிய-குருநாகல்.
08. செல்வி-ஜெயராணி தம்புகிரி வீதி-ஹட்டன்.
09. சாந்தகுமாரி செல்வராஜா மாவட்ட பொறியியலாளர் இல்லம், திருகோணமலை.
10. செல்வி-சித்தி பௌசியா மஸ்ஜித் மாவத்த-வறக்காபொல.

(மிகுதி அடுத்த வாரம்)

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது
சுகந்தினி

### வெங்காயச் சட்னி

தேவையானவை:

வெங்காயம் - 100 கிராம்
மிளகாய் வத்தல் - 4
எண்ணெய் - 50 கிராம்
கடுகு - சிறிது
உழுத்தம் பருப்பு - சிறிது
புளி - சிறிது
பெருங்காயம் - சிறு துண்டு
கறிவேப்பிலை - சிறிது
உப்பு - அளவாக

செய்முறை -

வாணலியை அடுப்பில் வைத்து சிறிது எண்ணெய் விட்டு முதலில் உழுத்தம் பருப்பைத் தாளித்துத் தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும். பின்பு சிறிது எண்ணெய் விட்டு மிளகாய் வத்தல், பெருங்காயம் இவற்றைப் பொரித்துக் கொள்ள வேண்டும். அதே எண்ணெயில் அரிந்து வைத்த வெங்காயத்தைப் பொன்னிறமாக வதக்க வேண்டும்.

பின்னர் உழுத்தம்பருப்பு, பெருங்காயம், மிளகாய் வத்தல் ஆகியவற்றுடன் புளி சேர்த்து நன்றாக அரைக்க வேண்டும். அரைத்து முடிந்ததும் அத்துடன் வதங்கிய வெங்காயத்தையும் போட்டு திரும்பவும் அரைத்து எடுத்துக் கொண்டு எண்ணெயில் கடுகு, கறிவேப்பிலை தாளித்துப் போடவும். இதை இட்லி, தோசையுடன் தொட்டுச் சாப்பிடச் சுவையாக இருக்கும்.


பரிசுக் கூப்பன்
மகளிர் மட்டும்
இல 10

## மகளிர் மட்டும் —பரிசுப் போட்டி—

### முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.


## இத்தியாச விருந்து

## திருடப்பட்ட கவிதைகள்? 3

இது தமிழக பேராசிரியர் டாக்டர் சி. இ. மறைமலையின் ஆய்வு. சென்ற முறை கவிஞர் வைரமுத்து பற்றி ஆராய்ந்தார். இந்த வாரம் மேலும் சில கவிஞர்களை.....

ஒரு கவிஞரின் கற்பனையை அடித்தளமாகக் கொண்டு இன்னொரு கவிஞர் புதிய கற்பனைகளை உருவாக்க முயலும் முயற்சிகள் புதுக்கவிதையைப் பொலிவிழக்கச் செய்கின்றன.

"இரவெல்லாம்
என் நினைவுகள்
கொசுக்கள்"

(பால்வீதி - ப- 25)

என்னும் அப்துல் ரகுமானின் கவிதை மேத்தாவிடம் புதிய உருமாற்றம் பெறுகிறது.

"படுக்கையில் கடிக்கும்
மூட்டைப் பூச்சிகளாய்
இந்தப்
பெண்களின் பெயர்கள்"

(நந்தவன நாட்கள் - ப- 25)

இதே போல,

"என்னைக் கண்டதும்
கவிழும் உன் இமைகள்
கொசு வலையா?
மீன் வலையா?"

(பால்வீதி - ப- 31)

என்னும் அப்துல் ரகுமானின் கவிதை வரிகள் மேத்தாவிடம் ஏற்படுத்திய தாக்கத்தைக் கீழ்க் கண்ட அவரது கவிதை வரிகள் வெளிப்படுத்துகின்றன:

"அவளுடைய
விழிகளிலிருந்து
வீசப்பட்ட கயிறு
தூக்கி விடுவதற்கா?
தூக்கிலிடுவதற்கா?"

(ஒரு வானம் இரு சிறகு - ப- 48)

அழகியல் உணர்வை வெளிப்படுத்தும்,

"கம்பிகள் கூறுபோட்ட
கீழ்வான ஆரஞ்சை
சன்னல் நெருங்கி மீட்டேன்"

என்னும் சி. மணி எழுதிய 'மீட்பு' என்ற புகழ்பெற்ற கவிதை மேத்தாவின் மற்றொரு கவிதைக்குக் கருவாக அமைகிறது.

"உள்ளே அறைக்குள்
நான்
ஒய்ந்த பொழுது
பட்டொளி வீசும்
பௌர்ணமி நிலவு
சின்ன
ஜன்னலிலேயே
சிறைப்பட்டுக் கிடந்தது!
கதவைத் திறந்து
வெளியே நடந்தேன்
வெள்ளி நிலவுக்கும்
விடுதலை கிடைத்தது"

(ஒரு வானம் இரு சிறகு - ப- 21)

மேத்தாவின் 'மரங்கள்' என்னும் கவிதை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மரங்கள்

"படகுப் பறவைகளின்
பயணியர் விடுதிகள்
எந்தப் பறவைக்கும்
இருக்க இடம் கொடுக்கும்
பொதுவுடைமை வீடுகள்
சூடு படுகின்ற கால்களின்
சொந்தக் காரர்களுக்காக
விரித்தே வைத்திருக்கும்
வெண்கொற்றக் குடைகள்"

இதையே, வாலி 'விருட்சங்கள்' என்னும் கவிதையில்,

விருட்சங்கள்

"பறவைகளின்
பிரசவ
ஆஸ்பத்திரிகள்
மண்ணரசி
மடக்காமலேயே
பிடித்துக் கொண்டிருக்கும்
பச்சைக்
குடைகள்"



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தனது கவிதை ஒன்றில்,

"ஆதரவு காட்டாமல் ஐயா
எனை விடுத்தால்
பாதரட்சை போலுன்றன்
பாதம் தொடர்வதன்றி
வேறு கதியறியேன்"

என்று கூறுகிறார். இக்கவிதை மீரா என்னும் கவிஞரது 'கனவுகள்' நூலில் பின்வருமாறு எதிரொலிக்கிறது.

"சில நாட்கள்
உன் கூடவே வருகிறேன்
பாதத்தில் ஒட்டிமிருக்கும்
செருப்பைப் போல
எனினும்
நீ என் வீட்டுக்குள் நுழையும்
போது
என்னால் பின்தொடர
முடியவில்லை"

(கனவுகள்- ப- 40)

கவிஞர் மீராவை விஞ்ச எண்ணுகிறார் கவிஞர் மு. மேத்தா

"என் ஞாபகங்களை
கழற்றி
எறிந்து விட்டு
வாழ்க்கைப் பாதையில்
நீ
நடக்க முடியாது.
கவனித்துக் கொள்
அவை
உன்னுடைய
காற் செருப்புக்கள்
அல்ல
கால்கள்!"

(நடந்த நாடகங்கள்)

இங்கு மேத்தா வெற்றியடைகிறார். ஆனால் அவ்வெற்றி மீராவின் தோள்மீது ஏறும் வாய்ப்பினால் கிடைத்தது என்பதை மறந்துவிடக் கூடாது.



# தேன் கிண்ணம்





## கொழும்பில் இருக்கும் மச்சானுக்கு.....!

உங்கள்
இதயத்தில்
பலாப்பிசினாய்
ஒட்டிக் கிடந்த
எங்கள் உறவை
எப்படி
உங்கள்
மீசையைப்போல்
அவ்வளவு எளிதாக
வழித் தெறிய முடிந்தது?

••

நீங்கள்
அந்நிய மொழிகளுக்கு
அடிமைப் பட்டுப்
போனாற் போல்
எத்தனையோ
நண்பர்களின்
சிநேகத்திலும்
சிக்கிப் போயிருக்கலாம்
அதற்காக
தமிழை மறந்தாற்போல்
எங்களையும்
மறந்து போவதா...?

••

உங்கள்
தலை நகரில்
நாகரிகம் என்ற
முகமூடியோடு வந்து
அநாகரிகம்
அராஜகம் புரியுமே!

••

நண்பர்களோடு
சேரும் போது
நீங்கள்
சிகரட்
பிடிக்காதது
தரக் குறைவாக(த்)
தெரியுமே!

••

ம(ா)துவோடு
உறவு
வைக்காதவர்கள்
அங்கே
மட்டமாக
மட்டிடப்படுவார்களே!

••

அன்பு மச்சானே....!
தயவு செய்து
அவைகளுக்கு மட்டும்
அடிமையாகி
விடாதீர்கள்
பின்பு
எங்களை மறந்தாற்போல்
அவ்வளவு
எளிதாக
உங்களால்
அவைகளை
மறந்துவிட
முடியாமல் போகும்!

மீராவோடை–எஸ்.நளீம்,

## சுதந்திர தாகம்!

சோகம்
கவ்விய எமக்கு
சுதந்திரம்
வார்த்தைகளில்
மட்டும்
வலம் வரும்!


கூடையேறியதாலோ
என்னவோ
தலை நிமிராமல்
குனிந்தபடியே
'சலாம்' சொல்லும்
என் சமூகம்!

சிலுவைகளாகிப் போன
எம் வாழ்க்கையின்
தொலைவுகளில் பூச்சிய
ரேகைகள் மின்னும்.

வந்து போன
காலங்கள்
தந்து சென்ற
பாடங்கள்
நொந்துபோன
நெஞ்சங்களில்
தீத்தழும்புகளாய்!

ஆண்டோர் முதல்
இன்று
ஆள்வோர் வரை
(சுதந்திர) தாகம்
தீராமலேயே
எம்
சந்ததி தொடர்கிறது!

கே.கனகராஜா
–நுவரெலியா.



## மழை காலத்துச் சில நிகழ்வுகள்!



கொடும் வெயிலைக்
கொண்டு வந்த
கோடையைத்
துரத்திய பின்
கடுங் குளிரை
அள்ளி வரும்
மழைக்காலம்
ஆரம்பம்!

கருமேகத்
திரள்களின்
செருக்களமாக
ஆகாயத்
தெருக்கள்
கறுத்துக் கிடக்கும்!
மின்னல் கீற்று
கண்ணைப் பறிக்க
இடியின் ஓசை
இருதயத் துடிப்பை
இரு மடங்காக்கும்!

தெருப் பள்ளங்களில்
தேங்கிய நீரில்
வாகனச்
சக்கரங்கள்
வேகமாய் மோதும்!
ஓரமாய்
ஒதுங்கும்
பள்ளிச் சிறார்களின்
வெள்ளையுடைகள்
புள்ளிகள் பட்டு
புதுக் கோலமாகும்!
உள்ளூர் வீதிகள்
உழுது விட்ட நிலமாய்
பழுது பட்டுக்
கிடக்கும்!

இல்லறத்தில்
புதிதாய்
இணைந்து விட்ட
சிட்டுக்கள்
இறுக்கமான
போர்வைக்குள்
இரவுகளைச்
சூடாக்கும்!
விடிந்த பின்னரும்
விலகிக்
கொள்வதற்கு
விரும்பாமற்
கிடக்கும்!

குட்டி மருமகன்
கட்டிய சின்னக்
கடதாசிக்
கப்பலை
வெள்ளோட்டம்
விட்டு
விளையாடி
மகிழ்வான்–அது
முற்றத்து நீரில்
மூழ்குவது கண்டு
முத்துப் பல் காட்டி
முழு நிலவாய்ச்
சிரிப்பான்!

பல நாட்கள் பெய்த
பயங்கர மழையால்
பள்ளப் பகுதிகளை
வெள்ளம் மூடும்!
நிவாரணப் பதிவுகள்
நேர்த்தியாய்
நடக்கும்!
பகிர்வுகளில் மட்டும்
நேர்த்தி பதுங்கும்!
உத்தமர் சிலர்
உண்மையாகவே
உதவிகள் செய்வர்!
இன்னும் சிலரோ
ஏழையின்
கஞ்சியைக்
குடிக்க முயல்வர்!

ரேஜுகாரிபாய்தீன்-ஏறாவூர்.

## சாவுக்குச் சற்றுமுன்

பட்டுப்போன
இதயத்தில்
கட்டுக் கட்டாய்
உன்
கடித ஞாபகங்கள்

★

இதயம் கிழித்து
இரத்தத்தில்
எழுதிய
ஸ்நேகமெல்லாம்
வெறும்
வாடகை
வார்த்தையா.....?

★

உன் ஜீவனை
விழிகளில்
பிம்பமாய் சுமந்தேன்
என்றதெல்லாம்
கனவுகளில்
மட்டுமா...?

★

பழைய நினைவுகள்
பத்திரமாகவே உள்ளன......
ஆனால்
நிகழ்கால
வாழ்க்கைக்குத்தான்
நிறந்திட்டி(ப்)
பார்க்கிறேன்......

★

இந்த இரவல்
சோகங்களுக்குத்தான்
நான்
இரையாகிப் போவேன்
என்றிருந்தால்
இப்படி
வாழ்க்கையை
மிச்சப்படுத்தியிருக்க
மாட்டேன்......

★

சுகி....!
சுலபமாய்
சொல்லிவிட்டாய்
மறந்துபோ.....என்று
எப்படி முடியும்.....?
மூளையைச்
சலவை செய்து
முயன்று பார்க்கிறேன்....
நான்
இறந்து போவதால்
மட்டுமே
உன்னை மறந்து
போவேன்....

★

இறப்பின்
இந்த
கடைசி நிமிசத்திலும்
உன் வாழ்க்கையை
புனரமைப்பதற்காகவே
நான்
புதைக்கப்பட்டிருப்பேன்
என்று
உயில்
எழுதப்பட்டிருக்கும்.

அ.சுதாசேகர்
–பொத்துவில்–03.

## அழகு என்று எழுது...!



மலையுச்சியும்
மழைத்துளியும்
அழகு
என்று எழுது!

••

காட்டாறும்
கவரிமானும்
அழகு
என்று எழுது!

••

மேக நிலவும்
மேடை மௌனமும்
அழகு
என்று எழுது!

••

மாந்தளிர் இலையும்
மலர்மாலையும்
அழகு
என்று எழுது!

••

காரிருள் பனியும்
மயில் இறகும்
அழகு
என்று எழுது!

••

மூங்கில் குழலும்
கண்ணன் சிலையும்
அழகு
என்று எழுது!

••

புள்ளிமானும்
பள்ளி மாணவனும்
அழகு
என்று எழுது!

••

சுற்றிவரும் தென்றல்
தழுவும் விதம்
அழகு
என்று எழுது!

ஷஹிர்ஷா தாஸிம்
–தர்கா நகர்.

## எங்கள் தேசம்

எங்கள்
குடியிருப்பு
நிலங்களும்
இடங்களும்
யுத்த களங்கள்;

*

உள்ளங்களும்
எங்களில்
உள்ள
அங்கங்களும்
செத்த
பிணங்கள்.

*

ஆனால்,
கண்களில் மட்டும்
'.........'
அயுதங்கள்
விமானங்கள்,
போர்வீரர்கள்,
இரத்தம் வடியும்
மனித உடல்கள்,
கிழிந்து போன
வாகனங்கள்,
எரிந்து போன
குடிசைகள்,
இடிந்து போன
கட்டிடங்கள்,
வாசிக்காத
வாசிக சாலைகள்,
படிக்காத
பாடசாலைகள்,
விளக்கேற்றாத
வீடு வாசல்கள்,
வழிபடாத
வழிபாட்டுத்தலங்கள்,
பாதங்கள் படாத
பாதைகள்,
மூட முடியாத
முழுநேர(க்)
கடைகள்,
முகம் தெரியாத
முக்காட்டு
மனிதர்கள்,
அறுந்த பின்
அடி மரங்கள்,
சென்றிகள்,
பங்கர்கள்,
தடைமுகாம்கள்,
பாதைகளில்
பறள்கள்,
டயர்கள்,
மண்மூட்டைகள்.

*

போக்குவரத்தில்
பொறுக்க முடியாத
சோதனைகள்,
அவ்விடங்களில்
பெட்டைகளுக்கு
கண்ணடிக்கும்
'யுனி:.போம்கள்'.

*

அத்தனை
சுவர்களிலும்
அஞ்சலிப்
போஸ்டர்கள்,
ஆங்காங்கே
அகதிகளின்
அவதி முகாம்கள்
எட்டு, பத்து
நாட்களுக்குள்
ஒரு சுற்றி
வளைப்பு.

*

இடைக்கிடை
துப்பாக்கிகளின்
தும்மல் 'ஸ்வரம்'
சாகும் வரை
உண்ணாவிரதம்
ஊரெல்லாம்.

*

கணக்கிட முடியாத
கண்ணீர்க்கதைகள்,

*

செத்தவனுக்கு
சொந்தக்காரர்
தெரிவதில்லை.

*

ஊனக் குழந்தைகள்
ஊர்களில்
ஏராளம்.

*

பொய்க்காலில்
பெருந்தொகையினர்.

*

இதுதான்
இன்றைய
எங்கள் தேசம்.

*

யுத்தம்
தீர்ந்து விட்டால்
பாட்டன்
காலத்தை
பார்த்துக் கொள்ள
என் பேரனுக்கு
போய்ச் சேரட்டும்
இந்தக் கவிதை.

மீரேவோடை
மன்சூர்.

## ஒரு 'குடி' மகனின் நாட்குறிப்பு.



வானத்தைப் பார்த்தேன்;
சூரியனைக் காணவில்லை.
வீட்டுக்குள் போய்
கலண்டரைப் பார்த்தேன்;
'அமாவாசை' என்றிருந்தது.
ஒன்றும் புரியவில்லை!

▫▫

ஒரு நள்ளிரவில்
வீடு வந்து
கதவைத் தட்டினேன்;
திறந்த மனைவி–
கன்னத்தில் அறைந்தாள்!
அது, என் மனைவியல்ல
என்று மட்டும்
புரிந்தது!

▫▫

மழை நாளில்
குடையுடன்
வீடு வந்தேன்.
தொப்பலாய்
நனைந்து.
குடை அவ்வளவாய்
நனையவில்லை!


▫▫

ஒரு நாள்
விடிந்து
கண்விழித்தேன்!
என் வீட்டைக்
காணவில்லை!
இரவு தூங்கியது
வெட்ட வெளியில்

▫▫

ஐந்தறிவு
மிருகமொன்றைப்
பற்றி
'கட்டுரை'
எழுதிய என்மகன்
வைத்த தலைப்பு.
'அப்பா'!

கோவுஸ்ல–ராம்ஜீ–
–எல்ல.



# இந்த வாரம் உங்கள் பலன்

(30.04.95 முதல் 06.05.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

| மீனம்: | சுப நேரம் |
|---|---|
| (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) | |
| ஞாயிறு- பொருள் நட்டம், கடன் படல். | காலை 6 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவக் கேடு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, மனக் கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- தனலாபம், பெரியோர் உதவி. | பி.ப 2 மணி |
| வியாழன்- காரியசித்தி, உறவினர் மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உறவினர் உதவி. | காலை 7 மணி |
| அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3 | |

| மேடம்: | சுப நேரம் |
|---|---|
| (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) | |
| ஞாயிறு- தொழில் கேடு, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| திங்கள்- வீண்மனஸ்தாபம், செய் தொழில் நட்டம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, உறவினர் உதவி. | காலை 6 மணி |
| புதன்- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 8 மணி |
| வெள்ளி- வீண்முயற்சி, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| சனி- காரியத்தடை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5 | |

| இடபம்: | சுப நேரம் |
|---|---|
| (கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை) | |
| ஞாயிறு- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 8 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- மறைமுக எதிர்ப்பு, மனக் கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- பெரியோர் உதவி, இல்லச் சிறப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- தொழிலில் உயர்ச்சி, பணவரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- முன்னேற்ற நிலை, குடும்ப மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- இல்லச் சிறப்பு, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4 | |

| மிதுனம்: | சுப நேரம் |
|---|---|
| (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) | |
| ஞாயிறு- பெரியோர் நட்பு,கௌரவம். | காலை 9 மணி |
| திங்கள்- பணச்செலவு, தொழில் நிலை மாற்றம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், தொழில் இலாபம். | காலை 9 மணி |
| புதன்- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- தொழிலில் உயர்ச்சி, மனப்பயம். | பகல் 11 மணி |
| வெள்ளி- காரியசித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- தொழிலில் பிரச்சினை, பணத்தடை. | காலை 7 மணி |
| அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7 | |

| கும்பம்: | சுப நேரம் |
|---|---|
| (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி) | |
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்மனஸ்தாபம், காரியத்தடை. , | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- இனசனவிரோதம், மனப்பயம். | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 8 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6 | |

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், கேது |
| இடபம் | - புதன் |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மீனம் | -வெள்ளி |

★ சந்திரன்-மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

| கர்க்கடகம்: | சுப நேரம் |
|---|---|
| (புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்) | |
| ஞாயிறு- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| திங்கள்- தொழில் முன்னேற்றம், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பொருள் விரயம், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, அதிகார சித்தி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- காரியானுகூலம்,உறவினர் உதவி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- வீண் விரயம், கடன்படல். | காலை 8 மணி |
| சனி- உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் 12 மணி |
| அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6 | |

| மகரம்: | சுப நேரம் |
|---|---|
| (உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) | |
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| திங்கள்- பொருள் வரவு, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண்மனஸ்தாபம், பெரியோர் பகை. | காலை 6 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, பயனற்ற செயல். | பி.ப. 2 மணி |
| சனி- உயர்ந்த நிலை, மனக்கவலை. | பி.ப. 1 மணி |
| அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -1 | |

| சிம்மம்: | சுப நேரம் |
|---|---|
| (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) | |
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முன்னேற்றம். | காலை 9 மணி |
| செவ்வாய்-அந்நியர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப 2 மணி |
| புதன்- காரியசித்தி, பொருள்வரவு. | மு.ப 10 மணி |
| வியாழன்-வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- காரியத்தடை, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, வீண் விரயம். | பகல் 11 மணி |
| அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3 | |

| தனு: | சுப நேரம் |
|---|---|
| (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) | |
| ஞாயிறு- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, செல்வாக்கு மேன்மை. | காலை 7 மணி |
| புதன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, பணச் செலவு. | காலை 7 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- பொருள் நட்டம், வீண்துயர். | காலை 7 மணி |
| அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -2 | |

| விருட்சிகம்: | சுப நேரம் |
|---|---|
| (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) | |
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- காரியசித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை 8 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7 | |

| துலாம்: | சுப நேரம் |
|---|---|
| (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) | |
| ஞாயிறு- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- வீண்விரயம், அந்நியர் நட்பு. | காலை 6 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப 1 மணி |
| புதன்- பொருள் வரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| வியாழன்- காரியத்தடை, பணவிரயம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| சனி- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 6 | |

| கன்னி: | சுப நேரம் |
|---|---|
| (உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) | |
| ஞாயிறு- பொருள் வரவு,மனமகிழ்ச்சி, | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, மனப் போராட்டம்.. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- காரியசித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| சனி- வெளியிடப் பயணம், பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9 | |



"சாதிப் பிரிவுகள் சொல்லி-அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்-அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்."

சுப்பிரமணிய பாரதியார்



## கடற் காட்சி

தாலாட்டும் கடலலையில்-புது
சங்கீதம் சுரந்து வரும்
தாவிவரும் மீனினமும்
தாளத்தோடு ஆடிவரும்!

வள்ளங்கள் வரிசையாய்
சீர்வரிசை சுமந்து வரும்-வான்
பறவைகளும் களி கூர்ந்து
பண்ணிசைத்துப் பாடிவரும்!

கடல் மேவி வரும் தென்றலது
மேனிதனை சிறை கொள்ளும்-ஆழி
நீராடல் மகிழ்ச்சி ஈந்து
நெஞ்சம் பல கதை சொல்லும்!

கடற்காட்சி மாட்சியெல்லாம்
மானிடர்க்(கு) இன்பம் தரும்-நல்
கவியுறும் உள்ளமதை
கற்பனைக்கே ஈர்த்துச் செல்லும்!

- தில்லையடிச் செல்வன் -

# நண்டின் நன்றி

### பாப்பா முரசு சிறு கதை

ஒரு ஊரில் ஒரு மீனவன் இருந்தான். அவ்வூரில் பெரிய நீர்நிலையோ, ஆறோ, கடலோ இல்லாத காரணத்தினால் அவன் குளத்தில்தான் மீன் பிடித்து அதை விற்று வந்தான்.

அவன் மீன் பிடிக்கும் அந்தக் குளத்தில் ஒரு நண்டு வசித்து வந்தது. அது மீனவனை வெகு நாட்களாக அறிந்திருந்தது. அவன் மீன் பிடிக்க வந்ததும் அது தன் வளைக்குள் நுழைந்து கொள்ளும். அவன் வீசும் வலையில் தான் மாட்டி விடக்கூடாது என்று அது மிகக்கவனமாக இருந்தது.

இவ்வளவு எச்சரிக்கையாக இருந்த போதிலும் ஒருநாள் மீனவனின் வலையில் சிக்கி விட்டது. அன்று வலையில் சிறிதளவு மீனே சிக்கியிருந்தது. விற்பதற்கு அவை போதாதென்று நினைத்திருந்தபோது வலையின் மூலையில் அந்தக் கொழுத்த நண்டைப்பார்த்த மீனவன் மிகவும் சந்தோசப்பட்டான்.

மீனவன் சந்தோசப்படுவதைப் பார்த்த நண்டு தனக்கு இன்று மரணம் தான் நிகழப்போகிறது என்றெண்ணியது. அது மீனவனைப் பார்த்து,

"மீனவா என்னை என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டது.

"சந்தையில் உன்னை விற்கப்போகி றேன்" என்றான் மீனவன்.

"யாருக்கு விற்கப்போகிறாய்?" நண்டு கேட்டது.

"நண்டை விரும்பிச் சாப்பிடுகிற வர்களுக்கு" சொன்னான் மீனவன்.

"ஐயோ என்னை அவர்களுக்கு விற்று விடாதே....என்னைக் கொன்று விடுவார்கள்" என்று அழுதபடி கெஞ்சிக் கேட்டது நண்டு.

அதன் கெஞ்சலும், அழுகையும் மீனவனின் மனதைத் தொட்டன.

"நான் உன்னை விட்டு விட்டால் நீ எனக்கு என்ன செய்வாய்?" என்று கேட்டான் மீனவன்.

"உன் உயிரை ஒரு நாள் காப்பேன்" என்றது நண்டு.

நண்டை எடுத்து குளத்து தண்ணீருக்குள் விட்டு விட்டான் மீனவன்.

"நீ செய்த உபகாரத்தை நான் மறக்க மாட்டேன். உன் உயிரை ஒருநாள் காப்பேன்" என்று சொல்லிவிட்டுத் தண்ணீருக்கடியில் சென்று விட்டது.

மீனவன் மீன் பிடிக்க வலை வீசும் பொழுதெல்லாம் குளத்திலுள்ள மீன்களை எல்லாம் துரத்தி வலையில் சிக்க வைக்கும் நண்டு. அதனால் மீனவனுக்கு நிறைய மீன் கிடைத்தது. நன்கு விற்பனையாகி அவன் கவலையில்லாதிருந்தான்.

ஒருநாள் மீனவன் மிகவும் சந்தோசமாக இருப்பதைப் பார்த்த நண்டு,

"என்ன மிகவும் சந்தோசமாக இருக்கிற மாதிரி தெரிகிறதே?"

என்று அவனிடம் கேட்டது.

"ஆமாம்! இன்று நான் வெளியூர் செல்லப் போகிறேன்" என்றான் மீனவன்.


"திரும்பி வர எவ்வளவு நாளாகும்?" என்று கேட்டது நண்டு.

"எவ்வளவு நாளாகும் என்று சொல்ல முடியாது" என்றான் மீனவன்.

"உன்னைப் பிரிந்து இவ்வளவு நாட்கள் என்னால் தனியாக இருக்க முடியாது. என்னையும் உன்னுடன் கூட்டிக் கொண்டு போ" என்று சொன்னது.

"உன்னை எப்படி கூட்டிக்கொண்டு போக முடியும் நீ ஒரு நீர் வாழ் ஜீவனாயிற்றே?" என்றான் மீனவன்.

"ஒரு கலயத்தில் தண்ணீர் விட்டு என்னை அதனுள் போட்டு எடுத்துக் கொண்டு போ!" என்றது நண்டு.



சரி என்று சொல்லி மீனவன் ஒரு கலயத்தில் தண்ணீர் நிரப்பி அதனுள் நண்டை எடுத்துப் போட்டுக் கொண்டு அதைக் கையில் பிடித்தபடி வெளியூர் சென்றான்.

இரவில் நடுக்காட்டில் உடைந்துபோன ஒரு பழைய மண்டபத்தில் அவன் தங்க வேண்டியதாயிற்று. செடி, கொடிகள் வளர்ந்து மண்டபம் பாழடைந்து இருந்தது.

ஒரு இடத்தில் தலைமாட்டில் நண்டிருக்கும் கலயத்தை வைத்துக் கொண்டு படுத்தான் மீனவன். வெகு தூரம் நடந்து வந்த களைப்பில் அவன் அயர்ந்து தூங்கி விட்டான்.

அவன் படுத்திருக்கும் இடத்திற்கு அருகிலிருந்த புற்றிலிருந்து ஒரு பாம்பு வெளியில் வந்தது. யாரோ ஒரு மனிதன் தன் இடத்தில் வந்து படுத்திருப்பது அதற்குக் கோபத்தை உண்டாக்கிற்று. அவனைத் தீண்டிக் கொன்று விட ஆவேசமாக வந்தது பாம்பு.

அப்போது அது கலயத்தைப் பார்த்து விட்டது. அதனுள் என்ன இருக்கிறது என்பதைப் பார்க்க கலயத்தினுள் தலையை விட்டது. அங்கிருந்த நண்டு பாம்பை பார்த்துவிட்டது. தன்கொடுக்குள்ள கால்களால் அதன் தலையைப் பிடித்துத் துண்டித்து விட்டது. தலை கலயத்திற் குள்ளும், உடல் வெளியேயும் விழுந்து விட்டது.

காலையில் கண் விழித்த மீனவன் கலயத்தினுள் பாம்பின் தலை துண்டித்துக் கிடப்பதையும், நண்டின் மேலே எல்லாம் இரத்தம் இருப்பதையும், வெளியே பாம்பின் தலையில்லாத உடல் கிடப்பதையும் பார்த்தான். தன்னைத் தீண்ட வந்த பாம்பைக் கொன்று தன் உயிரைக் காப்பாற்றி விட்ட நண்டுக்கு ஆயிரம் நன்றி சொல்லி அதனைக் கலயத்தில் புதுத் தண்ணீரோடு எடுத்துக் கொண்டு தன் பயணத்தைத் தொடர்ந்தான் மீனவன்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.05.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 88
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 85

**பரிசுக்குரியவர்**
ஜி.சுதாகர்
கொழும்பு இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி.

பாராட்டுக்குரியவர்கள்
எம்.எஸ்.நஸ்ரீன் -முகாந்திரம் வீதி, ஏறாவூர்-06.
எம்.எஸ்.நூறுல் சுகைபா, பாத்திமா பாலிகா மகா வித்தி. புத்தளம்.
நடராஜா மதிவண்ணன், தி/உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி.
மு. டெபெக்கா பொன்மலர், க/ வெஸ்ட்ஹோல் தமிழ் வித்தி. கெட்டபுலா.
ச.அர்ச்சனா ராய், கு/கதிரேசன் கனிஷ்ட வித்தி, நாவலப்பிட்டி.
எம்.எஸ்.எம்.எஸ்.றிஷான், தி/அல் அஸ்கா ம.வி, வெள்ளைமணல்.

## குரைக்காத நாய்



அவுஸ்திரேலியாவில் 'டிங்கோ' எனப்படும் பெரிய வேட்டை நாய்கள் உள்ளன. இவற்றை அவுஸ்திரேலிய பழங்குடியினர் வளர்த்து வேட்டைக்குப் பயன்படுத்துவார்கள். பழங்காலத்தில் இருந்தே இந்த நாய்கள் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றன. நாய் இனமாக இருந்தாலும் இவை குரைப்பதில்லை. எப்போதாவது ஊளையிடும்.

## அறிவோம் மனதில் பதிவோம்



உலகம் முழுவதிலும் ஐயாயிரம் வகையான எறும்புகள் உள்ளன. ஒவ்வொரு வகையிலும் பல பிரிவுகள் உள்ளன.

***

இங்கிலாந்தைச் சேர்ந்த டேவிடகே என்பவருக்குச் சொந்தமான பண்ணையில் உள்ள கோழிஒன்று 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதி 2.5 மில்லி மீற்றர் நீளமுடைய மிகச்சிறிய அளவிலான முட்டையிட்டது.



## வாரம் ஒரு நாடு



### பேர்முடா.

**அமைவிடம்:** மேற்கு அத்லாந்திக் பிரதேசம். 300க்கும் அதிகமான பவளத் தீவுகளைக் கொண்ட சிறிய நாடு.

**பரப்பளவு:** 54 சதுர கி.மீ (21 சதுரமைல்)

**மக்கள் தொகை:** 56,000.

**தலை நகர்:** ஹாமில்டன் (3,800 பேர்)

**மொழி:** ஆங்கிலம்.

**மதம்:** கிறிஸ்துவம்.

**ஆட்சி முறை:** முன்பு ஸ்பெயின் ஆதிக்கத்துக்குள்ளிருந்து பின்னர் பிரிட்டனின் குடியேற்ற நாடானது. 1968ல் பிரிட்டனின் முடிக்குரிய சுயாதிக்கம் பெற்ற நாடானது. இங்கு வாழும் மக்களில் மூன்றிலிரண்டு பகுதியினர் கறுப்பினத்தவர். ஏனையோர் பிரிட்டன், போர்த்துக்கல் நாடுகளைச் சேர்ந்த மற்றும் ஐரோப்பிய இன மக்களாவர்.

**சிறப்பம்சங்கள்:** இந்நாட்டில் வாழைப் பழம் அதிகமாக விளைவிக்கப்பட்டு அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அத்துடன் அழகான பூக்களும் காய்கறி வகைகளும் வெளிநாட்டு நாணயத்தைத் தேடித் தருகின்றன.

**பார்க்க வேண்டிய இடங்கள்:** ஆங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த மிகப்பழைய தேவாலயம் தலை நகர் ஹாமில்டனில் உள்ளது. புராதன கலை அழகுடன் இந்த தேவாலயம் காட்சி தருகிறது. தீவுகள் அதிகமுள்ளமையினால் அமைதியான கடற்கரை விடுதிகள் உள்ளன. புராதன காட்சிக் கலைகள், இயற்கை வனப்பு மிக்க எழில் வனங்கள் ஆகியவை நிரம்பக் காணக்கிடக்கின்றன. ஐரோப்பிய நாடுகளின் பல உற்பத்திப் பொருள்களைக் கொண்ட வர்த்தக நிலையங்களும் உள்ளன. உல்லாசப் பொழுது போக்குபவர்களுக்கு இரவுநேர கேளிக்கை விடுதிகள் பல உள்ளன.

## விடுகதைகளும் விடைகளும்

01. ஒளியைக் கண்டால் ஒழிந்து கொள்வான் இருளைக் கண்டால் வெளியே வருவான். யார் அவன்?
02. வாலுண்டு மிருகமல்ல. நீரில் நீந்தும் மீனல்ல. முட்டையிடும் ஆனால் பறவையல்ல. அது என்ன?
03. பார்க்கக் கூடிய ஒன்று. அதற்குள் எரியக்கூடிய ஒன்றும், எழுத உதவக் கூடிய ஒன்றும் உண்டு. அது என்ன?
04. நிறம் ஒன்றையும் மலர் ஒன்றையும் இணைத்தால் ஒரு திரைப்படத்தின் பெயர் வரும். அந்தப் படம் என்ன?
05. சிவப்புச் சட்டை அணிந்து கொண்டு எல்லா ஊர்களிலும் இவன் இருப்பான். யார் அவன்?
06. மாதங்களின் பெயர்களில் ஒன்று-முன்னெழுத்தையும் பின்னெழுத்தையும் இணைத்தால் நீராகப் பொழியக் கூடிய ஒன்றின் பெயர். அந்த மாதம் எது?
07. பூ ஒன்றின் பெயரிலே மறைந்த நடிகரின் பெயர் ஒன்று உண்டு. அந்தப் பூவின் பெயர் என்ன?
08. மரத்திலே காய்க்காத பூ. வீட்டிலே இருக்கின்ற பூ. இரு எழுத்துக்களை எடுத்தால் தேங்காயில் உள்ள பூ அது என்ன பூ?
09. நாம் உறங்கினாலும் பிறரின் குரல் கேட்டு இவன் விழித்துக் கொள்வான். யார் அவன்?
10. ஒரு பெண்ணின் பெயருக்கு ஐந்து எழுத்துக்கள். இரு எழுத்துக்களை எடுத்து விட்டுப் பார்த்தால் புனித நகரம் ஒன்றின் பெயர் வரும். அது எது?

**விடைகள்:**

01. விளக்கு. 02.முதலை. 03. பத்திரிகை. 04.வெள்ளை ரோஜா. 05. தபால் பெட்டி. 06. பங்குனி. 07.செந்தாமரை. 08.சுண்ணாம்பு. 09. காது. 10. மர்சூக்கா.

தொகுப்பு: பாத்திமா சப்னா
மட்/ஹிழ்றியா வித்தியாலயம்காத்தான்குடி-02

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகா சூலம்

பவத்ராதனுக்கு இது தெளிவாகவே புரிந்திருந்தது. எனவே தான் விடிவெள்ளி எழுவதற்கு முன் குளத்துக்குப் போய் நூற்றியெட்டுத்தடவை மூழ்கினார்.

பிறகு பூஜை அறையில் வந்து அமர்ந்தார்.

பகைவனாக இருந்தாலும் அவனுக்கும் அருள வேண்டும் என்பது ஆனந்த குரு தனக்குக் கற்றுக் கொடுத்த போதனை! பவத்ராதன் குருவின் போதனைகளையும் மறக்கவில்லை; அவர் சொல்லிக் கொடுத்த வேத மந்திரங்களையும் மறக்கவில்லை!

இடிந்துபோன மனசோடு இந்நேரம் ஸ்ரீலதாவும் தூக்கமின்றி இருக்கலாம் என்பது பவத்ராதனுக்குத் தெரியும். என்றாலும் தன் மகளின் மனோநிலையை விடத் துன்பமயமானது-பாவம் அந்த அப்பாவிப் பெண் சுமதி அடைந்திருப்பது!

அவளை அந்த யக்ஷி எங்கே கொண்டு போய் வைத்திருக்கிறதென்று பார்க்கத் தான் பூஜையில் அமர்ந்ததுமே முதலில் மைவெற்றிலையை எடுத்தார், பவத்ராதன் நம்பூதிரி!

▫▫

நீலகண்டன் நம்பூதிரியின் பரபரப்புக்குக் காரணம் தெரியாமல் இல்லத்தினர் மொத்தப்பேரும் பதைத்துக் கொண்டிருந்தார்கள்.

அக்கினி பர்வதத்துக்குப் போய் மகாசூலம் எடுத்துவர வேண்டிய அவசியத்தைப் பற்றி ஒருவழியாக எல்லாரிடமும் சொல்லிப் புரியவைத்த நம்பூதிரி வேலைக்காரன் பாச்சுவைப் பார்த்தார்.

அவன் மிகவும் நடுங்கிப் போயிருந்தான்.

அவனுக்கு முன்தினம் இருந்த சந்தோசம் மொத்தமும் இன்று வடிந்து போயிற்று.

இனி எப்படி குஞ்சனைப் பார்ப்பது என்கிற குறுகுறுப்பு.

பாலேக்கல் இல்லத்துக் கதை தெரிந்தால் பரிகாசம் பண்ணுவான். கடைவீதியில் பலர் முன்நிலையில் கேள்விகள் கேட்பான்.

"என்னய்யா? மகாமாந்திரீகன்னு சொன்னியே நீலகண்டன் திருமேனியை! இப்ப எங்கே போச்சு அவரோட சக்தி எல்லாம்? துண்டைக் காணோம் துணியைக் காணோம்னு ஓடினாராமே! கடைசியிலே ஒரு சின்னச் சூலம் எடுத்துட்டு வந்ததோட சரியா! அந்த யக்ஷியை நிரந்தரமா வெரட்டறதுக்குண்டான வித்தை எதுவும் உங்க மந்திரவாதி கையிலே இல்லியா?"

இப்படி வாய் கூசாமல் அவன் இவனிடம் வெறுப்பேற்றி விடலாம்!

"யக்ஷி வந்தா உங்க மந்திரவாதி மகனைக் கட்டிப்புடிச்சுட்டுத் தூங்க வேண்டியது தானே? பன்னீர்ப்பூமணம்-குமுகுமுன்னு இல்லம் முழுக்க வீசுமே...! எதுக்கு அவளை விரட்டி அடிச்சீங்க?"

இப்படியும் அவன் பேசுகிற ஆள்தான்!

அவன் எப்படியும் பேசுவான். அவனுக்குக் கிடைத்திருப்பது இவன் முகத்தில் கரியைப் பூசுகிற சமாச்சாரம்!

பாச்சு ஒதுங்கி ஒதுங்கி வந்து நீலகண்டனின் பக்கத்தில் நின்றான். இனியும் ஏதாவது திருமேனி தெம்பாகப் பேசுவாரோ என்கிற நம்பிக்கை.

கேட்டுத் தெரிந்துகொண்டால் அல்லவா குஞ்சனின் வாயை மூடுகிற மாதிரி ஏதாவது பேசிச் சமாளிக்கலாம்?

திருமேனியிடம் ஒருபேச்சுமில்லை!

எனவே தான் முசு முசுவென்று அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தான் பாச்சு.

இந்த யக்ஷியை தங்களுக்குப் பகையாளியாக்கிவிரட்டியது பவத்ராதன் திருமேனியல்ல என்பதில் நீலகண்டன் தெளிவாகவே இருந்தார். எனவே தான் பேச்சோடு பேச்சு பவத்ராதனையும் இழுத்து பேசுகிற நம்பூதிரி இப்போது அவரைப் பற்றியே மறந்துவிட்டார்!

ஆனால் பாச்சுவுக்கு வேறொரு தினுசாக மூளை வேலை செய்தது.

இதுதான் சரியான சந்தர்ப்பம்.

மேலிடம் மனையின் மாந்திரீகனுக்கு எதிராக மக்களின் மனவெறுப்பை திசை திருப்பிவிடவும், தனது எஜமான் மீது அனுதாப அலையை மிதக்க விடவுமான ஒரு சந்தர்ப்பம் இது.

யக்ஷியை பலேக்கல் மனைக்கு அனுப்பி நிம்மதி இழக்கச் செய்தது, பவத்ராதன் திருமேனியின் கடும் பகைதான் என்று பரப்பி விட்டால் ஜனங்கள் நம்புவார்கள். காரணம் அவர் மகள் ஸ்ரீலதாவை கோகுலுக்குப் பேசவந்தவர் பவத்ராதன். அந்தப் பேச்சுவார்த்தை முறிந்ததால் இப்படிக் கோபப்பட்டிருக்கிறார் என்று சொல்வது நம்பும்படியான ஒரு சமாச்சாரமே.

எளிதில் இது எடுபட்டுவிடும். எப்படியும் ஏழு நாளில் எஜமான் மகாசூலம் எடுத்துவந்து விட்டால் நிரந்தர நிம்மதி பலேக்கல் மனைக்கு உண்டு. அதற்குள் இந்தக் கதையையும் ஊதிவிட்டு விட்டால் ஜனங்களின் கோபம் பவத்ராதனோடு பற்றிப் படர்ந்து விடும்.

"திருமேனி!" என்றான் பாச்சு!

"என்னடா?"

"ஒரு முக்கியமான விஷயம்! உங்களோட தனியாப் பேசணும்"

பம்மினான் பாச்சு.

"அதுக்கெல்லாம் எனக்கு நேரம் கிடையாது."

"நீ மொதல்லே விடியறதுக்குள்ளே ஊருக்குள்ளே ஓடிப்போய் எவனாவது குதிரை வண்டிக் காரன் இருந்தால் கூட்டிக் கிட்டுவா."

"திருமேனி!"

"சொன்னா... சொன்னதைச் செய்யேன் பாச்சு! நானே சுடு தண்ணியக் கால்லே ஊத்தின மாதிரி நிக்கறேன். இதிலே உனக்கு என்ன திடீர்னு ஒரு இரகசிய ஆலோசனை?"

அவர் எரிச்சலோடு கேட்டுவிட்டுத் திரும்பவும் சுமதியின் பெற்றோர்கள் நீலகண்டனின் முன் நிற்கவும் சரியாக இருந்தது.

"சம்மந்தித் திருமேனி!"

"என்னய்யா?"

"கோபிக்காதீங்க! என் பொண்ணுக்கு என்ன கதி ஆச்சு? தெரியலே!"

"தெரியும்!"

"எப்ப...?"

"நான் திரிசூலம் எடுத்துட்டுத் திரும்பி வர்ரப்ப தெரியும் திருமேனி! சுமதியை யாரு கொண்டு போனாங்களோ அவுங்களே அன்னிக்குத் திருப்பி அழைச்சுட்டும் வருவாங்க!"

பொத்தாம் பொதுவில் பேசினார் அவர். பாச்சுவைத் திரும்பிப் பார்த்தார். "நீ ஏண்டா நிற்கறே? இனியும் ஏழுநாள்லே பௌர்ணமி! அதுக்குள்ளே எடுத்துட்டு வரணும். இன்னிக்கு ஒரு நாள் இப்படியே போனா-இருக்கறது வெறும் ஆறுநாள்! மூணுநாள் போக-மூணுநாள் வர...! அப்புறம் எப்படி அக்கினி பர்வதத்துக் குள்ளே நுழைஞ்சு தேடறது? சீக்கிரம் வண்டிக்காரனைக் கூட்டிக்கிட்டுவா!"

கத்தினார் நீலகண்டன் திருமேனி.

"திருமேனி"-மறுபடியும் சுமதியின் அப்பா. அவருக்குப் பெற்ற சோகம்.

"என்னங்க சம்மந்தி?"

"ஏழுநாளைக்கும் அவளை எங்கேயோ வச்சிருக்கிறவங்க அவளை அழைச்சுட்டுப் போன மாதிரியே அழைச்சுட்டு வருவாங்களா?"

"ஏன் சந்தேகப்படறீங்க?"

"அவ கன்னி கழியாத பொண்ணு சம்மந்தி! கொண்டுபோனவங்களாலே அசுத்தம் ஆயிட்டா.... அவளாலே உசிரோட இருக்க முடியாது சம்மந்தி!"

நீலகண்டன் இந்த விஷயத்தைப் பிறகு தான் நிதானித்தார். தலையைச் சொறிந்தார்.

▫▫▫

ஒருபுகைச் சுருளாக பாலேக்கல் மனையைவிட்டு அகலும் யக்ஷி ஒரு தென்னந் தோப்புக்குள் பத்ராவாக மாறி வேகமாக நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தார் பவத்ராதன். மைவெற்றிலையில் அவரது கண்கள் கூர்ந்தன!

ஆனந்த குரு இந்தப் பத்ராவைப் பற்றிச் சொன்ன கதை மறுபடியும் பவத்ராதனுக்கு நினைவு வந்தது......

"யக்ஷிக் குன்றில் இருந்து இடைவிடாது பூஜை செய்து அந்தப் பத்ரா சித்தி அடைஞ்சது எப்படித் தெரியுமா?"

"சொல்லுங்க குருவே!"

"இரத்த ஹோமம் நடத்தினா! நூற்றியொரு பெண்களோட கன்னிமையைக் காவு குடுத்தா. அதுக்கப்புறம் தான் யக்ஷி ஆனா! ஒரு யக்ஷிக்கு ஆயிரம் ராட்சஸ சக்தி! அதனாலே தான் உலகமே அவளைக் கண்டு மிரண்டது! சிவயோகியார் மட்டும் அவளை ஒரு கல்லிலே ஆவாதிக்காமலிருந்தா இன்னேரம் ஆண்குலமே பூண்டத்துப் போயிருக்கும்...! அந்தக் கற்சிலை இருக்கிறது நீலகண்டன் மனையிருக்கிற இடத்துக்குப் பக்கத்திலே!"

"அந்த மனை எங்களுக்குச் சொந்தமில்லே குருவே!"

"சொந்தமாகற காலத்திலே உன் பேரனோ இல்லே-மகனோ எச்சரிக்கையா இருக்கணும்!"

"அந்த நேரம் எச்சரிக்கையா இருப்பேன் குருவே! முதல்லே நாங்க அந்த மனையை வாங்கியாகட்டும்..."

▫▫▫

அன்று நீலகண்டன் குருவிடமே அலட்சியமாகச் சொன்னது....இன்று அவரைத் திக்கு முக்காடச் செய்திருக்கிறது என்கிற மட்டில்......மைவெற்றிலையை எடுத்தபோது......

யக்ஷியின் தோற்றம் மாறிப்போய் வேறு முகம் காட்டியது.

அவள் அப்போது பத்ராவாக இல்லை!

அப்படியானால்...?

பவத்ராதன் குழம்பிப் போனார். ஒருவேளை சுமதியே தான் அந்தப் பத்ராவா? இவளைத் தான் கோகுல் மறுபடியும் மாலையிட்டு மனைவியாக்கியிருக்கிறானா?

இப்படி பவத்ராதன் குழப்பத்தோடு இருந்த அதே நேரம்தான் இருட்டுக்குள் பாய்நது பாய்ந்து ஓடி நடந்து கொண்டிருந்தான் பாச்சு!

இப்போது அவனுக்கு நீலகண்டன் திருமேனி கொடுத்திருக்கும் வேலை: ஒரு குதிரை வண்டிக்காரனை ஏழுநாளைக்குப் பேச வேண்டியது.

"பாச்சு! வண்டிக்காரன் நொண்டியா இருந்தாலும் குதிரை சண்டிக் குதிரையா இருக்கணும். அக்கினி பர்வதம் ரொம்பத் தூரம். ஞாபகத்திலே இருக்கட்டும்!"

எஜமான் சொன்னது இதயத்தில் இருந்தது.

"வந்ததுமே புறப்பட வேண்டியதுதான். குதிரைக்குப் புல்லும் கொள்ளும் போற வழியிலே நம்ம செலவு. அதுக்காக அவன் நேரத்தைக் கடத்தினா.... நம்மாலே காத்திருக்க முடியாது.......! போனோம் வந்தோம்னு வண்டியோட வரணும்..நான் பொட்டியிலே இருக்கிற பணத்தை எல்லாம் எடுத்து வைக்கறேன்..! நம்ம மூணுபேருக்கும் குதிரைக்கும் தோராயமா என்ன செலவு வரும்?"

"திருமேனி! நானும் வரணுமா?"

"இது என்னடா கேள்வி? நீயில்லாம எப்படி?"

"அக்கினி பர்வதத்திலே ஏதேதோ பிசாசுகள் எல்லாம் குடியிருக்கும்னு கேட்டிருக்கேன்!"

"பிசாசோட பிசாசு! நீயும் வாடா! உன்னைக் கண்டாத்தான் அதெல்லாம் கண்ணை மூடிக்கிட்டு ஓடும்!"

அந்த நேரத்திலும் தமாஷ் பண்ணினார் நீலகண்டன் திருமேனி.

பாச்சுவுக்கு இது மனசில் இருந்ததால் பயம் கொஞ்சம் விலகி இருந்தது! அதனால் தான் தென்னந்தோப்புக்கு நடுவே புகுந்து புறப்பட்டுப் போனான். அது சுமதியின் அப்பாவுக்குச் சொந்தமான தோப்பு. ஒருபக்கமிருந்து பார்த்தால் மறுபக்கம் தெரியாத அளவுக்கு விசாலமானது! இந்தத் தோப்பு ஒன்றை மனசில் வைத்தே சுமதியைக் கோகுலுக்குப் பேசினார் திருமேனி!

ஆனால்.... பாவம்?

மனசுக்குள் வியாகூலப்பட்டவனுக்குச் சுமதியின் களையான முகம் கண்ணுக்குள் வந்தது!

"எங்கே போயிருப்பாள் குழந்தை? யார் கொண்டு போய் ஒளித்து வைத்திருப்பார்கள்?"

யோசித்தபடியே நடந்தவன் தோப்பின் மத்திக்கு வந்துவிட்டான். இனியும் பாதித்தூரம் தாண்டினால் குதிரை வண்டிக்காரனின் வீடுவரும். அவனிடம் மொத்தமாகப் பேச வேண்டும்.

"முக்கியமான விஷயம். அதனால கூடக் குறையப் போனாலும் ஆளைக் கூட்டிக்கிட்டு வந்திடு. பேரம் பண்ணியே நேரத்தை ஓட்டாதே!"

திருமேனியின் குரல் மனசில் நின்றது.

அப்போது-

அந்தப்பக்கம் தென்னை மரத்தடியில் சாய்ந்து நின்று பாச்சுவுக்காக காத்திருந்தது ஓர் உருவம்!

"யாரது?"

"நான் தான் பாச்சு!" என்றது பெண் குரல். அருகே போய்ப் பார்த்தான். சற்று முன் கண்ணுக்குள் வந்த அதே பெண்!

"குழந்தே நீயா?" பதறினான் பாச்சு!

"ஆமாம். நான்தான். என்னையும் என்சிநேகிதியையும் கொப்பரைத் தேங்கா போடற அறையிலே யாரோ கொண்டு வந்து பூட்டி வச்சிட்டாங்க! நான் தப்பிச்சாச்சு! பாவம் அந்தப் பொண்ணாலே தப்பிக்க முடியலே......"

சுமதி கேவினாள்.

"எங்கே...எங்கேம்மா.....?"

"அதோ கொப்பரை போட்டு வைக்கற அறையிலே! வாங்க பாச்சு! அவளையும் கூட்டிக்கிட்டுப் போயிடுவோம்."

அவனுக்குச் சந்தோசமாக இருந்தது. இதைவிடப் பெரிய விஷயம் ஒன்றுண்டா? காணாமல் போன பாலேக்கல் மருமகளை ஊரெல்லாம் போய்த் தேடியும் கிடைக்கவில்லை! இப்போது அவளே எதிரில் வந்து நிற்கிறாள்....

இவளையும் அழைத்துக் கொண்டு போனால் நீலகண்டன் திருமேனியை விடக் கோகுல் எவ்வளவு சந்தோசப் படுவான்?

"வாங்க.....பாச்சு!" என்றாள் அவள்.

"நடகொழந்தே! நட... நட...." என்றான் பாச்சு! வேகமாக அவளையும் பின் தொடர்ந்து கொப்பரை போட்டு வைக்கிற அறைக்குள் வேகமாக அவன் நுழைந்து சுற்று முற்றும் பார்த்தபோது-

கதவு தானாக அடைக்கப்பட்டது அவனுக்குத் தெரியவில்லை! எதிரில் ஓர் அறைக்குள் முழுநிர்வாணமாய்க் கூனிக் குறுகி அமர்ந்திருந்த பெண்ணைத் தான் தெரிந்தது!

அவள் வேறு யாருமில்லை!

கோகுலின் மனைவி-சுமதி.

அப்படியானால் தன்னை அழைத்து வந்தது...? திரும்பிப்பார்த்தான் பாச்சு! யாரையுமே காணவில்லை.

"அம்மா நீங்களா? இதென்னம்மா இப்படியா...? இந்தாங்க -இந்தத் துண்டைப் போட்டுக்குங்க!" என்றான் பாச்சு பதட்டமாக.

துண்டை வீசிவிட்டுத் திரும்பி நின்று கொண்டான்.

சுமதி இப்படி ஏதோ ஒரு ஆபத்தில் தான் மாட்டியிருக்க வேண்டும் என்று அவனுக்கு ஏற்கெனவே தெரிந்து தானிருந்தது. ஆனால்..... இப்படிக் கொண்டு வந்து அடைத்துப் போட்டிருப்பார்கள் என்று நினைக்கவில்லை!

"யாரு கொழந்தே உன்னை இப்படிக் கொண்டு வந்து அடைச்சது?"

"வேற யார்?" என்றது கர்ண கடூரமாய் ஒருகுரல்.

தன் கழுத்துக்குப் பின்னாலிருந்து பேசியவளைப் பாச்சு திரும்பிப் பார்த்த போது-

பாச்சுவுக்குச் சர்வாங்கமும் நடுங்க ஆரம்பித்தது.

பத்ரா!

அட்டகாசமாகச் சிரித்தபடி அவனை இருகை நீட்டி அணைக்க வந்தாள் அவள். அந்தக் கைகளில் நகங்கள்.... ஒவ்வொன்றும் ஒரு கூரீட்டியாகத் தெரிந்தன!

பாச்சாவுக்கு உடம்பு மொத்தமும் நனைந்து போயிற்று!

(இன்னும் வரும்)




## உடன் பதில் எழுதவும்

'மகாசூலம்' விறு-விறுப்பாய் 18 வாரம் கடந்துவிட்டது.
தொடரில் மூழ்கிய உங்களுக்கு இனிப் போட்டி!
இத்தொடரை எழுதும் தமிழக எழுத்தாளர் பெயரை ஒரு தபாலட்டையில் எழுதி அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி. மே.05


முகவரி:

**மகாசூலம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல: 1772**
**கொழும்பு.**


கண்டுபிடிப்பதற்கு வசதியாக இரு குறிப்புக்கள்:

* தமிழக சினிமா இதழ் ஒன்றிலும் இவரது பெயரைக் கண்டிருப்பீர்கள்.
* தமிழக வார இதழ்களிலும் மர்மக் கதைகள் எழுதியுள்ளார்.


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஜி. விசாகப் பெருமான்
வயது: 21
முகவரி: லபுகெல, நுவரெலியா.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், கிரிக்கெட் விளையாடுதல்.




பெயர்: எச். முஹமட் நிஸ்வர்
வயது: 23
முகவரி: புதுக்குடியிருப்பு, கல்பிட்டி.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, பேனா நண்பர் தொடர்பு.




பெயர்: இ. நிலாந்தினி
வயது: 15
முகவரி: 268/93, அளுத்மாவத்தை, கொழும்பு-15.
பொழுதுபோக்கு: பாடல்கள் கேட்டல், பத்திரிகை படித்தல்.



பெயர்: ஏ. ரெனா
வயது: 28
முகவரி: 830, பிரதான வீதி, ஓட்டமாவடி, வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தையல்.



பெயர்: எம். பாரூக்
வயது: 25
முகவரி: P.O BOX- 10659 NAWARYAH, MAKKAH, K.S.A.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை, பேனா நட்பு.



பெயர்: ஆர். ரட்ணராஜா
வயது: 24
முகவரி: P.O BOX- 91956 DOHA, QATAR.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.

பெயர்: வி. ஜெயகுமார்
வயது: 35
முகவரி: 40, AVENUE JEAN JAURES, 93500, PANTIN, FRANCE
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: த.சசிகுமார்
வயது: 15
முகவரி: 399, பிரதான வீதி, பசறை.
பொ.போ: புத்தகம், வானொலி, நண்பர்கள் தொடர்பு, முத்திரைசேகரித்தல்.

பெயர்: த. கிருபைராஜா
வயது: 25
முகவரி: 133/7, கொள்ளுப்பிட்டி லேன், கொழும்பு - 03.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சஞ்சிகைகள் வாசித்தல், ஓவியம் வரைதல்

பெயர்: எம். நவாப்
வயது: 18
முகவரி: 438, பன்வில, கொபெய்கன.
பொ.போ: வழமையான பொழுது போக்குகளுடன், கிரிக்கெட் விளையாடுதல்

பெயர்: வி. ஹசன்
வயது: 17
முகவரி: அல்லை நகர், தோப்பூர்-07.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். முஹமட் பாஹிம்
வயது: 17
முகவரி: 08, பெலஸ் பாத், பேருவளை.
பொ.போ: சினிமா, பத்திரிகை, தொலைக்காட்சி, நண்பர் தொடர்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தாய்

## மக்சீம் கார்க்கி

22

தேநீர் பருகி முடிந்தவுடன், சாஷா ஒன்றும் பேசாமல் இகோருடன் கைகுலுக்கி விட்டு, சமையல் கட்டுக்குள் வந்தாள். தாயும் அவளைப் பின் தொடர்ந்தாள்:

"நீங்கள் பாவெலைப் பார்க்க நேர்ந்தால், நான் கேட்டதாகச் சொல்லுங்கள். மறந்து விடாதீர்கள்?" என்றாள் சாஷா.

கதவின் கைப்பிடியில் கை வைத்துத் திறக்கப்போகும் சமயம் அவள் மீண்டும் திரும்பினாள்.

"நான் உங்களை முத்தமிடட்டுமா?"

தாய் ஒன்றுமே பேசாமல் அவளை ஆர்வத்தோடு அணைத்து அன்பு ததும்ப முத்தம் கொடுத்தாள்.

"ரொம்ப நன்றி" என்று கூறிவிட்டு அந்தப் பெண் தலையை அசைத்து விடை பெற்றவாறே வெளியே சென்றாள்.

தாய் அறைக்குள் திரும்பி வந்தவுடன், ஜன்னல் வழியாக கவலையோடு வெளியே எட்டிப் பார்த்தாள். இருளில் குளிர்ந்த பனித்துளிகள் தான் பெய்துகொண்டிருந்தன.

"உங்களுக்கு புரோசரவ் தம்பதிகளை ஞாபகமிருக்கிறதா?" என்று கேட்டான் இகோர்.

அவன் தன் கால்களை அகலப் பரப்பியவாறு, தேநீரை ஓசையெழும்ப உறிஞ்சிக் குடித்தான். அவனது முகம் சிவந்து திருப்தி நிறைந்த வியர்வை பூத்துப்போய் இருந்தது.

"ஆமாம் நினைவு இருக்கிறது" என்று ஏதோ நினைவாய்க் கூறிக்கொண்டு மேஜையருகே வந்தாள் அவள். அவன் பக்கத்திலேயே உட்கார்ந்து இகோரைச் சோகம் ததும்பப் பார்த்தாள்.

"ச்சுச்சு! பாவம் அந்த சாஷா! அவள் எப்படி நகருக்குப் போய்ச் சேரப் போகிறாள்?"

"அவள் மிகவும் களைத்துப்போவாள்" என்று தாய் கூறியதை ஆமோதித்துப் பேசினான் இகோர்; "சிறை வாழ்க்கை அவள் உடல் பலத்தை உருக்குலைத்து விட்டது. அவள் எவ்வளவு பலசாலியாயிருந்தாள்? செல்லமாய் வளர்க்கப்பட்ட பெண்... அவள் நுரையீரல் ஏற்கெனவே கெட்டுப் போயிருப்பது போலத்தான் தோன்றுகிறது......"

"யார் அவள்?" என்று மெதுவாகக் கேட்டாள் தாய்.

"அவள் ஒரு கிராமாந்திரக் கனவானின் மகள். அவள் சொல்வதைப் பார்த்தால் அவள் தந்தை ஓர் அயோக்கியனாகத்தான் இருக்க வேண்டும். அவர்கள் இரண்டுபேரும் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினார்களே, தெரியுமா, அம்மா?"

"யார்?"

"அவளும், பாவெலும்தான். ஆனால் நீங்கள் தான் பார்க்கிறீர்களே, அது ஒன்றும் நடக்கிற வழியாய்க் காணோம். அவன் வெளியே இருந்தால், அவள் சிறையில் இருக்கிறாள். அவள் வெளியில் இருந்தால் அவன் சிறையிலிருக்கிறான்."

"எனக்குத் தெரியாதே" என்று ஒரு கணம் கழித்துப் பதில் சொன்னாள் தாய். "பாவெல் தன்னைப்பற்றிப் பேசுவதே இல்லை."

தாய்க்கு அந்தப் பெண்மீது அதிகப்படியான அனுதாப உணர்ச்சி மேலோங்கியது. தன்னை மீறிய ஒரு வெறுப்புணர்ச்சியோடு அவள் இகோரிடம் திரும்பிப் பேசினாள்.

"நீங்கள் ஏன் அவளை வீட்டுக்குக் கொண்டுபோய் விடவில்லை?"

"அது முடியாது" என்று அமைதியுடன் பதில் சொன்னான் இகோர். "எனக்கு இங்கே எத்தனையோ வேலைகள் ஆக வேண்டியிருக்கிறது. விடிந்து எழுந்திருந்தால் ஒவ்வொரு இடமாகப் போய்வர வேண்டும். என்னை மாதிரி மூச்சுமுட்டும் பேர்வழிக்கு அதுவே ரொம்பச் சிரமமான காரியம்."

"அவள் நல்ல பெண்" என்றாள் தாய். அவளது மனத்தில் இகோர் அப்போது சொன்ன விஷயமே நிறைந்து நின்றது. அந்த விஷயத்தைத் தன் மகன் மூலமாகக்



கேள்விப்படாமல், ஓர் அன்னியன் மூலமாகக் கேள்விப்பட்டதானது அவளது மனத்தைப் புண்படுத்திவிட்டது. அவள் தன் புருவங்களைச் சுருக்கிச் சுழித்து, இரு உதடுகளையும் இறுகக் கடித்து மூடிக்கொண்டாள்.

"அவள் நல்ல பெண்தான். சந்தேகமே இல்லை." என்று தலையை ஆட்டினான் இகோர். "நீங்கள் அவளுக்காக வருத்தப்படுவது எனக்குத் தெரிகிறது. அதில் அர்த்தமே கிடையாது. எங்களைமாதிரிப் புரட்சிக்காரர்களுக்கெல்லாம் அனுதாபப் பட்டுக் கொண்டிருந்தால், இதயமே தாங்காது. உண்மையைச் சொல்லப் போனால், எங்களில் யாருக்குமே சுக வாழ்க்கை கிடையாது. என்னுடைய தோழர்களில் ஒருவன் நாடு கடத்தப்பட்டு, சமீபத்தில் தான் திரும்பி வந்தான். அவன் நீழ்னி நோவ்கரத் சென்றபொழுது, அவனது மனைவியும் குழந்தையும் ஸ்மலேன்ஸ்கில் அவனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் ஸ்மலேன்ஸ்கிக்குத் திரும்பிவருவதற்குள், அவர்கள் மாஸ்கோ சிறைக்குள் சென்றவிட்டார்கள். இப்போதோ அவனது மனைவி சைபீரியாவுக்குப் போகப்போகிறாள். எனக்கும் ஒரு மனைவி இருந்தாள். ரொம்பவும் அருமையானவள் தான். இந்த மாதிரிதான் நாங்களும் ஐந்து வருஷம் தத்தளித்தோம். பிறகு அவளது வாழ்வும் முடிந்தது."

அவன் தன் முன்னிருந்த தேநீரை ஒரே மடக்கில் பருகினான்; பிறகு தன் கதையை மேலும் தொடர்ந்தான். அவனது சிறைவாச காலத்தின் புள்ளிவிவரங்கள், நாடு கடத்தப்பட்டு சைபீரியாவில் பட்ட பசிக்கொடுமை, சிறையிலே விழுந்த அடி உதைகள் எல்லாவற்றையும் அவளிடம் சொன்னான். அவள் அவனையே பார்த்தாள்; துன்பமும் துயரமும் நிறைந்த சோகவாழ்வுச் சித்திரத்தை அவன் அமைதியோடு எளிதாக நினைவு கூர்ந்து சொல்லுகின்ற முறையைக் கண்டு அவள் அதிசயித்தாள்...

"சரி. நாம் நம் விஷயத்துக்கு வருவோம்."

அவனது குரல் மாறிவிட்டது; முகமும் முன்னைவிட உக்கிரம் அடைந்தது. அவள் எப்படித் தொழிற்சாலைக்குள் அந்தப் பிரசுரங்களைக் கொண்டுபோக உத்தேசித்திருக்கிறாள் என்பதைக்கேட்டு தெரிந்து கொண்டான்; ஒவ்வொரு விஷயத்தையும் நுணுக்கமாக ஆராய்ந்து கேட்கும் அவனது அறிவைக் கண்டு தாய் பிரமிப்பு அடைந்தாள்.

அவர்கள் இந்த விஷயத்தைப் பேசி முடித்தவுடன், மீண்டும் தங்களது பிறந்த ஊர் ஞாபகங்களைப் பற்றிப் பேசத் தொடங்கினார்கள். அவனோ மிகவும் குஷாலாகப் பேசினான். அவளோ தனது கடந்து போன வாழ்வின் நினைவுலகத்தில் தன்னை மறந்து சுற்றித் திரிந்தாள். அது ஒரு சதுப்பு நிலம் போலத் தோன்றியது. சதுப்பு நிலத்தில் சிறுசிறு மண் குன்றுகள்; குன்றுகளின் மீது குத்துக்குத்தான காட்டுப்பூச்செடிகள்; குன்றுகளுக்கிடையே வெண்மையான பெர்ச் மரக்கன்றுகளும் குத்துப் புல்செடிகளும் அடர்ந்து வளர்ந்திருந்தன. மெல்லிய பூச்செடிகள் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தன. பெர்ச் மரக்கன்றுகள் சிறுகச்சிறுக வளர்ச்சி பெற்று, ஐந்து வருஷங்களுக்குப் பிறகு அந்தப் பிடிப்பற்ற நிலத்தில் கால்பாவி நிற்க முடியாமல் முடி சாய்ந்து விழுந்து அதிலேயே அழுகிப் போயின. இந்தக் காட்சியை கண்டபோது, அவளது இதயத்தில் ஒரு பெரும் சோக உணர்ச்சி கவிழ்ந்து சூழ்ந்தது. மீண்டும் அவளது மனக்கண் முன்னால் ஒரு இளம் பெண்ணின் உருவம் தோன்றியது. அந்த இளம் பெண்ணின் முகம் துடிப்பும் எடுப்பும் நிறைந்து உறுதியைப் பிரதிபலிக்கும் உணர்ச்சியோடு விளங்கியது. அந்தப் பெண் தன்னந் தனியாக, தள்ளாடித் தள்ளாடி கொட்டும் பனி மழையின் ஊடாக நடந்து சென்றாள்.... அவளது மகன் சிறையிலே இருந்தான். அவன் தூங்கிவிடவில்லை; வெறுமனே படுத்துக் கொண்டு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்....அவன் அவளைப்பற்றி, தன் தாயைப் பற்றிச் சிந்திக்கவில்லை. இப்போது அவனது அன்பைக் கவர்ந்திருப்பது தாயல்ல; வெறொருத்தி... கட்டுலைந்து சிதறிப்போன மேகத்திரள்களைப் போல வேதனை தரும் சிந்தனைகள் அவளைச் சூழ்ந்தன. அவளது ஆத்மாவையே இருளில் மூழ்கடித்தன.....

"அம்மா, நீங்கள் களைத்துப் போயிருக்கிறீர்கள். சரி, நாம் படுக்கலாம்" என்று இகோர் புன்னகை செய்து கொண்டே சொன்னான்.

அவனிடம் விடைபெற்றுக்கொண்டு, சமையல்றையை நோக்கி ஜாக்கிரதையாக வந்தாள். அவளது இதயம் முழுதிலும் நமைச்சல் தரும் கசப்புணர்ச்சி நிரம்பியிருந்தது.

மறுநாள் காலையில் சாப்பிடும்போது இகோர் சொன்னான்:

"அவர்கள் உங்களைப் பிடித்து, இந்தத் துவேஷப் பிரசுரங்கள் எல்லாம் எங்கிருந்து கிடைத்தன என்று கேட்டால், என்ன பதில் சொல்லுவீர்கள்?"

"அது ஒன்றும் நீங்கள் கேட்டுத் தெரிய வேண்டியதில்லை என்பேன்" என்றாள்.

"அப்படிச் சொன்னால் அவர்கள் அதை ஒப்புக்கொண்டு உங்களை விட்டுவிட மாட்டார்கள்" என்றான் இகோர். "கேட்டுத் தெரிய வேண்டியதுதான் தங்கள் வேலை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே உங்களை அப்படியும் இப்படியும் புரட்டிப் புரட்டிக் கேள்விகேட்டு, உண்மையை உங்கள் வாயிலிருந்து பிடுங்கப் பார்ப்பார்கள்."

"எப்படிக் கேட்டாலும் நான் சொல்லவே மாட்டேன்."

"சிறையில் போடுவார்கள்."

"போடட்டுமே! அதற்காவது நான் லாயக்கு என்றால் கடவுளுக்குத்தான் நன்றி செலுத்த வேண்டும்" என்று பெருமூச்சுடன் சொன்னாள் அவள். "என்னை யார் விரும்புகிறார்கள்? ஒருவருமில்லை. அவர்கள் என்னைச் சித்ரவதை செய்ய மாட்டார்கள். இல்லையா?"

"ஊம்!" என்று அவளைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டே சொன்னான் இகோர். "சித்ரவதை செய்யமாட்டார்கள். ஆனால், தங்கள் நலனைத் தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டும் அதுதான் கெட்டிக்காரத் தனம்."

"ஆமாம். அதை நீங்கள் சொல்லித்தான் அப்பா, எனக்குத் தெரிய வேண்டும்" என்று சிறு சிரிப்புடன் சொன்னாள் தாய்.

இகோர் பதிலே பேசாமல் அறைக்குள் மேலும் கீழும் நடந்தான். பிறகு அவள் பக்கம் திரும்பிச் சொன்னான்.

"அம்மா, இது கஷ்டம்தான்! உங்களுக்கு எவ்வளவு கடினமாயிருக்கிறது என்பது எனக்குத் தெரியும்."

"எல்லோருக்கும்தான் கஷ்டமாயிருக்கிறது எனக் கையை ஆட்டிக்கொண்டே பதிலளித்தாள் அவள். "புரிந்து கொண்டவர்களுக்கு அத்தனை சிரமமில்லை. எந்த நன்மைக்காக மக்கள் இப்படிக் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நானும் இப்போது தான் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புரிந்து கொண்டு வருகிறேன்."

"அதை மட்டும் நீங்கள் உணர்ந்து கொண்டால் ஒவ்வொருவரும் உங்களை விரும்புவார்கள், அம்மா! ஒவ்வொரு வரும் விரும்புவார்கள்" என்று மனப்பூர்வமாகச் சொன்னான் இகோர்.

அவள் அவனை லேசாகப் பார்த்து, புன்னகை புரிந்தாள்.

மத்தியானத்தில் அவள் தொழிற்சாலைக்குப் புறப்படத் தயாரானாள். போவதற்கு முன் அந்தப் பிரசுரங்களைத் தன் ஆடைகளுக்குள், வெளியே தெரியாமல் நாசூக்காக வைத்துக் கட்டிக் கொண்டாள். அவள் எல்லா வற்றையும் ஒளித்து வைத்துக் கொண்ட லாவகத்தைக் கண்டு திருப்தியோடு சப்புக் கொட்டினான் இகோர்.


"ஸோ குட்!" என்று கத்தினான். முதல் புட்டி பீரைக் குடித்த உற்சாகத்தில் ஜெர்மானியர்கள் இப்படித்தான் சொல்லுவார்கள். "இந்த பிரசுரங்களை உடையிலேயே பொதிந்து வைத்துக் கொண்டதால், ஆள் வித்தியாசமாகத் தோன்றவில்லை, அம்மா! நீங்கள் இப்போதும் சதைவிழத் தொடங்கும் நடுத்தர வயதுப் பெண் போலவே நெட்டையாக இருக் கிறீர்கள்! விகாரம் தென்படவில்லை! கடவுள் உங்கள் சேவையை ஆசீர்வதிக் கட்டும்!"

அரை மணி நேரத்திற்குப் பின் அவள் தொழிற்சாலையின் வாசலில் நின்றாள்.

அமைதியும் நம்பிக்கையும் நிறைந்தவளாய்த் தன் கையிலுள்ள கூடைகளின் கனத்தால் குனிந்துபோய் நின்றாள். தொழிற்சாலைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு தொழிலாளியையும் அங்கு நின்ற இரண்டு காவலாளிகளும் சோதனை போட்டு உள்ளே விட்டார்கள். இதனால் அந்தத் தொழிலாளிகள் கொதிப்படைந்து அந்தக் காவலாளிகளின் மீது தாறுமாறாக வசைமாரி பெய்தார்கள், கிண்டல் செய்தார்கள். ஒரு புறத்தில் படபடக்கும் கண்களும் சிவந்த முகமும் நீண்டுயர்ந்த கால்களும் கொண்ட ஒருவனும் பொலிஸ்காரனும் நின்று கொண்டிருந்தார்கள். தாய் தனது அன்னக்காவடியின் நுகக்காலை ஒரு தோளிலிருந்து மறு தோளுக்கு மாற்றினாள்; அந்த நெட்டைக்காலனைப் புருவங்களுக்கு மேலாக லேசாகப் பார்த்தாள். அவன் ஒரு வேவுகாரன் என்று சந்தேகம் அவளுக்குத் தட்டியது.

"ஏ பிசாசுகளா! நீங்கள் எங்கள் பைகளைச் சோதனை போட்டு என்ன பிரயோசனம்? எங்கள் தலையையல்லவா சோதனை போட வேண்டும்!" என்று நெட்டையான சுருண்ட மயிர்த் தலையனான ஒரு தொழிலாளி தன்னைச் சோதனையிட்ட காவலாளிகளைப் பார்த்துக் கத்தினான்.

(தொடர்ந்து வரும்)



### கலைஞர் கருணாநிதியைக் கவர்ந்த தாய்

"அலெக்சி மாக்சி மோவிச் பெஷ்கோவ் என்பவர் எழுதிய தொடர்கதை இலக்கியத்தை வெளிவர விடாமல் ஒரு அரசு தடுத்தது. எனினும் மக்கள் அந்த உணர்ச்சி கொப்பளிக்கும் இலக்கியத்தை இரகசியமாய் படித்தனர்.

அடக்குமுறைகளை உடைத்து அந்த இலக்கியம் இன்று உலகில் உள்ள நூல் நிலையங்களில் ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறது.

அந்த இலக்கிய ஆசிரியரின் புனை பெயர்தான் மக்சீம் கார்க்கி! நூலின் பெயர் தாய்! தடுக்க முயன்றது ஜார் அரசு.

என் தாயைப் போல் நான் நினைவு கூரும் இலக்கியம் கார்க்கியின் அந்த 'தாய்'! என்னைக் கவர்ந்த உலக எழுத்தாளர் அவர்!

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

# அவள் ஒரு மாதிரி

அந்த மஞ்சள் கலர் ஆட்டோ மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

மாலதி இன்று காலை ஏழுமணிக்குத் தான் குவைத் நாட்டிலிருந்து இலங்கைக்குத் திரும்பினாள். அவளது மனதில் எத்தனை சுமைகள். குவைத் நாட்டில் மாடாய் இரண்டு வருடம் உழைத்துத் தேய்ந்து போன மனக் கவலைகளுடன் காணப்பட்டாள். அவளது வாழ்வில் மீண்டும் ஒரு இன்பம் தோன்றுமா என்பது கேள்விக்குறி. அவளது மன இன்பம் எப்போதோ விலாசம் இல்லாது தொலைந்து போய்விட்டது.

காதலித்து திருமணம் செய்து மூன்று பெண் பிள்ளைகள் பெற்றபின், வேறு ஒருத்தியுடன் புது வாழ்க்கை வாழும் கணவனை மனதில் திட்டிக்கொண்டாள். அவனால் தானே மாலாவுக்கு இந்த நரக வாழ்க்கை?

குவைத் 'பொஸ்' மாலாவிடம் வீட்டு வேலையை மட்டும்தான் வாங்கினானா? பாவி; அவனுக்குள் உடல் பசி ஏற்படும் போதெல்லாம் மாலாவை அழைப்பான். அந்த மோசமான நிமிடங்களில் எல்லாம் மாலா அவனிடமிருந்து தப்பிக்க என்ன, என்ன உபாயங்களைக் கையாண்டிருக்கிறாள்!

ஒரு நாள் இரவு ஒட்டகத்தின் இறைச்சியை கூல் ரூமில் போடுவதற்காக துண்டு துண்டாக வெட்டிக் கொண்டிருக்கும் போது பாவிப்பயல் 'பொஸ்' மாலாவை கட்டிப் பிடிக்க வந்தான். அப்போது மாலா தன்கையிலிருந்த கத்தியால் அவனை குத்தி காயப்படுத்த முற்பட்டபோது இருவரும் மல்லுக் கட்டினர். அந்த சோக சம்பவத்தில் மாலாவின் கையில் கத்திபட்டு பெரும் காயத்தை ஏற்படுத்தி அடையாளச் சின்னத்தையே (தழும்பு) உண்டாக்கி விட்டது. அன்று முதல் பொஸ் மாலாவிடம் அங்கச் சேட்டை செய்வதை நிறுத்திக் கொண்டான். இத்தனைக்கும் அந்த குவைத் 'பொஸ்'சுக்கு வயது என்ன தெரியுமா? அறுபத்தி எட்டு. இரண்டு பொண்டாட்டிக்காரனாம். பாவிக்கு ஒரு டசின் பிள்ளைகள். கொடுத்து வைத்தவன்தான்.

ஆட்டோவும் ஓடிக்கொண்டிருந்தது.



சிலாபம். பொ. புஷ்பராஜு

ஆட்டோவின் ஓட்ட வேகத்தை போல மாலாவின் மனதிலும் எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

வீட்டில் எட்டு, ஆறு, நான்கு வயதில் பெண் பிள்ளைகள். வயது போன அம்மா. போதாததற்கு பாரிச நோயால் பாதிக்கப் பட்டு நடக்க முடியாது படுத்த படுக்கையாக கிடக்கும் அப்பா. குவைத்தில் சம்பாதித்த பணத்தில் மிகுதியிருப்பதோ இன்னும் இருபதாயிரம் மட்டுமே. இன்றோ, நாளையோ அப்பாவும் மண்டையைப் போட்டு விட்டால் மரணச் செலவு செய்வதற்கே போதாது.

இந்நிலையில் யோசித்தாள். "அந்தக் குவைத் கார பொஸ்சின் காம பசிக்கு என் உடலை உணவாக கொடுத்திருந்தால் இன்று கை நிறைய காசு. குடிசை வீட்டை இடித்து தள்ளி விட்டு கல்வீடுகட்டி, டி.வி. டெக், ஃபேன்,டபிள் செட் ரேடியோ, பஞ்சு மெத்தை என்ன அழகான வாழ்க்கை வாழ்ந்து அழகு பார்த்திருக்கலாம். பிள்ளைகளை வளர்ப்பதற்கு வீட்டில் ஒரு ஆயாவையும், வாழ்க்கையில் ஒடிந்து, விழுந்து நோயாளியாகி விட்ட அப்பாவையும், அம்மாவையும் கவனித்துக்கொள்ள ஒரு வேலைக்காரியையும், ஒழுங்கான முறையில் வாய்க்கு ருசியாக சாப்பிட ஒரு சமையல் காரியையும் ஏற்பாடு செய்திருக்கலாம். எந்த வித தொல்லையும் இன்றி வாழ, மீண்டும் குவைத் சென்று 'பொஸ்'சுடன் இருந்திருந்தால் கை நிறையக் காசும் கிடைக்கும். ஒரு ஆடம்பர வாழ்வு வாழ்ந்திருக்கலாம். தவறவிட்டு விட்டேன். பரவாயில்லை இந்த வாழ்க்கை அதை விட நல்லது தானே!' என்று அவளது மனது சிந்தித்துக் கொண்டிருக்கும் போது ஆட்டோவும் திடீரென நின்று விட்டது.

அந்த இடம் ஒரு காட்டுப் பகுதி. கண்ணுக்கு எட்டிய தூரத்தில் கூட வீடுகள் தென்படவில்லை. மனிதச் சத்தத்தையே காணோம். பறவைகளின் சத்தங்கள் மட்டுமே பெரிதாக ஒலித்தன.

ஆட்டோ ட்ரைவர் பின்பக்கமாக திரும்பி மாலாவைப் பார்த்துச் சிரித்தான். அவனது சிரிப்பைக் கண்டதும் மாலா பயந்தே போய் விட்டாள். கை, கால்கள் எல்லாம் நடுங்கத் தொடங்கின. மணி பேர்சில் இருபதாயிரம் பணம். எல்லாமே ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள். மீண்டும் பயந்து நடுநடுங்கினாள்.

ட்ரைவர் ஒரு கையில் ஆட்டோவின் கிளச்சைப் பிடித்துக் கொண்டு மீண்டும் சிரித்தவாறு மாலாவின் கால்களுக்கு அருகில் மறு கையை நீட்டினான்.

திடீரென மாலா 'படார்' என ஒரு அறையை ட்ரைவருக்கு அறைந்துவிட்டு ஆட்டோவை விட்டு வீதிக்கு இறங்கி கத்தத் தொடங்கினாள்.

மாலா அவ்வழியாக வந்த கார் ஒன்றை நிறுத்தச் செய்து அழுது கொண்டே நடந்ததைக் கூறினாள். ஆட்டோ ட்ரைவர் எதையோ கூறமுயன்ற போது, காரை விட்டு இறங்கிய இரு வாலிபர்கள் ஆட்டோ ட்ரைவரை அடி, அடி என அடித்து சேர்ட்டையும் கிழித்து விட்டனர். அவனது தலையில் இரத்தம் வடிந்தது.

"ஏய் இனிமேல் இப்படி நடக்காதே. பெண்களை அழைத்துப் போகும் போது கண்ணியமாக நடந்து கொள்." என்றான் காரில் வந்தவர்களில் ஒருவன்.

ஆட்டோ ட்ரைவர் அடிபட்ட வேதனையுடன் "நான் என்ன தவறு செய்தேன்? எனக்கும் அக்கா தங்கச்சிமார் உள்ளனர். ஆட்டோவில் பெட்ரோல் முடிந்துவிட்டதால் பின் சீட்டுக்கு அடியில் றிசேவ் பெட்ரொல் டாங்கியை இயங்க வைப்பதற்காக சுவிட்சைப் போடுவதற்காகத்தான் கையை நீட்டினேன். என்னை ஒரு வார்த்தைகூட பேசவிடாது தடுத்து அடித்து துன்புறுத்திவிட்டீர்களே." எனத் தேம்பித் தேம்பி அழுதவண்ணம் கூறினான்.

அடப் பாவமே! குவைத் 'பொஸ்'சைப் போல இவனுமிருப்பான் என நினைத்துத் தானே நான் பெரியதோர் தவறை செய்து விட்டேன் என நினைத்து மாலாவும் அழுது கொண்டே "தம்பி என்னை மன்னித்து விடுங்கள்" என்று கெஞ்சினாள். அப்போது அவளது மனது நொறுங்கிப் போயிருந்தது. கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. ஆனால் அவளின் வார்த்தைகளில் மட்டும் ஒருவித பாச உணர்வு தெளிந்திருந்தது.

# அந்தஸ்து



**கவிப்பிரியா நிஷா**

**க**ட்டிலில் குப்புறப் படுத்தவாறு விசும்பிக் கொண்டிருந்த அக்காவைப் பார்க்க மீராவுக்கு பாவமாக இருந்தது. ரெண்டு நாட்களாய் சாப்பிடக்கூடப் பிடிக்காமல் அழுதழுது கிடக்கும் அக்காவின் நிலையை எண்ணும் போது மனம் இலேசாக வலித்தது.

ரமேஷ், அக்காவை பெண் கேட்டு வந்ததும், அப்பா ரமேஷை அவமானப் படுத்தி அனுப்பியதும் இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்து முடிந்தகதை. அதை நினைத்துத்தான் அக்கா இப்படி அழுது வடிக்கிறாள்.

அக்கா ரமேஷை விரும்புகிறாள். அவரையே திருமணம் செய்து கொள்ளவும் ஆசைப்படுகிறாள். ஆனால் அப்பா இதை எதிர்த்து நிற்கிறார்.

தன் வீட்டுக்கு மாப்பிள்ளையாக வருபவன் தன்னைப் போல ஒரு பணக்காரனாக இருக்க வேண்டுமென்று அப்பா எதிர்பார்க்கிறார். அக்காவின் அழுகை இன்னும் ஓய்ந்ததாக தெரியவில்லை.

அக்காவுக்காக அப்பாவிடம் பேசிப் பார்த்தால் என்ன? மனதில் புதிதாக ஓர் எண்ணம் உருவாக மீரா அறையைவிட்டு வெளியே வருகிறாள்.

அப்பா தினமுரசில் மூழ்கிப் போயிருந்தார். "அப்பா" அவள்தான் அழைத்தாள். "என்ன?" பத்திரிகையிலிருந்து பார்வையை எடுக்காமலே கேட்டார். "அக்காவை அந்த ரமேஷுக்கே கட்டிக் கொடுத்திடுங்களேன்" கூறிவிட்டு அப்பாவின் முகத்தை ஏறிட்டாள். அவரது கண்கள் கோபத்தில் சிவந்து போயிருந்தன.

அவள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தொடர்ந்து பேசத் தொடங்கினாள். "அக்காவைப் பார்க்க ரொம்ப பாவமாக இருக்கப்பா. அவ விரும்பும் அந்த ரமேஷுக்கே அவளைக் கட்டிக் கொடுத் திடுங்கப்பா. ரமேஷ் ரொம்ப நல்லவர். அக்காவை கண்கலங்காம வெச்சி....."

அவள் பேசி முடிப்பதற்குள், "ச்சீ வாயை மூடு. சின்னக் கழுதை நீ எனக்கே புத்தி சொல்ல வந்திட்டியா? அவளுக்கு இவ்வளவு பிடிவாதம்னா எனக்கு எவ்வளவு இருக்கும். அவளை வெட்டிப் போட்டாலும் போடுவேனே தவிர அந்தப் பிச்சைக்காரப் பயலுக்கு கட்டிக் கொடுக்க மாட்டேன். என்னோட அந்தஸ்து என்ன? கௌரவம் என்ன? என்னோட அந்தஸ்துக்கு அவனால ஏணி வெச்சாலும் எட்ட முடியுமா? போயும் போயும் ஒரு கூலிக்காரன் என் வீட்டுக்கு மாப்பிள்ளையா வர்ரதா? நெவர்.... நாளைக்கு அவளுக்கும் என் நண்பனோட மகனுக்கும் நிச்சயதார்த்தம். இதைப் போய் அவகிட்ட சொல்லிவை."

அப்பா தீர்மானமாக கூறிவிட்டார். மீரா மீண்டும் அறைக்குள் நுழைகிறாள். அக்காவின் அழுகைச் சத்தம் இப்போது பலமாக கேட்கிறது. அப்பா பேசியது அவளது காதுகளிலும் விழுந்திருக்க வேண்டும்.

அக்காவின் அருகில் வந்து அமர்ந்தவள் "அக்கா நீ ரமேஷ் கூடப் போயிடு" என்றாள் தீர்மானமாக.

அவள் மீராவை அதிசயமாகப் பார்த்தாள். "ஆமா அக்கா நீ உடுத்தின உடுப்போட வந்தாலும் உன்னை ஏத்துக்க ரமேஷ் தயாரா இருக்காரு. அப்பா உனக்கு ரமேஷை கட்டித்தர்றதா தெரியல. அதான் சொல்றேன். நீ ரமேஷ் கூடப் போயிடு."

மீராவை அணைத்துக் கொண்டு அவள் அழுதாள். ஓடிப் போனவள் என்ற அவப்பெயரை சுமக்க அவள் விரும்பவில்லை. அப்பாவின் சம்மதத்தோடு ரமேஷை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாள். ஆனால் அது நடக்கக் கூடிய காரியமா?

மறுநாள் பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்த மீரா வீட்டு வாசலில் நிரம்பியிருந்த கூட்டத்தைப் பார்த்து தனக்குள் நினைத்துக் கொண்டாள். 'அக்காவின் நிச்சயதார்த்தத்திற்கு அப்பா நிறைய பேரை அழைச்சிருக்கார். பாவம் அக்கா! விருப்பமில்லாத இந்த திருமணத்தை செய்துகொண்டு எப்படித்தான் சந்தோஷமாக வாழப் போகிறாளோ தெரியவில்லை'

வீட்டுக்குள் நுழைந்தவள் அந்தக் காட்சியைக் கண்டு நிலைகுலைந்து போனாள்.

அதிர்ச்சியோடு சுற்றும் முற்றும் பார்த்தாள். அப்பா யாருடனோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"அப்பா அக்காவுக்கு என்னாச்சு?" அவர் அவளது கையைப் பிடித்து பரபரவென்று அறைக்கு இழுத்துச் சென்றார்.

"சொல்லுங்கப்பா அக்காவுக்கு என்னாச்சு?" அவர் எங்கோ வெறித்துப் பார்த்தவாறு சொன்னார்.

"அவ விஷத்தைக் குடிச்சிட்டு தற்கொலை பண்ணிக்கிட்டா."

"நோ"

அந்த அறையே அதிரும்படி கத்தினாள் மீரா.

"என் அக்காவை அநியாயமா கொன்னுட்டீங்கல்ல. உங்க அந்தஸ்தால என் அக்காவோட உயிரை திருப்பி தர முடியுமா? சொல்லுங்கப்பா சொல்லுங்க?"

அவளது கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாது அவர் கலங்கிப் போய் நின்றார்.

# சிறகொடிந்த ஆசை



**ஷர்மிளா இஸ்மாயில்**

**மோ**ட்டார் பைக் வாங்கி விடுவதென்றே உறுதியாக இருந்தான் மனோ. அப்பாவிடம் அடிக்கடி முணுமுணுத்தும் பலனில்லை. பைக் பற்றி பேச்சை எடுத்தாலே "பேசாமல் படி. எக்ஸாமெல்லாம் நல்லா பாஸ் பண்ணிட்டு வா. பிறகு பார்க்கலாம்" என தயவு தாட்சண்யம் சிறிதும் மனதில் கொள்ளாது வெட்டொன்று துண்டிரண்டாக சொல்லி விடுவார்.

புறுபுறுத்தான். முணுமுணுத்தான். பலனில்லை. படிக்கத் தொடங்கினான். எப்படியும் பாஸ் பண்ணிவிட வேண்டும். பிறகு அப்பா பைக் வாங்கித் தரத்தானே வேண்டும் என கறுவிக் கொண்டான். யார் யாரோ என்னவெல்லாமோ இலட்சியமாகக் கொண்டு படிப்பார்கள். மனோவின் இலட்சியமே மோட்டார் பைக்காக இருந்தது. இலட்சியத்தில்(!) உறுதி வெகுவாக இருந்தது.

பாஸ் பண்ணியாயிற்று. கெம்பஸுக்குப் போவதற்குக்கூட புள்ளிகள் பெற்றான். அப்பாவிடம் ஆர்வமாய் விசாரித்தபோது வாக்கு தவறி விட்டார். நெஞ்சம் துடித்தது அவனுக்கு. "இப்போ கையில் பணம் இல்லப்பா. பிஸினஸ் ரொம்ப டல்லடிச்சு போயிருக்கு. கொஞ்சம் பொறு. எங்கப்பா போயிடப் போவுது. வாங்கித் தர்றேனே." என வார்த்தைகளை உதிர்த்து விட்டு நகர்ந்து கொண்டார்.

"ஹா....." என மனம் ஏங்கி அழுதது. கெம்பஸுக்குள் 'இங்கிலிஷ்' மீடியம் வேறு. அவனவன் ஜீன்ஸும் சேர்ட்டும்! என்ன லாவகமாய் பளபளக்கும் பைக்குகளில் பறந்து திரியும் ஹீரோக்கள் வாழ்க்கை வெறுத்துப் போயிற்று. காதலியின் முகத்தை கனவில் காணும் இளைஞர் கூட்டத்தினின்றும் பிரிந்து தனியாக கலர் கனவு கண்டான். 'ஹொண்டா, யமஹா...., சுசுக்கி....' என விதம் விதமாய் பைக்குகள். மூக்கை மூடும் ஹெல்மட் மாட்டி லாவகமாய் ஏறிப் பறக்க மனசு துடித்தது.

'அப்பாவின் வாக்குறுதி கிடக்கட்டும் கிடப்பில். வேலை கிடைத்ததும் முதல் வேலை லோன் கீன் போட்டு பைக் வாங்கி விடுவது தான்.' என தனக்குள்ளேயே சபதம் செய்து கொண்டான் மனோ.

இதற்கிடையில் ஆத்ம நண்பன் வேறு சொந்தமாய் பைக்கொன்றை வாங்கி வயிற்றெரிச்சலை மூட்டினான்+கூட்டினான். மனோவையும் கூட்டிக்கொண்டு பறந்து திரிந்தான். இப்படி கண்மண் தெரியாமல் பறந்து ஒரு நாள் லொறியொன்றின் முகத்தை முத்தமிட்டு, இரத்தம் தெளித்து இருவரும் 'ஹொஸ்பிடல்' படுக்கையில் கண்மூடிக் கிடக்க. அப்பா, அம்மா பதறியழுதனர்.

கண்விழித்த மனோ, நண்பன் ரகுவைப் பார்த்துப் பதறினான். அப்பா மெதுவாய் அவன் தலையைக் கோதினார். "இள ரத்தம். பறந்து திரிஞ்சீங்க. பின் விளைவுகளை மறந்திட்டீங்க. ஆமாப்பா. உன்னோட நண்பன் இனிமே எழும்பி நடமாட முடியாதுப்பா. முடமாகிட்டான்." அப்பாவின் விழிகள் கலங்க, மனோ கதறினான். தான் தப்பிய சந்தோசம் மைனஸாகிப் போக நண்பனின் நிலையைப் பற்றிய சோகத்தில் மனோ அழுது கொண்டிருக்க- அவனது பைக் ஆசையும் அழிந்து போகிறது.

# அவள் எழுந்து போனாளே.....

**ம**லை நாட்டின் எழில் கொஞ்சும் மையத்தில் அந்த கல்வி நிறுவனம் மிகச் சிறப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. அதன் இடது பக்கத்தில் திரித்துவக் கல்லூரி கம்பீரமாய் எழுந்து நின்றது. தனியார் கல்வி நிறுவனமான பெயர் பெற்ற அந்தக் கல்வி நிறுவனம் வழக்கம் போல் காலை எட்டு மணிக்கே கதவு விரித்து காத்துக் கிடந்தது. மாணவர்கள் ஒருபக்கமும் மாணவியர் ஒரு பக்கமுமாய் அரட்டைகள் தூள் பறந்தன. பனி மூட்டம் விலகாமல் நகரம் 'உம்'மென்று கிடந்தது. 'டியூட்டரி'யின் சுவர் முழுக்க போர்வையாய் போர்த்தப் பட்டிருக்கும் விளம்பரங்கள். கலர்கலராய் கொட்டை எழுத்துக்களில் ஒரு தரமாவது வாசிக்கத் தூண்டும் கவர்ச்சி கண்ணை பறிக்கும்.

ஆசிரியர்கள் வழக்கம் போல் குறிப்பிட்டபடி அச்சொட்டாய் நேரத்திற்கு வந்து உட்கார்ந்து விட மாட்டார்கள். குழுமி நிற்கும் இள வயதினர் டியூட்டரிக்குள் நுழையாமல் முன் நிற்கும் பரந்த வாகை மர நிழலிலும், அதனையொட்டி எழுந்து நிற்கும் மதிலின் மேலும் உட்கார்ந்திருந்தனர். புதிதாக வந்தவர்கள் கவுண்டரில் பணம் செலுத்தி றசீது பெற்றுக் கொண்டு பழையவர்களுடன் அறிமுகமாகினர். ஒட்டப் பட்டிருக்கும் போஸ்டர்களையும் ஒருதரம் மேய்ந்து பார்த்தனர். ஆங்கிலம், கணிதம், பௌதீகம், இரசாயனம், உயிரியல், இஸ்லாம் எல்லாம் பிரபலமான ஆசிரியர்கள். புதியவர்களுக்கு நெஞ்சு நிறைந்த திருப்தி. வெளியூரிலிருந்து உறவினர்களின் வீடுகளில் அடைக்கலமாகி, இந்த டியூட்டரியில் படிக்க வந்தவர்களும் கணிசமாய் வந்திருந்தனர். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. பனி விலக சூரியன் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான். சிட்டுக்களின் கொல்லென்ற சிரிப்பொலி காதை சில்லிட வைத்தது. யாராவது நகைச்சுவை மன்னன் ஜொள்ளு விட்டிருப்பான்.

'சேர்' வாறார். ஒருவன் கூவ, ஏககாலத்தில் அனைவரும் திரும்பினர். பௌதீகவியல் புலியென பெயரெடுத்த அவர் வந்துகொண்டிருந்தார். அவரின் பாடத்துக்குரியவர்கள் வெகு உற்சாகமாய் ஹோலுக்குள் நுழைந்தனர். அவரின் வகுப்பில் மட்டும்தான் ஏகப்பட்ட கிராக்கி இருக்கும். மாணவர் தொகையும் அதிகம். ஆண்கள் ஒருபக்கமும், பெண்கள் ஒரு பக்கமுமாய் வசதியாய் அமர்ந்து கொண்டனர். சில நேரம் இடம்பற்றாக் குறைவினால் மாறிமாறியும் இருக்கைகளை பிடித்துக் கொள்வர். பெண்கள் வரிசைக்குப் பின் ஆண்களும், ஆண்கள் வரிசைக்குப் பின் பெண்களுமாய் வீற்றிருப்பதில் அலாதிப் பிரியம் சிலருக்கு.

பாடம் ஆரம்பமாகிவிட்டது. மேடையில் ஏறி நின்று அவர், விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார். அவரின் விழிகள் எப்போதும் மாணாக்கரின் செயற்பாடுகளில் அவதானம் செலுத்தும். விஷமம் செய்பவர்களை கடுமையாய் கண்டித்து வைப்பவர். எல்லோரும் நன்றாய் படிக்க



**கன்ஸியா**

வேண்டும் என்ற அவா கொண்டவர். பாடம் தீவிரமாய் நடந்து கொண்டிருந்தது அனீஸ் மட்டும் (கற்பனை பெயர்) கவனம் முழுக்க வேறு திசையில்லயிக்க சொக்கிப் போயிருந்தான். அவனுடைய முன்வாங்கில் பெண்கள் அமர்ந்திருந்தனர். அனீஸ் முன்னிருந்த ஒருத்தியிடம் விஷமம்செய்தான். அவனுக்கு வசதியாய் அவளுடைய நெருக்கமான இடப் பற்றாக்குறை பச்சைக் கொடி காட்டியது. அவள் அருவருப்புடன் நெளிந்து கொண்டிருந்தாள். இன்ரஸ்டாக பாடம் வேறு நடக்கிறது. குறிப்புகளையும் எடுக்க வேண்டும் அவளுக்கு சங்கடமாய் இருந்தது.

அவளின் அந்த இணங்கலை சாதகமென்று நினைத்த அனீஸ் இன்னும் சற்று முன்னேறினான். குளம் அமைதியாக இருக்குதென்று முதலைகள் இல்லை என்றாகி விடுமா? அவன் கீழே குனிந்து இல்லாத ஒன்றை தேடுவதாய் பாசாங்கு செய்து அவள் பட்டுப் போன்ற கடைச்சல் பாதங்களில் கரம் தடவினான். அவளுக்குள் நாகம் தீண்டியதைப் போல் வலித்தது. முகம் ஜிவ்ஜிவ்வென்று சிவந்தது. உதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டாள். வகுப்பறையில் பாடங்களில் புத்தியை செலுத்த முடியவில்லை. விழிகள் நெருப்பாய் எரிந்தன. அவன்-அவளின் மனப் போராட்டங்களை அறியாமல் முன்னேறினான். மெல்ல மெல்ல பாதங்களில் முன்னேறி முழங்காலுக்கு மேல் அவன் கரங்கள் உயர்ந்தபோது அவளால் பொறுத்திருக்க முடியவில்லை. அவசரமாக ஊர்ந்த அவன் கரங்களை தட்டிவிட்டு, குறிப்பேடுகளை அள்ளிக் கொண்டு ஆசிரியரிடமும் சொல்லிக் கொள்ளாமல் நேரே கவுண்டரில் போய் நின்றாள். அவளால் அந்த அவமானத்தை சொல்ல முடியவில்லை. தொண்டை கம்மி, விழியோரங்களில் நீர் கட்டியது. ஒருவாறு அசிங்கத்தை கூறிவிட்டு, விறுவிறுவென்று பஸ் நிலையம் நோக்கி நடந்தாள்.

முகாமையாளர் ஊடாக விடயம் முழுவகுப்பிலும் பரவிவிட, ஏற்கெனவே அனீஸில் கண்வைத்திருந்த ஆசிரியர் பொங்கியெழ-அவன் அவமானத்தால் சிறுத்துப் போனான். இக்கணமே அவன் உடைந்து தூசாக பறக்கமாட்டேனா என ஏங்கினான். பெண்கள் தரப்பிலிருந்து கண்டனக் கணைகள் அவன் இதயத்தில் துளையிட்டன. தோழர்களின் நையாண்டிப் பேச்சுக்கள், அவனை இருக்கமுடியாமல் செய்ய குனிந்த தலையுடன் வகுப்பை விட்டும் வெளியேறினான்.

"டேய் மச்சான் விட்ட இடத்தில இருந்து தொடரப் போறியா." யாரோ ஜொள்ளுவிட, கொல்லென்றது மண்டபம்.

# அன்றும் இன்றும்

**கி**ண்ணியாவின் தோனாக் கடலோரம் அலைக்கரம் நீட்டும் துறையடிக்கடல் மணலுக்கு காற்று மருதம் கட்டி நிற்க.....

"அன்பே என்ன வேண்டும் சொல்"

"உங்கள் அன்பு மட்டும் போதும்"

"கற்கண்டே சொல்லு உன் செஞ்சொற் கொண்டு செப்பிவிடு எதையும் நான் தருகிறேன்."

"உங்கள் அருகாமை மட்டும் போதும்"

"சிற்பி செதுக்கா பளிங்குச் சிலையே நீ சொன்னால் உனக்கு இந்த ஆழியைமட்டுமல்ல உன் பொன்மேனிக்கு போர்த்த அந்த வானவில்லையே சேலையாக்கிக் கொண்டு வருவேன்."

"எனக்குத் தங்கம் வேண்டாம். இந்த ஆண் சிங்கம்தான் வேண்டும். பொருள் வேண்டாம் உங்கள் அருள் இருந்தால் அதுவே எனக்குப்போதும்."

"சிப்பியில் வளரா முத்துச்சிகரமே என் ஆசையை நிறைவேற்ற உன் ஆசையைச் சொல். நான் சுளையாக சம்பளம் எடுப்பது கண்கள் காணக் கிடைக்காத இந்த அற்புதக் கலைக்காக வேண்டித்தானே. நீ தொட்டுப் பார்த்து இன்று உன் பட்டுக் கரங்கள் ஒரு

**கிண்ணியா சபருள்ளா**

விலை உயர்ந்த பட்டுப்புடவை எடுக்க வேண்டும். என் சிட்டுக்கு நான் செய்யும் சின்ன அன்பளிப்பிது"

"உங்கள் விருப்பம் விண்ணாக இருக்கும் போது நான் அதனை மறுத்து மண்ணாக்கலாமா."

"என் பவளக்கொடி பக்கத்திருந்தால் நான் சொர்க்கத்தில் சுவாசிப்பது மாதிரி. அந்த மூச்சில் முத்தை மட்டுமல்ல இவ்வுலக சொத்து அனைத்துமே கொண்டு வரமாட்டேனா"

கைஷின் மடியில் நிசா தலைசாய்த்திருக்க காதல் தந்த போதையில் இருவரும் கவிதை பேசினர்.

அன்று மாலையே கைஷ் நிசா மறுக்க மறுக்க விலை உயர்ந்த 'காதலன்' என்ற பெயருள்ள ஒரு சாறியை வாங்கிக் கொடுத்தான். அவனுக்கு அவள் மீது அத்தனை காதல் போதை. அவளுக்காக பணம் எல்லாம் வெறும் மணலாக்கவும் தயார்.

▫▫

**அ**ன்று காலை ஒபீசுக்கு அவசரமாகத் தயாராகிக்கொண்டிருந்த கைஷிடம் நிசா வந்து மெல்ல

"எ...என்னங்க"

சிடுசிடுத்தான் கைஷ். "என்ன" பார்க்காமலே கேட்டான்.

"ரெண்டு கிழமையாக சொல்லிட்டு வர்ரேன். நல்லதொருசாறி வாங்கனும்னு" நிசா விஷயத்தை விளக்க

"என்ன சாறியா ஒனக்கென்ன மூள கெட்டுப்போச்சா. அதுவும் இந்த டைம்ல" உறுமினான் கைஷ்.

"ஓ....ஓ..நான் ஏதாவது கேட்டால் மட்டும் இப்படிப் புலியா பாய்வீங்க. ஒங்களுக்கென்னநீங்க சொகுசா இருப்பீங்க. நான்தான கெடந்து படனும். ஏங்கிட்ட ஒண்ணு-ஒண்ணே ஒண்ணு ஒரு நல்ல சாறியாவது இருக்கா? மத்தவீட்டு விஷேசங்களுக்கோ கல்யாணததுக்கோ போக ஒரு நல்ல சாறி இல்ல. ஒங்கிட்ட என்ன நகை நட்டவாங்கிக்க கேட்டேன். ஒரு சாறி. அதுவும் ராப்பகலா அதுக்கா உங்கிட்ட கெஞ்ச வேண்டி இருக்கு. ம்....இத விட நாக்க புடுங்கிட்டு செத்துட லாம். என்ன வாழ்க்கையிது ச்சே..." நிசா கத்தித் தீர்த்தாள்.

"நான் என்ன வேணும்(னா) வாங்கித் தராம இருக்கேன். நல்லாயோசிச்சுப் பாரு இந்த விலை வாசியில நம்மளுக்கு ஒரு குழந்தை. இப்ப வயத்துல ஒண்ணுலஒண்ட செலவு குழந்தைக்குரிய பால்மா மத்தச் செலவு. இதுக்கு மேலால சாப்பாட்டுக்கே



எடுக்கிற சம்பளம் காணாது. பெருநாள்னு வந்தாலும் கடன் கிடன் பட்டாலும் வாங்கலாம். நீ இடையிலவந்து இப்படிக் கேட்டுத் தொலச்சா.....நான் என்ன பணம் பழுக்குற மரமா? ஏற்கேனவே கடனாளியா இருக்கேன். அதுக்குல்ல ஒண்ட தொண தொணப்பு. ச்சே.. கல்யாணமே பண்ணாம இருக்கலாம். எல்லாம் என்டவிதி" உரத்துக் கத்திவிட்டு காலை டீபன் கூடச்சாப்பிடாது கோபத்துடன் வெளியேறிச் சென்றான் கைஷ்.

நிசா அழுகையுடன் நிற்க குழந்தை வீரிட்டது. குழந்தையைச் சுமந்து பராக்கு காட்டியவள் வானத்தைப் பார்த்தாள்.

அங்கே வானவில் சிரித்துக் கொண்டிருந்தது.

# யார் செய்த குற்றம்?

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நான்கும்" உண்ணத் தந்தால் மறுக்குமோ மனம்?

தொட்டு சிலிர்க்க வைக்கும் மழைக் காலத் தென்றல் தொடர்ந்து தழுவிக் கொண்டேயிருக்க வேண்டும் என்று நாடுமன்றோ நம் மனம்?

வானத்து மேனியில் நட்சத்திர மாலை. அந்த மாலையில் எத்தனை நட்சத்திரங்கள் என்று எண்ணிப்பார்த்து வியப்பரன்றோ கலை உள்ளத்தார்.

ஆனால், பொற்கொடியோ அறுசுவை உணவை அப்பால் தள்ளினாள்.

கலை உள்ளம்தான் என்றபோதும் இப்போது இரசனை உணர்வுகள் யாவும் மரத்துப் போனவளாய் கிடந்தாள்.

கூந்தலில் சூடிவிட்டு அவிழ்த்து வீசிய மல்லிகைச் சரமாய் பாவை பொற்கொடி பஞ்சணையில் கிடந்தாள்.

கவலையே உருவாக பொற்கொடி பொலிவிழந்த கொடியாகிக் கொண்டிருந்தாள்.

"சித்திரை பிறக்கு முன்னர் இந்த பொற்சரத்தை சூடிக்கொள்ள வருவேன். உன் நித்திரையைப் பறித்தெடுத்து விடியும் வரை இதழ் முத்திரையைப் பெற்றுக் கொண்டேயிருப்பேன்."

"சொல்லாதீர்கள். சென்றுவிட்டால் ஆணியடித்தது போல் தங்கிவிடுவீர்கள். தாமதம்தான் உங்களுக்கு சம்மதமான விசயமாயிற்றே"

"கொஞ்சும் இதழ்களில் கோபக் கணை எதற்கு? அஞ்சுகமே! பிரியும் நேரத்தில் பிணக்கெதற்கு? எப்போதுமே உனக்கு என்னைப் பற்றி தப்புக் கணக்கு!"

## தருவது ரசிகன்

பொற்கொடி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சிற்றிடையைத் தொடுவதற்கு அவன் கரம் நீட்ட, தடுத்துத் தட்டி விட்டாள்.

"கட்டுப்பாடு இல்லாதவர் எப்படி விட்டுப் பிரிந்து இருக்கப் போகிறீர்கள்?"

"பிரிந்திருக்கும் தினங்களுக்கும் சேர்த்து இன்று கலந்திருக்கும் ஆசையிது!"

"பொல்லாத ஆசை!"

"ஆனால் கொல்லாத ஆசையல்ல, சம்மதிக்க நீ மறுத்தால் சங்கமிக்கும் ஆசை என்னை சாகவைக்கும் விதம் வளரும்!"

சட்டென்று நகர்ந்து அவன் வாயை தனது இடக்கரத்தால் பொத்தினாள்.

"என்ன பேசுவதென்றே தெரியாது உங்களுக்கு"

கரிசனையாய் கண்டித்தாள். அவன் கரத்திற்குள் மறுப்பின்றி தன்னை சிறை கொடுத்தாள்.

'மிக நல்ல வீணை தடவி' அவன் சுக ராகம் உணர்ந்தான். வீணையும் உள்ளூர உணர்ந்து, தணலாகி, உருகி மீட்டப்படுதலை விரும்பிக் கொண்டிருந்தது.

'இன்னும் மீட்டு, இன்னும் மீட்டு, இன்ப சாகரக் கடலில் என்னை தூக்கிப்



போடு! இன்னும் மீட்டு, இன்னும் மீட்டு! நான் உன் வீணை, நீ என் நாதன்'

பொற்கொடி மனதில் சொல்லிக் கொண்டாள்.

'எங்கே எல்லை, எங்கே எல்லை, இன்பக் கடலுக்கு ஏது எல்லை? அதனால் தானே ஊடலும், கூடலும் இல்லாப் பிரிவு தொல்லை! மாசறு பெண்ணே மீட்டலில் கிறங்கி நீ மூடுவதேன் கண்ணை? விழிகளை மூடி தவத்தினில் இருந்து இன்ப சுரத்தினை வரமாய் தருபவள் நீயே!'

அவனும் மனதில் வியந்து எண்ணம் வளர்த்தான்.

கலந்த இதழ்கள் இருவர் மனதிலும் இன்ப காவியக் கதையினைத் தொடரும் ஆவலைத் தூண்ட, ஆண்பால், பெண்பால் இரு பால் கலந்திட, மஞ்சமே கிண்ணமாய் மாறிய விந்தை கூடலில் வழமை.

வதைந்தது மஞ்சம். வியந்தது அஞ்சுகம். வியர்த்தது நெற்றி, களிப்பில் மிதந்தது காளையின் உள்ளம்.

இத்தனையும் இன்று பொற்கொடியின் மனதில் படமாய் விரிந்து வதைத்தது.

பெருமூச்சொன்று உலைக்கள நெருப்பின் வெப்பம் போல வெளிப் பட்டுப் போனது.

"என்ன யோசனை? இப்படியே இருந்தால் என்னாவது?"

திகைத்து திரும்பிய பொற்கொடி எதிரில் நின்றவள் அம்மா.

வாடிய மகளின் கோலம் கண்டு பெற்றவள் வயிற்றில் எரிந்தது நெருப்பு.

காதலனை விட்டுப் பிரிந்திருக்கும் காதலி மேனியின் நிறம் மாறும். பசலை படருதல் என்றதைச் சொல்வர்.

பொற்கொடி மேனியின் நிலையும் அதுதான்.

பொன்நிறம் என்று பூரிக்கவைத்த தன் மகள் மேனி தன் நிறம் இழந்த காரணம் அறிவாள் பெற்றவள்.

அன்பாய் அழைத்தாள்.

"மகளே!"

"என்னம்மா?"

சுரத்தேயில்லாத சலிப்பான குரல்.

"இப்போதுதானே போனார். காரியம் முடிய வந்து சேரத்தானே போகிறார். நீ எதற்கம்மா வயிற்றையும் வாயையும் கட்டிவைத்துக் கொண்டிருக்கிறாய்?"

பதில் சொல்லாமல் ஒரு பார்வை மட்டுமே பொற்கொடியிடமிருந்து!

"வா மகளே! உணவு தயாராக இருக்கிறது உனக்காக!"

அசையவேயில்லை அன்பு மகள். பாசம் கோபமாய் மாறியது.

"பொற்கொடி உனக்கென்ன பைத்தியமா சொல்லடி.. வீணாய் வாடி வதங்கிப் போகிறாய். வாடி உண்ணலாம் என்று உன்னை அழைத்து என் வாயே வலித்துவிட்டது போடி."

பேசும் வரை பேசு என்பது போல பொற்கொடி மௌனத் தவம் கலைக்க மறுத்தாள்.

அம்மாதான் தொடர்ந்து பேசினாள்.

"தளர்ந்த நிலையில் உன்னைக் காணும் போது, பத்து மாதம் உன்னைச் சுமந்தபோதுகூட படாத வேதனை படுகிறேன் நானடி!"

பதிலுமில்லை. ஏறெடுத்துப் பார்த்தலும் இல்லை. மகளின் அலட்சியம் மாதாவைத் தாக்கியது.

"வேண்டுமடி இது எனக்கு. புத்திசொல்ல வந்தேன் பார் நான் உனக்கு! மேனி நிறம் மாறி, இளைத்துத் துரும்பாகி போவதுவோ உன் ஆசை? கண்டறியாத பிடிவாதம்! அவர் சென்று ஆகவில்லை இன்னும் ஒரு மாதம்! பிடிவாதம் கொண்டால் மட்டும் அவர் வருவதற்கு ஆகாதாக்கும் தாமதம்!"

அம்மா கொட்டித் தீர்த்தாள். பொற்கொடிக்குள் சினம்.

'என் மேனி நிறம் மாறியது அவர் பிரிவால் அல்லவோ. காரணமாய் அவர்



இருக்க, அவரை மட்டும் குற்றம் சொல்லாமல் என்னை மட்டும் குற்றம் சொல்லி துளைத்தெடுக்கிறார்களே' என்று பொற்கொடி மனதில் எழுந்தது எண்ணம்.

இந்த எண்ணத்தைத்தான் திருவள்ளுவர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**"பசந்தாள் இவள் என்பது அல்லால் இவளைத்**
**துறந்தார் அவர் என்பார் இல்"**

*அதிகாரம்-119-பாடல்-1188.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல—98

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | ■ |
| 4 | | | ■ | 5 | | |
| | ■ | ■ | 6 | | | |
| 7 | | 8 | | ■ | | ■ |
| | ■ | | ■ | 9 | ■ | 10 |
| | ■ | 11 | | | ■ | |
| ■ | 12 | | | ■ | 13 | |

### இடமிருந்து வலம்

01. சொர்க்கத்திற்கு எதிர்.
04. மணமாகாத பெண்.
05. இவரால் நாங்கள் சிரிக்கலாம்.
06. பெண்களின் நடைக்கு உதாரணம் சொல்லவென்றே உருவாக்கப் பட்டதோ?
07. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது சரியாக அமையவேண்டும்.
11. சுமந்தால் சுமையாகும்.
12. சிலர் இது இல்லாமல் பேச ஆரம்பிக்க மாட்டார்கள்.
13. செவி இதை வாங்கி நமக்குத் தரும்.

### மேலிருந்து கீழ்

01. மன்னர்கள் மாறு வேடத்தில் இதற்குச் செல்வார்களாம்.
02. இதில் விஷமுள்ளவையும் உண்டு.
03. போக்கு வரத்துக்கு மட்டுமல்ல போருக்கும் பயன்படுகிறது.
08. கொள்ளையர்களுக்குப் பிடித்தமானது.
09. சைவ விருந்துகளில் இதற்கும் ஒரு இடம்.
10. நம் நாட்டின் பிரபல கட்சி ஒன்றின் வர்ணம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 06.05.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-98
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-96ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மு | 2 க | ம் | ■ | 3 வெ | றி | ■ |
| ற் | ளை | ■ | 4 த | கு | ■ | 5 க |
| று | ■ | ■ | 6 க | ளி | 7 ம | ண் |
| 8 கை | 9 யூ | ட் | டு | ■ | ற | ணீ |
| ■ | க | ■ | ■ | 10 பு | தி | ர் |
| 11 வ | ம் | பு | ■ | ற் | ■ | ■ |
| லை | ■ | 12 சி | ற் | று | ண் | டி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 96இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. செல்வி. ஆர். நேசமலர், கொழும்பு-14.
2. எம். பாலகிருஷ்ணன், ஹட்டன்.
3. செல்வி. கரீமா, மடவளை பசார்.
4. எம். பாறூக், புத்தளம்.
5. எஸ். சிவஞானம், மூதூர்.
6. திருமதி. ஜே.மனோகர், மட்டக்களப்பு.
7. செல்வி.பாத்திமா பர்ஹானா, புத்தளம்..
8. ஏ. சாய்தர்ஷன், வத்தளை.
9. ஏ. றஷீட், சம்மாந்துறை-01.
10. ரி. அருள்நேசன், மொரட்டுவ.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

---

நம் நாட்டில் தேசிய ஒற்றுமையை வளர்க்க என்ன செய்ய வேண்டும்?

**பொன்னையா சரவணக்குமார்-டிக்கோயா.**

வேற்றுமையை வளர்க்கும் காரியங்களை செய்யக் கூடாது.

□□

'சார்ஜா'வில் பாகிஸ்தான் கிண்ணம் பெறும் என்றீர் அல்லவா? உமது தலையில் குட்டலாமா?

**சி. தர்மராஜ்-கொழும்பு-06.**

தப்புத்தான் தர்மா தப்புத்தான்! பாகிஸ்தானை இலங்கை இப்படிச் சுருட்டும் என்று நினைக்கவேயில்லை. இலங்கையோடு உணர்ச்சிகரமாக ஆடிய இந்தியாவும்... யப்பா! தூளடா தம்பி தர்மா! (தம்பிதானே?)

□□

டியர் சிந்தியா! நிம்மதியாக தூங்கி எழ என்ன செய்ய வேண்டும்?

**மணியம்-ஹேவாஎட்டை.**

மனதில் அமைதி வேண்டும். அருகினில் அழகான- இதமான-நல்ல ஜன்னல் ஒன்று இருக்க வேண்டும். இயற்கை காற்று தூக்கத்தை துரிதப்படுத்துமாம்.

□□

கண்ணடித்தால் காதல் வரும் என்று கூறுகிறார்களே. உண்மையா?

**ச.சுதர்சன்-செங்கலடி.**

காதலும் வரலாம். ஆனால் காதல் மட்டும்தான் உம்மை நோக்கி வரும் என்று கூறமுடியாது. வேண்டுமானால் பரீட்சித்து வாங்கிப் பார்த்து எனக்கும் தெரிவியுங்கள் சுதர்சன்.

□□

இலங்கை கிரிக்கெட் அணியின் சமீபத்திய வெற்றிகள் குறித்து என்ன நினைக்கிறீர்?

**ஏ.சங்கீதா-ஹட்டன்.**

இறுதிவரை சோர்ந்துவிடாமல் ஆடும் விதம் அலாதியாக இருக்கிறது. வெற்றி தோல்வி சகஜம். ஈடுபாடான ஆட்டம்தான் விளையாட்டுக்கு அழகு. அது இலங்கை அணியிடம் இருக்கவே இருக்கிறது. பாராட்டலாம்.

□□

ஜெயலலிதாவின் புகழ் பாடும் 'தொட்டில் குழந்தை' படம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ஏ.ஜி.எம். ஜிப்ரி-பேருவளை.**

படத்தயாரிப்பாளருக்கு ஏதோ ஒரு காரியம் ஆகவேண்டியிருந்திருக்கும். ரஞ்சிதாதான் பாவம், கையைக் காலைத் தூக்கி சண்டை போட்டும் கூட படம் பப்படம் ஆகிவிட்டது.





□□

புலிகள் திடீரென்று மோதல் தவிர்ப்பை முறித்தது சரியா?

**எஸ். சஹாப்டீன்-மருதானை.**

எங்கே திடிரென்று முறித்தார்கள். 'காலக்கெடு' என்பது முன்னறிவித்தல் மாதிரித்தானே. அதனை அலட்சியம் செய்து ஏதேதோ கூறி தாக்குதல் நடந்த பின்னறிந்து வேதனைப் பட்டால் என்ன அர்த்தமோ?

□□

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது குறித்து என்ன கூறுகிறீர்கள்?

**ஆர். ராஜேந்திரன்-வெள்ளவத்தை.**

தாக்குதலை தடுக்கும் சமயோசித நடவடிக்கை என்கிறது அரசு. இதனை வைத்தே சிலர் சம்பாதிக்க நினைப்பதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்கிறேன் நான்.

□□

டியர் சிந்தியா! தோல்வியைக் கண்டு துவண்டு போகும் நெஞ்சங்களுக்கு நீங்கள் கூற நிறைப்பது...?

**செல்வி மாலி தங்கவேல்-உடப்புசல்லாவ.**

எவரெஸ்ட் மலைச் சிகரத்தில் ஏற முயன்ற எத்தனையோ பேர் தோற்றுப் போனார்கள். ஆனாலும் இறுதியில் எவரெஸ்ட் சிகரம் மனிதனால் வெற்றிகொள்ளப்பட்டது. காரணம்; முடியும் என்ற உறுதி!

□□

சிறந்த கதையம்சம் உள்ள படங்களை அதிகமாகக் காண முடிவதில்லையே?

**எல். பெஞ்சமின்-கண்டி.**

சதையம்சம் மட்டும் இருந்தாலே போதும் வசூலை அள்ளிவிடலாம் என்ற நிலையிருப்பதால்.

□□

இலங்கையின் அரசியல் நிலவரம் எப்படி?

**ஆ. சிவகுமார்-கம்பளை.**

நித்திய கண்டம்.

□□

அண்மையில் உங்களை வியப்பில் 'மூழ்க' வைத்த சமாச்சாரம் எது?

**மு. தெய்வீகரஞ்சனி-பதுளை.**

மூழ்க வைத்த சமாச்சாரம்தான். (புரிந்தால் சரி)

□□

புலிகள் அரசாங்கத்தை ஏமாற்றியது நியாயமா?

**ம. றொபின்-நீர்கொழும்பு.**

அவர்கள் எப்போது தங்களை நம்பச் சொன்னார்கள்.

□□

சுப்பிரமணிய சுவாமி புலிகளது தலைவரை சாதி சொல்லித் திட்டினாராமே?

**எஸ். தெய்வநாயம்-கொழும்பு-11**

சுவாமியை அவுட் பண்ண தமிழ் நாட்டில் சிலர் பிரபாகரன் விசுவாசிகளாக அரிதாரம் பூசாமல் நடிக்கிறார்கள். தமிழக அரசியலே ஒரு நாடக மேடை. ஆனால் சுவாமி அப்படி ஒன்றும் யோக்கியமானவரல்ல. ஜெயலலிதாவை நடிகை என்ற ரீதியில் அவர் போன்றோர் கேலி செய்வது போக்கிரித்தனம்.

□□

அமெரிக்காவிலும் குண்டு வெடிப்பாமே?

**ஏ. சசிகுமார்-வவுனியா.**

அதனால்தான் இப்போதெல்லாம் அமெரிக்கா சமாதானத்தைப் பற்றி அடிக்கடி பேசுகிறதோ? எப்படியிருப்பினும் அப்பாவி உயிர்களை பலிகொள்ளும் குண்டு வெடிப்புக்கள் கண்டிக்கப்பட வேண்டியதுதான்.

□□

சமீபத்தில் நீங்கள் ஆச்சரியப்பட்டது எப்போது?

**வி. தேவராஜ்-நுவரெலிய.**

அமெரிக்காவில் நடந்த குண்டுவெடிப்பை கண்டித்து புலிகளது தலைவர் தெரிவித்துள்ள அனுதாபத்தை 'வெரித்தாஸ்' வானொலியில் கேட்டபோது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 77

**இவ்வாரம் (30.04.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:**

போர்க்களத்தில் செத்துவிழும் போர்வீரர் கணக்கெடுப்பை
கோர்த்தெடுக்கும் நிலையிழந்தேன் குற்றுயிராய்த்தரை வீழும்
வீரரையும் நினைத்து இங்கு விசனித்து நிற்பதில்லை;
பாரதப் போரென்று முடிவடையு மோவென்று
ஆர்வமதுகொண்டு அல்லலுறுகின்றேன்!
எழுகதிரின் உதயமுடன் எழுகின்ற ஏவுகணை
எண்ணற்ற உயிர் குடித்து கதிர் மறையும் போதடங்கும்.
அழுகுரலும் அவலமதும் அப்போது தானடங்கும்,
ஆனாலும் அடுத்து வரும் உதயத்தைத் தான் நினைத்து
அணிதிரளக் காத்திருக்கும் அரியபெரு வீரர்களை
போற்றாமல் புகழாமல் போர்முனையி லவர் திறனை
சாற்றாதிருப்பதற்குமெச் சக்தியாலு மாகாதே!

**-காட்சி தொடக்கம்-**

**குருச்சேத்திரம்–பீஷ்மர் மற்றும் துரோணாச்சாரியாருடன் அர்ச்சுனன் மோதுகிறான்.**

**துரி:** பிதாமகர் அவர்களே! துரோணாச்சாரியார் அவர்களோ தாங்களோ அர்ச்சுனனையும் கிருஷ்ணனையும் எதிர்த்து நின்று போராட முடியா விட்டால் வேறு எவரால்தான் சாத்திய மாகும்? அர்ச்சுனனை எதிர்த்துப் போராடி, அவனை வீழ்த்தும் வல்லமை படைத்த அந்த வீரன் கர்ணனையும் தங்கள் அணிக்குச் சேர விடாமல் தடுத்து விட்டீர்களே! அர்ச்சுனனின் மரணத்தில்தான் எமது வெற்றி தங்கியிருக்கிறது. தாங்களோ அவனைக் கொல்லப் போவதில்லை. கர்ணனால் மட்டுமே அர்ச்சுனனைக் கொல்ல முடியும்!

**பீஷ்ம:** என்னுடைய தலைமையின் கீழ் போராட அவனை நான் என்றும் அனுமதிக்க மாட்டேன். என்னுடைய தலைமையில் உனக்கு நம்பிக்கை யில்லாவிட்டால், படைத் தளபதியாக நீ வேறு யாரையாவது அமர்த்திக் கொள்ளலாம்.

**துரி:** நான் அவ்வாறு நினைக்க வில்லை.....சொல்லவுமில்லை....!

**பீஷ்ம:** உன்னிடமுள்ள முக்கியமான குறை என்னவென்றால், நீ சிந்திப்பதேயில்லை! உண்மையில் நீ சிந்தனைக்குக் கொஞ்சம் இடம் கொடுத்திருந்தாயானால், வாசுதேவ கிருஷ்ணன் கேட்டதுபோல் ஐந்து கிராமங்களை பாண்டவர்களுக்குக் கொடுத்திருப்பாய்! இங்கு திரும்பிய பக்கமெல்லாம் வீழ்ந்து கிடக்கும் அத்தனை போர் வீரர்களின் சாவுக்கும் நீ தான் முழுப் பொறுப்பாளி என்பதை மறந்து விடாதே! இப்பொழுது இங்கிருந்து போய் விடு!

போரில் முழுக் கவனத்தையும் செலுத்து! நான் உயிருடன் இருக்கும் வரை உனது படைகள் நிலை குலைந்து விடாமல் பார்த்துக் கொள்ளுவேன்!

**அர்ச்சுனன் பீஷ்மருடன் பொருதுகிறான். துரியோதனுக்கு எதிராக பீமசேனனும் கிருபாச்சாரியாருக்கெதிராக யுதிஷ்டிரரும் சகுனிக்கு எதிராக சகாதேவனும் மோதுகின்றனர். பீஷ்மர் எய்த இரு பாணங்கள் கிருஷ்ணரின் முன்னங்கைகளைத் தாக்குகின்றன. அர்ச்சுனன் கோபமுடன் அம்பெய்து பீஷ்மரின் தேரோட்டியைக் கொன்று விடுகிறான். பீஷ்மர் போர்க்களத்தை விட்டு வெளியேறுகிறார். பீமசேனன் தொடர்ந்து சண்டையிடுகிறான். யுதிஷ்டிரரும் ஏராளமான வீரர்களைக் கொன்று குவிக்கிறார். இவற்றையெல்லாம் கண்ணுற்ற துரியோதனன்.....**

**துரி:** சூரியன் மறைவதற்கு இன்று ஏன் இவ்வளவு தாமதம்.....? நேற்று ஆதவனுடைய அஸ்தமனம் தாமதமாக வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் அவனோ சீக்கிரம் மறைந்து விட்டான்,......!

**துரோ:** சூரிய தேவனின் இயற்கையான நடமாட்டத்தைக் கட்டுப் படுத்துவதில் ஏன் உன் காலத்தைச் செலவிடுகிறாய், காந்தாரி மைந்தனே...? போர்க்களத்தில் உன் பூரண கவனத்தையும் செலுத்து...!

**போர்க்காட்சிகள் காட்டப்படுகின்றன- கதிரவன் மறைகிறான்-அன்றைய போர் முடிவடைவதைக் குறிக்கும் சங்கொலிக்கிறது.**

**பின்னணிப் பாடல்-**

***சந்தடியில்லாமல் சாவு படர்கிறது***
***முந்தி மடிபவர்கள் யாரென்று யாரறிவார்?***
***சொந்தச்சகோதரர்கள் சமர் புரியுமிக்களத்தில்***
***அந்தம் அறியாமல் அவனி திகைக்கிறது!***

**-காட்சி மாற்றம்-**

**கர்ணனின் பாசறையில் துரியோதனன், சகுனி மற்றும் துச்சாதனன்_ துரியோதனன் ஆவேசத்துடன் முன்னும் பின்னும் நடக்கிறான்.**

**கர்ண:** போர்க்களத்தில் எழும் பேரோசைகளையும் ஓலங்களையும் இங்கிருந்த வண்ணம் கேட்டுக் கொண்டிருந்தேன். யார் வெற்றி பெறப் போகிறார்களோ என்ற தகவலை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தேன். உங்கள் படைத் தலைவர், அவர் விரும்பிய நேரத்தில் தான் சாவினை அணைக்க முடியும் என்பதால் வெற்றி எமக்குத்தானே கிட்ட வேண்டும்!


**சகுனி:** அங்கத்துக்கதிபரே! தான் விரும்பிய நேரத்தில்தான் தன் சாவினை அணைத்துக் கொள்ள முடியும் என்ற கங்கை மைந்தரின் வரத்தினால் பல பிரச்சனைகள் தோன்றியுள்ளன! பாண்டவர்களை அவர் கொல்லப் போவதில்லை; அதேபோல் பாண்டவர்களும் அவரைக் கொல்ல மாட்டார்கள். இத்தகைய வரம் ஒன்றினை அவர் பெற்றிருக்காவிட்டால், நான் அவரை படைத்தலைவராக்கச் சம்மதம் அளித்திருக்க மாட்டேன். கங்கா புத்திரர் நிச்சயமாக நமக்கு தோல்வியைத்தர மாட்டார்; அதேபோல் அவரால் நமக்கு வெற்றியையும் தேடித்தர முடியாது.

**துச்சா:** மாமா! நமக்கு வெற்றியைத் தேடித்தராத ஒருவரை படைத் தளபதியாக ஏன் வைத்திருக்க வேண்டும்?

**துரி:** அவரை தளபதியாக நியமிக்க வேண்டும் என்று நான் ஒருபோதும் விரும்பியதில்லை! அவ்வாறு விரும்பியது நீங்கள் தான்....!

**சகுனி:** எல்லாம் காரணத்தோடு தான் நடைபெற்றுள்ளன மருமகனே...! அங்கத்துக்கதிபனான கர்ணனை உன் படைத் தளபதியாக நியமித்திருந்தால், போர்க்களத்தில் உன் சகோதரர்களுடன் நண்பன் கர்ணனும் நானும் தான் உன்னணியில் நின்றிருப்போம். இன்று உன்னணியில் திரண்டு நிற்கும் இத்தனை பேரையும் உன்னுடன் பார்த்திருக்கவே முடியாது.

**துரி:** என்னால் என்னதான் செய்ய முடியும் மாமா..? எமது வெற்றிக்கு அர்ச்சுனனின் சாவு அவசியமாகும். பீஷ்மர் நிச்சயமாக அர்ச்சுனனைக் கொல்லப் போவதில்லை. அவனோ பல்லாயிரக் கணக்கில் எமது வீரர்களைக் கொன்று குவிக்கிறான். வேறோர் படைத்தளபதி கிடைத்தால் நானே பிதாமகர் பீஷ்மரைக்



கொன்று விடுவேன். எப்படியாவது போரில் நான் வென்றாக வேண்டும். கர்ணனின் உதவியில்லாமல் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. அர்ச்சுனனுக்கு முடிவு கட்டுவதானால், பீஷ்மருக்குப் பதிலாக வேறோர் தளபதியை நியமிப்பது பற்றிச் சிந்தியுங்கள் மாமா...!

**-காட்சி மாற்றம்-**

**போர்முனையில் போர்க்காட்சிகள்– பீஷ்மருடன் போராடும் அர்ச்சுனன் முழுக்கவனமும் செலுத்தாமல் இருப்பதை கிருஷ்ணர் அவதானிக்கிறார்.**

**கிருஷ:** அர்ச்சுனா! இந்தப் போரில் தோல்வியைத் தழுவுவதற்குத் தீர்மானித்து விட்டாய் என்றே எண்ணத் தோன்றுகிறது. எதிரில் நிற்பவரை உன் பிதாமகராகக் கருதாமல், உன் எதிரியாகவே கருத வேண்டும் என்று உனக்குப் பல தடவைகள் கூறியிருக்கிறேன். இது தர்ம யுத்தம்! தர்மத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்தியவர் எவரானாலும் அவர் உனக்கு மட்டுமல்ல, இந்த மானிட சமுதாயத்துக்கே விரோதமானவர் என்பதைப் புரிந்து கொள்! கங்கை மைந்தர் தனி ஆளாகவே நின்று உன் படைகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கானோரைக் கொன்றொழித்து விட்டார். அதற்காகவாவது நீ பழி தீர்க்காவிட்டால் நானே அவரைக் கொல்லப் போகிறேன்....!

**கிருஷ்ணர் இரதத்தை விட்டுக்கீழிறங்கி தனது வலது கையை மேலே உயர்த்துகிறார். விரலில் சுதர்சன சக்கரம் சுழலுகிறது. இதனைக் கண்ணுற்ற பீஷ்மர் பரவசமாக இரு கைகளையும் தூக்கி வணங்குகிறார்.**

**பீஷ்ம:** வாசுதேவ பிரபுவே! தங்களை இருகை கூப்பி வணங்குகிறேன். போர்க்களத்தில் ஆயுதம் ஏந்தப் போவதில்லை என்று தாங்கள் எடுத்துக் கொண்ட பிரதிக்ஞையை மீறத் துணிந்து விட்டீர்களா? எனக்கு முக்தி அளிப்பதற்காகவா தங்கள் சித்தத்தை மாற்றிக் கொண்டீர்கள்? தாங்கள் தங்கள் கைகளினாலே என்னைக் கொல்வதற்குத் தீர்மானித்ததன் மூலம் மூவுலகிலும் எனக்குப் பெரும் பேற்றினைத் தேடித் தந்து விட்டீர்கள்! கோவிந்தா! என் வில்லினைக் கீழே போட்டுவிட்டேன். தங்களுடைய கைகளினால் இந்த ஜன்மத்தில் எனக்கு விடுதலை கிடைப்பதானது, இந்தப் பிரபஞ்சத்தில் எவருக்குமே கிடைக்க முடியாத பாக்கியமாயிற்றே! ஓ கிரீதாரி! தங்களுடைய சுதர்சன சக்கரத்தை உடன் ஏவி எனக்கு மோட்சத்தைத் தருமாறு பிரார்த்திக்கிறேன்...!

**அர்ச்:** கேசவா....! கேசவா...! என்னை மன்னித்தருளுங்கள்.... கிரிதர கோபாலனே! இந்தப் போரில் தாங்கள் ஆயுதம் ஏந்துவதில்லை என்று செய்து கொண்ட சத்தியத்தை மீறலாகாது. அதற்கு நானும் பாத்திரவாளியாக இருக்கலாகாது. அறியாமையினால் செய்த பெரும் பிழையை மன்னித்தருளக் கோருகிறேன். இந்தச் சணம் முதல் என் கணைகள் எவருக்குமே தயவு தாட்சண்யம் காட்டப் போவதில்லை!

**கிருஷ்ணரின் கை விரலில் சுழன்று கொண்டிருந்த சக்கரம் மறைகிறது.**

**கிருஷ்:** கங்கையின் மைந்தரே! எங்கே தங்களுடைய வில்லையும் அம்புகளையும் எடுங்கள்!

**பீஷ்மர் தனது வில்லையும் அம்புகளையும் எடுத்துக் கொண்டு இரதத்தில் ஏறுகிறார். அர்ச்சுனனும் தனது இரதத்தில் ஏறியதும் கிருஷ்ணரும் தேர்ச் சாரதியாக ஏறி அமர்கிறார்.**

**அர்ச்:** இந்தச் சூரியன் மட்டும் மறைவதற்கு இன்று சற்றுத் தாமதமானால் போதும் கேசவா..! அந்த மகாதேவன் மீது ஆணை..! இந்தப் போரை இன்றே முடிவுக்குக் கொண்டு வந்து விடுவேன்!

**கிருஷ்:** சமுதாயத்தின் நலனுக்காகவே நடைபெறுகின்ற போர் இது பார்த்தா! அதற்காக இயற்கையின் நியதிகளை மாற்றிவிட முடியுமா? ஆதவன் அவனுக்குரிய பணியைத் தொடரட்டும். உன்னுடைய போர்ப்பணியினை நீ தொடரு. பலனைப் பற்றியோ சூழ்நிலை பற்றியோ நீ கவலைப் படாதே! உன் செயல்களுக்கான பலனை என்னிடம் விட்டுவிடு. சூரியனைக் கூட நீ கவனிக்க வேண்டாம். போர்க்களத்தில் உன் முழுக்கவனத்தையும் செலுத்து!

**கிருஷ்ணரின் சொற்படி அர்ச்சுனன் பீஷ்மர் மீது பாணங்களைப் பொழிகிறான். பீஷ்மரும் அர்ச்சுனன் மீது பாணங்களை ஏவுகிறார். கதிரவன் மறைகிறான்– அன்றையப் போர் முடிந்து விட்டதைக் குறிக்கும் சங்கொலி முழங்குகிறது.**

**பீஷ்மர் தனது பாசறைக்குப் போய்ச் சேருகிறார். அவருடைய காயங்களுக்கு வைத்தியர்கள் மருந்து தடவுகிறார்கள். அப்போது துரியோதனன், துச்சாதனன், சகுனி ஆகியோர் அங்கு வருகின்றனர்.**

**சகுனி:** வணக்கம் பிதாமகரே..! காயங்கள் பாரதூரமானவையல்ல என்று நம்புகிறேன்?

**பீஷ்ம:** காந்தார மன்னரே! உம்மால் எனக்கு ஏற்பட்ட காயத்தைப் பார்க்கிலும் இவை ஆழமற்றவை தான்! பாரத வம்சத்தின் கீர்த்தியை படுகுழி தோண்டிப் புதைப்பது தானே உமது நோக்கம்? இதைவிட உமது செயல்களுக்கு வேறு அர்த்தங்கள் எதாவது உண்டா? (துரியோதனன் பக்கம் திரும்பி,) மகனே! இப்போதும் ஒன்றும் கெட்டுப் போக வில்லை; இந்திரப்பிரஸ்தத்தை அவர்களிடம் ஒப்படைத்து சமாதானத் துக்கு வழி தேடிக் கொள்!

**துரி:** பிதாமகர் அவர்களே! இந்த யுத்தத்தில் நான் தோல்வியையே தழுவிக் கொள்ள நேர்ந்தாலும் ஓர் ஊசிமுனை பகுதியைத்தானும் அவர்களுக்கு விட்டுக் கொடுக்க மாட்டேன். துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார் மற்றும் தாங்கள் மூவரும் என்னணியில் இருக்கும் வரைக்கும் நிச்சயமாக எனக்கு வெற்றி கிட்டப் போவதில்லை.

**சகுனி:** மருமகனே! நீ என்ன வார்த்தை பேசுகிறாய்? இந்த மூவரும் உன்னணியில் இல்லாதிருந்தால், நேற்றே போரில் உன்னணி தோல்வி கண்டிருக்குமே..!

**துரி:** தாங்கள் கூறுவது சரியாக இருக்கலாம். அதே வேளை, இம்மூவருமே மனம் வைத்திருந்தால் நேற்றே நம் அணி வெற்றியீட்டியிருக்கலாம் அல்லவா மாமா அவர்களே? எனது படை வீரர்கள் அனைவருக்குமே, பிதாமகர் பாண்டவர்களைக் கொல்ல மாட்டார் என்பது நன்றாகவே தெரியும்.

**பீஷ்:** மகனே! எந்த ஒரு மரமும் தன் கிளைகளை வெட்டிச் சாய்த்துவிட விரும்பப் போவதில்லை. என்னைப் பொறுத்தவரை உன்னை நேசிப்பது போலத்தான் அவர்களையும் நான் நேசிக்கிறேன். உன் மீது எனக்குப் பாசம் இல்லையென்றால் நீ என்னை அவமதிப்பதற்காக உன்னை என்றோ கொன்றொழித்திருப்பேன்! உன்மீது நான் வைத்துள்ள பாசத்தினால் தான் நீ இதுவரை காப்பாற்றப்பட்டு வந்துள்ளாய்! நீடூழி வாழ வாழ்த்துகிறேன். நாளை மீண்டும் பலத்த போர் இருப்பதனால் போய் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

**துரி:** பிதாமகர் அவர்களே..! தங்களிடம் மற்றுமொரு வேண்டுகோள்.....!

**பீஷ்ம:** உன் கோரிக்கை என்னவென்று எனக்குத் தெரியும்! முடியாது...அந்த அங்க தேச மன்னனை, நான் படைத் தளபதியாக இருக்கும் வரை என்னணியில் சேர்த்துக் கொள்ளவே மாட்டேன்...!

**துரி:** பிதாமகர் அவர்களே! பரசுராமரின் சீடனான அந்த வீரனுக்கு இத்தகைய கொடுமையான தண்டனை கொடுப்பதற்கு ஏதுவான காரணம் இருக்க முடியுமா?

**பீஷ்ம:** எனது குருவுக்கு எவருமே ஏற்படுத்தத் துணியாத அபகீர்த்தியை அவன் ஏற்படுத்தியிருக்கிறான். அது மட்டுமல்லாமல், எமது மருமகளை தாசி என்று கூறி, பெரும் சபை நடுவே அவமதித்துள்ளான். பெண்மைக்கு உரிய மதிப்பளிக்கத் தெரியாத எவனையும் என்னணியில் நான் சேர்த்துக் கொள்ள மாட்டேன்.....!

**துரி:** அவ்வாறானால், அதே சபையில் நாங்களும் அதே மாதிரியான குற்றங்களைப் புரிந்தவர்கள் தானே பிதாமகர் அவர்களே.....!

**கடும் சினங்கொண்டு பீஷ்மர் எழுகிறார். இதனை உணர்ந்த சகுனி நிலமையைச் சமாளிக்க முனைகிறான்.**

**சகுனி:** தாத்தா அவர்களே...! எனது மருமகன் அத்தகைய...

**பீஷ்ம:** இந்த வேளையில் தாத்தா என்ற உறவு முறைகளைக் கூறி மேலும் நீர் என்னை அவமதிக்கத் துணிய வேண்டாம். துரியோதனன் எத்தகைய அர்த்தத்தில் அத்தகைய வார்த்தைகளை உகுத்தான் என்பது உமக்குத் தெரியாத தொன்றல்ல..! அவனுடைய நோக்கத்தை நான் நன்கு புரிந்து கொண்டேன். அதே குற்றத்தின் போது நானும் உனக்கு உடந்தையாக இருந்தேன் என்பதற்குத் தண்டனையாகத்தான் இன்று இப்போரில் நான் உன் பக்கம் இணைந்திருக்கிறேன் என்பது தான் உண்மை என்பதை அறிவாயா துரியோதனா? சரி எல்லோரும் இங்கிருந்து போய் விடுங்கள்.... என் குற்றச் செயலுக்காக நான் அமைதியா கவிருந்து பிரார்த்திக்கப் போகிறேன்...!

**துச்சா:** ஆனால் பிதாமகரே...!

**பீஷ்ம:** துச்சாதனா! உன்னைப் போன்றவர்களின் கொள்ளுப் பாட்டனாக இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டமைக்காகத்தான் நான் இன்று வருந்துகிறேன். என் தாய் சத்தியவதியார் உங்களையெல்லாம் என்னிடத்தில் ஒப்படைக்காதிருந்தால் இந்தப் பிரச்சனைகளே இன்று தோன்றியிருக்காது. எனது முதுமை யையும் பாராமல் என் மீது எத்தனையோ பொல்லாங்குகளைச் சுமத்தினீர்கள். பல தடவைகள் இவ்வாறு என்னை வதைத்தீர்கள்! அத்தனை கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு இன்றும் நான் இருப்பது அஸ்தினாபுரிக்காகத்தான்! என் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லா விட்டால், உடனடியாக மற்றுமொரு படைத் தளபதியைத் தெரிந்து போரை நடத்துங்கள்.

**துரி:** தாங்கள் பாண்டவர்களுடன் அணி சேர்ந்து கொள்வதற்கு வசதியாக தங்களை படைத்தளபதி பதவியிலிருந்து விலக்கி விட்டு அந்த இடத்தில் வேறு ஒருவரை நியமித்து விடுவோம் என்று கருதி விட்டீர்களா? அது ஒருபோதும் நடக்காது. தங்களுடைய பாசம், பாச்சாதாபம் மற்றும் அனுசரணை யாவும் பாண்டவர்கள் பால்தானுள்ளது என்பது தெரிந்திருந்த போதிலும், ஒருக்காலும் தங்களை எமதணியிலிருந்து போக விட மாட்டேன். வணக்கம்...போய் வருகிறேன்.

**அவர்கள் போன பின்னர் வைத்தியர்களையும் அங்கிருந்து போய்விடுமாறு பீஷ்மர் சைகை செய்கிறார்.**

**வைத்தியர்:** தங்கள் ரணங்களுக்கு மருந்து.....

**பீஷ்ம:** என் கட்டளைக்குப் பணிய உங்களாலும் முடியாதோ...? இந்தக் காயங்களைப் பற்றிக் கவலையில்லை... அவை தானாக மாறிவிடும்....போங்கள்!

**-காட்சி மாற்றம்-**

**போர்முனைக் காட்சிகள்– பீமன் துரியோதனனின் தம்பிமார் பத்துப் பேர் ஒன்றாக நிற்பதைக் கண்டு அப்பக்கம் போகிறான்.**

**பீமன்:** வாருங்களடா எனதருமைத் தம்பிகளா...! துரியோதனனையும் துச்சாதனனையும் தேடிக்கொண்டிருக்கும்போது நீங்கள் வந்து சேர்ந்து விட்டீர்கள். பரவாயில்லை.... நீங்களும் அவர்களைப் போல் நச்சுப் பாம்புகள் தானே? உங்களையும் விட்டு வைக்கலாகாது.

**அவர்கள் பத்துப் பேரையும் பீமசேனன் கொன்று விடுகிறான்.**

**-காட்சி மாற்றம்-**

**அஸ்தினாபுரி– திருதராட்டிரர் அரண்மனை.**

**திருத:** சஞ்சயா....! எனது படைகளின் அழிவைத் தவிர வேறு எதையுமே உன்னால் காண முடியவில்லையா? அர்ச்சுனன் முதலான பாண்டவர்கள் மட்டும்தான் சண்டையிடுகின்றார்களா? எனது படைகள் செயலிழந்து விட்டனவா? தாத்தா மற்றும் ஆச்சாரியர்கள் என்னதான் செய்து கொண்டிருக்கின்றனர்?

**சஞ்ச:** அவர்களும் சண்டையிட்டுக் கொண்டுதானுள்ளனர் மகாராஜா!..... ஆனால்......

**திருத:** 'ஆனால்' என்ற வார்த்தையை என் அரண்மனையில் உச்சரிக்க வேண்டாம்! இந்த வார்த்தைதான் எப்போதும் எனக்கு எதிராக இருந்திருக்கிறது. நான் இப்போது காந்தாரியைப் பார்க்கப் போகிறேன்.

**-காட்சி மாற்றம்-**

**காந்தாரியின் அந்தப்புரம்–திருதராட்டிரர் வருகிறார்:**

**காந்தா:** பிரபு....தாங்களா..? வாருங்கள்...! போர்க்களத்திலிருந்து ஏதாவது செய்தி வந்துள்ளதா?

**திருத:** அவர்கள் உயிரிழந்து விட்டார்கள் ராணி..!

**காந்தா:** அப்போ இப்போது போர் உச்சக்கட்டத்தை அடைந்து விட்ட தாக்கும்! இன்று நம் மக்கள் பத்துப் பேர் உயிரிழந்து விட்டார்கள் அல்லவா? கடந்த இரவு நான் ஒரு கனவு கண்டேன் பிரபு. பசுமையான மரங்கள் வேரோடு சாய்க்கப்பட்டுக் கிடந்த ஓரிடத்தில் நான் தனிமையாக நின்று கொண்டிருந்தேன். அங்கு வந்த தங்களிடம், "இந்தப் பசுமையான மரங்களை வெட்டிச் சாய்த்தவர்கள் யார்" என்று கேட்டேன். "நானேதான்" என்று தாங்கள் பதிலளித்தீர்கள். "எத்தனை மரங்கள்" என்று நான் தொடர்ந்து கேட்டபோது, "நூறு" என்றீர்கள். இவை யாவும் மரங்களா அல்லது நம் புதல்வர்களின் சடலங்களா என்று நான் கேட்டதற்குத் தங்களிடமிருந்து பதிலே வரவில்லை. அத்தோடு கண் விழித்துக் கொண்டேன் பிரபு!

**திருத:** அப்போ தனது புத்திரர்களையே கொன்று குவித்த கொலைகாரன் நான் தான் என்கிறாயா....?

**காந்தா:** நான் அவ்வாறு கூறவில்லையே பிரபு.! நான் கண்ட கனவைப் பற்றித் தானே தங்களிடம் கூறினேன்!

**திருத:** சஞ்சயனிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத்தான் இங்கு வந்தேன். என் வேதனைகளை நீயாவது புரிந்து கொள்வாய்...சற்று ஆறுதலடையலாம் என்று வந்தேன். ஆனால் உன்னுடைய அந்தப்புரத்திலும் எனக்கு ஆறுதல் கிடைக்கப் போதில்லை! நான் தனித்துப் போய் விட்டேன். நான் வேறு எங்காவது போகிறேன். நீ சற்றுத் தூங்கு! வேறு ஏதாவது கனவுகாண முயற்சித்துப் பார்..!

**காந்தா:** பிரபு! நம்மிருவருடைய நிலையும் ஒன்றுதான். தனது பத்து புத்திரர்களைப் பறிகொடுத்த ஒரு தந்தை தனியாக ஓரிடத்தில் இருந்து ஆறுதலடைய முடியாது. நம்மிருவருக்குமே ஏற்பட்டுள்ள இந்தப் பேரிழப்புக்காக நாம் ஒன்றாகவே இருந்து துக்கத்தைப் பங்கேற்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஆகவே தாங்களும் என்னருகிலேயே இருங்கள்..!

**பின்னணிப் பாடல்:**

**வினைதனை விதைத்துவிட்டு வேறுபலன் கிட்டுமென்று**
**கனவிலும் கருதுவது கவலையைத்தானே தரும்!**
**அதர்மத்தை அணைத்து நித்தம் அநீதியை வளர்த்தவர்கள்**
**பதரினைப்போன்றே வாழ்ந்து பயனின்றி வீழ்வதுண்மை!**

****

(தொடர்ந்து வரும்)

எம்.ரீவி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்ற மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அருள் ஜுவலர்ஸ்
வன்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331




த
ரு
வ
து
வி
யோ
டை

Kala JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11
433686

மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமைக்கு
எதிராக உழைக்கும் மக்கள் முகம் உயர்த்தி
நிமிர்ந்த நாள் மே 1ம் நாள்.
உழைக்கும் மக்களை பொதி சுமக்கும் கூட்டமாக
நினைத்து மூச்சுத் திணறவைத்தது சுரண்டும்
வர்க்கம்.
எதிர்த்து கிளர்ந்த அமெரிக்க
தொழிலாளர்களை தனது வேட்டை நாய்களை ஏவி
குருதியில் சரிய வைத்தது. சிக்காக்கோ நகரம்
தொழிலாளர் குருதியின் சூட்டில் கொதித்தது.
குருதியில் தோய்ந்த கொடிகளை உயர்த்தி,
மாண்டவர் அடிச்சுவட்டில் தொடர்ந்து சென்று
போராடி ஜெயித்தனர் உழைக்கும் மக்கள்.
நூற்றாண்டுகள் கடந்த பின்னரும்
சிக்காக்கோவில் வெடித்த போராட்டமும்.

வீழ்ந்த போராளிகளும் நினைவு
கூரப்படுகின்றனர்.
உழைக்கும் மக்களும், அடக்குமுறை
விலங்கொடிக்க ஆர்ப்பரிக்கும் தேசிய இனங்களும்,
போராடும் மக்களும் மே தின நாளை தமது
உறுதியை வலுப்படுத்தும் நெருப்பு நாளாக நினைவு
கூருகின்றனர்.

களியாட்டங்களுக்குரிய
தினமல்ல மே தினம்.
கனல்க்கும்
போராட்ட தீப்பிழம்புகள் –
ஒடுக்கு முறையின் தளங்களை
நொறுக்கி உயர்ந்து
உறுதி எடுக்கும் நாள்தான்
மே தின நாள்!




இந்தக் குதிரை
கொள்ளுத் தின்னாது.
பந்தயங்களில் ஓடி
ஜெயித்து பணம் கொட்டும்
குதிரை என்பதால் ராஜ
மரியாதை. நாடில்ல
தின்னக் கொடுத்து
உயர்தர மதுவகையும்
உற்சாகத்துக்கு தந்து
கவனிக்கிறார்கள்
காலம் மாறிப் போச்!




## ராஜ மரியாதை!

## ஐம்பதிலும் பளபளப்பு

அழகாக இருக்க வேண்டும் என்ற ஆர்வம் வளர, அழகுக் கலைகளும், சிகிச்சை முறைகளும் புதிது புதிதாக அறிமுகமாகின்றன.

முதுமையின் காரணமாக முகத்தில் தோன்றும் சுருக்கங்கள் அகற்ற 'செற்றிவேல்' என்னும் புதிய சிகிச்சை முறை மேலைநாடுகளில் அறிமுகமாகியிருக்கிறது.

அந்த சிகிச்சை முறையால் இளமை துள்ளும் முகத் தோற்றம் பெற்றுள்ள பெண்மணிதான் படத்தில் இருக்கிறார். 50 இல் 16இன் பளபளப்பு!







## இளைய இரத்தம்

இந்திய கிரிக்கெட் அணியில் உள்ள இளம் வீரர்களில் ஜடேஜாவும் பிரபலமான பெயர்.

இந்தியாவில் உள்ளூர் போட்டிகளில் ஜடேஜா ரன் குவிக்கும் இயந்திரம்.

ஜடேஜா உள்ளூர் போட்டிகளில் குவித்த ரன்கள் பற்றி கேள்விப்பட்ட இந்திய கிரிக்கெட் குழு அவரை தூக்கிவந்து சர்வதேசியப் போட்டிகளில் குதிக்க வைத்தது.

நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் ஜடேஜா தூள் கிளப்பினார்.

இந்திய கிரிக்கெட் ரசிகர்களும், ரசிகைகளும் அவரை உன்னிப்பாய் நோக்கத் தொடங்க ஜடேஜாவின் புகழ் ஏறியது.

என்றாலும் ஒரு குறை. ஜடேஜாவால் தொடர்ச்சியாக சோபிக்க முடியாமல் இருப்பதால் இடைக்கிடையே ஆடும் வாய்ப்பை பறிகொடுக்கிறார்.

இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான ரஞ்சித் சிங், திலீப்சிங் ஆகியோர் ஜடேஜாவின் குடும்ப உறவினர்கள்தான்.

ஜடேஜாவின் கிரிக்கெட் வாழ்க்கை ஏற்ற இறக்கங்கள் கொண்டது.

உள்ளூர் போட்டிகளில் இரட்டை சதங்கள் (இரண்டு தடவை) போட்டுள்ளார். ரஞ்சி கோப்பை போட்டியில் 199 ரன் குவித்திருந்தார்.

சர்வதேச போட்டிகளிலும் அந்த சாதனைகளைப் போல் ஜடேஜா படைப்பாரா? காலம் பதில் சொல்லும்.